# ஞானச்சுடர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**நிலையஞ்சி நீத்தாருள் எல்லாங் கொலையஞ்சிக்**
**கொல்லாமை சூழ்வான் தலை.**

பொருள் : பிறப்பின் துன்பத்தை அறிந்து கொலைப் பாவத்திற்குப் பயந்து கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன் துறவு பூண்டவர் களுள்ளும் உயர்ந்தவனாவான். (325)

**கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்**
**செல்லா துயிருண்ணுங் கூற்று.**

பொருள் : உயிர்களைக் கொண்டுபோகும் இயமன் கொல்லா விரதத்தைக் கடைப்பிடித்து நடப்பவரின் உயிரைக் கவரமாட்டான்.

(326)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

## சிவசிவ என்னச் சிவகதியாமே

**கலிவிருத்தம்**



தந்தி முகத்தனைச் சங்கரன் மைந்தனைத்
தொந்தி வயிறனைத் தோடணி செவியனை
இந்திர னுக்கரு ளீந்த இறைவனை
மந்திர ரூபனை நான்மற வேனே. 01

ஒருவ னாலே உலக முதித்தது
ஒருவ னாலே உலகம் நிலைத்தது
ஒருவ னாலே உலகம் ஒடுங்கிடும்
ஒருவ னேயென் உயிர்த்துணை யாமே. 02

ஒருவ னேயொரு மூவரு மானான்
ஒருவ னேயெல்லா வுயிர்களு மானான்
ஒருவ னேயெல்லா வுலகமு மானான்
ஒருவ னேயென்னை உய்யவைத் தானே. 03

அண்ட சராசர மவன்வடி வாகும்
அண்ட சராசர மவனே யாகும்
அண்ட சராசரத் ததிசயந் தன்னை
அண்டரு மறியா ததிசயித் தாரே. 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 283



2021 ஆடி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| எல்லாம் நல்லனவே | வி.ரி. வேலாயுதம் | 01 - 02 |
| திருவாசகம் | சு. அருளம்பலவனார் | 03 - 06 |
| ஆகம மரபில் சைவசித்தாந்தம் | செல்வி ச. சரணியா | 07 - 08 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 09 - 11 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 12 - 13 |
| பாராட்டுதலும் நற்குணமே | சி. நற்குணலிங்கம் | 14 - 16 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 17 - 19 |
| வேதாந்த, சித்தாந்த மரபில்... | செல்வி க. பரணிகா | 20 - 22 |
| மனுநீதி, அரசநீதி, தெய்வநீதி... | மூ. சிவலிங்கம் | 23 - 26 |
| தானங்களில் சிறந்தது... | இணையத்திலிருந்து | 27 - 29 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 30 - 31 |
| கலியுகத்தில் பக்தி | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 32 - 34 |
| சங்கரன்பாற் சேர்ந்தேன் | முருகவே பரமநாதன் | 35 - 38 |
| சிவப்பணி செய்பவர்கள்... | பு. கதிரித்தம்பி | 39 - 40 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 41 - 48 |
| உள்ளொன்று வைத்துப்... | இ. ஸ்ரீதரன் | 49 - 50 |
| பேராசிரியர் கலாநிதி... | கௌ. சித்தாந்தன் | 51 - 54 |
| திருக்கயிலாயக் காட்சியை... | வி. செல்வரத்தினம் | 55 - 56 |


**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

*தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406*

*அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்*

Printed & Published By:

*Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.*

Selvasannithi, Thondaimanaru.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதிப் பெருமானே!

நீலக்கடல் போலே மயிலினில்
நிலைகொள் கதிர் போலே ஏறியே
பாலக் கும ராவடி வேலுடன்
வரவேணும் - எங்கள்
பதியாகிய சந்நிதிக் கோயில்நின்
கதியே பெற அன்பர்கள் கூட்டமே
பழகுந் தமிழ் பாடி வருவதை
அறியாயோ.

காலைக்கடன் முடித்தே யவர்களும்
வேலைத் தலம் எதிலும் மேவினும்
கனகா முத்துக் குமரா வென்பதும்
காணாத தேனோ! இந்தக்
காசினிதொழும் திருப்பரங் குன்றிலும்
மேவும் செந்தூர் ஆவினன் குடியிலும்
கதிர் ஏரகம் குன்று தோறாடிடும்
கதிர்காமனே.

மேலும் பழ முதிர்சோ லையிலும்
ஞால மெல்லாம் அர்ச்சித்து ஏத்திட
நின்றே யவர்க் கருளிட காட்சிசெய்
நிமல மூர்த்தியே! நின்னை
நினைப் போடென்றும் நெஞ்சே யுருகிட
வினைப் பேயெல்லாம் அன்றே யகலிட
நிறையத்தமிழ் பாடென் றடியேனை
நெறிப்படுத் தினாய்.

கோல மெல்லாம் மாறிப் போயினும்
கால மெல்லாம் வெறிதே கழியின்உள
கோயில் செல்வச் சந்நிதி யுன்தனை
கோடி யன்பர்கள்
குவலய மெல்லாம் கும்பிட் டேந்திட
நலமிக வென்றும் அன்னம் பாலிக்கும்
கோடி யடியாரின் சுவாமி சந்நிதி
வரவேண்டினேனே.

வை.க. சிற்றம்பலவனார் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

மனிதனின் உலக வாழ்வின் பக்கவேர்களில் ஒன்றாக விளங்குவது நம்பிக்கை ஆகும். ஒருவர் மற்றவர்மீது கொள்ளும் நம்பிக்கை அவர்களை ஏதோ ஒருவகையில் பிணைக்கிறது. அப்பிணைப்பே பின்னர் நட்பாக மலர்கின்றது. அந்நட்பு வளர்வதற்கு நாணயமான நேர்மையான நம்பிக்கை அவசியம்.

ஒருவர்மீது முழுநம்பிக்கை வைத்துவிட்டால் அவனது நாணயத்தையும் விசுவாசத்தையும் சந்தேகிப்பதில்லை. அவன் தனக்கு கேடு விளைவிப்பான் என்று எள்ளளவும் நினைப்பதில்லை. இந்நம்பிக்கைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் நாணயமற்றதாக்கி நம்பியவனுக்கு கெடுதல் செய்வது நம்பிக்கைத் துரோகமே. நண்பன் உதவுவான் நல்லதையே தனக்குச் செய்வான் என்று நம்பியிருப்பவனை ஏமாற்றுவது புத்திசாலித்தனம் அல்ல - அது அவனுக்கு நாம் செய்யும் துரோகமே.

இவ்வாறு துரோகம் செய்பவர்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகவே "நம்ப நட நம்பி நடவாதே" என்று முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். ஒருவன்மீது நம்பிக்கை அதீதமாகி அவ்வாறு தன்னிடம் புகலிடம்பெற்ற, தஞ்சமடைந்த ஒருவனைக் கொல்வது மாபெரும் துரோகச்செயல் ஆகும். அது வீரம் அல்ல, கோழைத்தனமே.

ஒருவன் போர்க்களத்தில் நிராயுதபாணியாக நிற்கும் எதிரியைக் கொல்வது அதர்மம் துரோகம் என்று அறம் கூறுகின்றது. அவ்வாறிருக்கையில் தன்னை நம்பி நாடியவனைக் கொல்வது அதர்மம். துரோகம் மட்டுமன்றி கொடிய சமூகவிரோதக் குற்றமுமாகும்.

"நம்பினவர்களை ஏமாற்றுவதில் சாமர்த்தியம் இல்லை. மடியில் படுத்து உறங்குபவர்களைக் கொல்வதில் வீரம் இல்லை. இவை இரண்டிலும் இருப்பவை துரோகமே" என்று மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு நம்பிக்கைத் துரோகம் இழைப்பவர்கள் மனிதர்களாகக் கணிக்கத் தகுதி இழந்தோராவர். இவ்வாறு அறம் வழுவுவோர் சமூகத்தில் இருந்து தூரத்தே ஒதுக்கப்பட வேண்டியவர்கள்.

ஆகையால் ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நாம் மனித நேயத்தோடு மற்றவர்மீது நம்பிக்கை வைத்து அடுத்தவருக்குத் துரோகம் இழைக்காது நட்புணர்வுடன் அனைவருடனும் உறவுகளைப் பேணி இவ்வுலகில் மனித வாழ்வை வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும் - தாகமுடன் 46

வந்தடியில் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும் - கொந்தவிழ்ந்த 47

வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும் - ஆரமுதம் 48

தேவர்க்கு உதவும் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும் - ஓவாது 49

மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும் - மார்பகத்தில் 50

வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கில் ஒருகரமும் - மொய்த்த 51

சிறுதொடிசேர் கையும்மணி சேர்ந்ததடங் கையும் -
கறுவுசமர் அங்குசம்சேர் கையும் - தெறுபோர் 52

அதிர்கே டகம்சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்கும் கரமும் - முதிராத 53

கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும் - பைம்பொன் 54

புரிநூலும் கண்டிகையும் பூம்பட்டுடையும்
அரைஞாணும் கச்சை அழகும் - திருவரையும் 55

நாதக் கழலும் நருமணிப்பொற் கிண்கிணியும்
பாதத்து அணிந்த பரிபுரமும் - சோதி 56

இளம்பருதி நூறாயிரங்கோடி போல
வளந்தரு தெய்வீக வடிவும் - உளந்தனில்கண்டு 57

ஆதரிப்போர்க்கு ஆருயிராய் அன்பரகத் தாமரையின்
மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே ஓதியஐந்து 58

ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய் ஐந்தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே - தாங்கரிய 59

மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப் - பந்தனையால் 60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**ந. ஜவகர்லால்நேரு**
(லண்டன்)

**K. கனகசபேசன்**
(கனடா)

**செல்வி தம்பு சரோஜா**
(சங்கீத முதன்மை இளை. ஆசிரியர், நெல்லியடி)

**இ. பேரின்பநாயகன்**
(நாவலர் பாலர் பாடசாலை ஸ்தாபகர், சுதுமலை)

**Dr. V. ஸ்ரீஸ்காந்தன்**
(ரஞ்சிதா மெடிக்கல் கிளினிக், சுதுமலை)

**சி. பஞ்சலிங்கம்**
(லிகிதர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)

**வே. பாராளன்**
(தொழில் நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)

**S. தர்மரெத்தினம்**
(அதிபர், சிறுப்பிட்டி)

**ச. நவரத்தினராசவேல்**
(அதிபர், வேல்பதி, புத்தூர்)

**நா. இராசலிங்கம்**
(இளை. அத்தியட்சகர்)

**திருமதி கலாநிதி முரளிதரன்**
(யாழ்ப்பாணம்)

**ந. சேகர்**
(கிராம சேவையாளர், வீரபத்திரர்கோயிலடி, உடுப்பிட்டி)

**கு. ஸ்ரீமுருகமூர்த்தி**
(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)

**சு.பொ. நடராசா**
(அண்ணா தொழிலகம், இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. கந்தசாமி
(இருபாலை வீதி, கோண்டாவில்)
செல்வி இ. வல்லிபுரம் ஆசிரியை
(நவக்கிரி)
செ. ஈஸ்வரன்
(சித்தங்கேணி)
சுப்பிரமணியம் அருளானந்தசிவம்
(அல்லாரைவீதி, மீசாலை கிழக்கு)
பாலசுப்பிரமணியன் ராகுலன்
(யாழ்ப்பாணம்)
ச. இராசரத்தினம்
(நாவலர்வீதி, யாழ்ப்பாணம்)
திருமதி மாலதி இராஜேஸ்வரன்
(உடுப்பிட்டி)
த. திருஞானசம்பந்தர்
(ஏழாலை வடக்கு)
புஸ்பநாதன் பிரதீபன்
(உரும்பராய் வடக்கு)
க. குணசிங்கம்
(சாவகச்சேரி)
இ. சிவஞானம் J.P
(புத்தூர்)
N. குலசேகரம்
(வருணன், அச்சுவேலி)
க.ம. செல்வரெத்தினம்
(நவாலி கிழக்கு, மானிப்பாய்)
சி. தனபாலசிங்கம்
(புலோலி)
ஆ. குலசிங்கம்
(இணுவில்)
சிதம்பரப்பிள்ளை அனுஜா
(அல்வாய்)
செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை
(பொலிகண்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி உ. பேரானந்தம்
(தெல்லிப்பழை)
வி. சிவபாலசிங்கம்
(கரன் பான்சி, சுன்னாகம்)
க. ஸ்ரீஸ்கந்தராசா
(கிராமசேவகர், சிறுப்பிட்டி கிழக்கு)
ந. இராமரூபன்
(நீர்வேலி)
மு. இராஜேந்திரன்
(முருகையா கோவிலடி, புலோலி)
பொன். சற்குணநாதன்
(வேம்பன் வீதி, உரும்பராய்)
சொ. செல்லத்துரை
(பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை)
நா. தெய்வேந்திரம்
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
வி. தவத்துரைராசா
(மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்)
சு. அனுஷியாதேவி
(முருகவாசா, சித்தங்கேணி)
சி. கணேசமூர்த்தி
(அல்வாய்)
தயானந்தன் சுஜந்தன்
(அச்சக வீதி, கொக்குவில்)
உரிமையாளர்
(சுந்தர்சன்ஸ், மானிப்பாய்)
ச. சூரியப்பெருமான்
(ராகுலசூரியன், பருத்தித்துறை)
மா. அருட்செல்வம்
(எழுதுவினைஞர், புலோலி வடமேற்கு)
ச. சிவரூபன்
(சிறுப்பிட்டி)
செல்லையா சர்வேஸ்வரன்
(செல்வறங்கம், இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆ. மகேந்திரலிங்கம்**
(வேம்போலை, இணுவில்)
**உரிமையாளர்**
(நாதன் அன் பிறதேர்ஸ், இணுவில்)
**கணேசலிங்கம் ஞானாமிர்தம்**
(குப்பிளான்)
**செல்வன் சி. கௌதமன் C/O சி. சிவபாலன்**
(யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(ரேவதி நகைமாடம், யாழ்ப்பாணம்)
**செ. வாமதேவன்**
(இணுவில் மேற்கு, இணுவில்)
**V. சேனாதிராசா**
(கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)
**பிறேமதாஸ் சசிகலா**
(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)
**செல்வி தர்மினி ரவிச்சந்திரன்**
(கட்டுடை, மானிப்பாய்)
**க. சிவஞானசுந்தரம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திருமதி பொ. இரத்தினசோதி**
(கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை)
**ச. கிருஷ்ணமூர்த்தி**
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)
**செ. அட்செயலிங்கம்**
(ஆசிரியர், அல்வாய்)
**மூ.சிவலிங்கம்**
(காரைக்கால் வீதி, இணுவில்)
**க. விகர்ணன்**
(குமரகோட்டம், கோண்டாவில்)
**R. பொன்னுராசா**
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)
**S. தர்மலிங்கம்**
(கமலபதி மாதர்சங்க வீதி, சித்தங்கேணி)
**சி. குகநாதன்**
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் நல்லனவே

– திரு. வி.ரி. வேலாயுதம் அவர்கள் –

நாம் பிரம்ம முகூர்த்த வேளையில் காலை எழுந்ததும் ஆண்டவனை மனதில் நினைத்துக்கொண்டு சூரியனை வணங்கி விட்டு, பின் காலைக் கடன்களை முடித்து ஸ்நானம் செய்து பின்னர் நமசிவாய மந்திரத் தைப் பாராயணம் செய்துகொண்டு தியானம் இருந்து எமது நாளாந்த கடமைகளுக்குச் சென்று, திரும்ப வீடுவந்து பூசை முதலியன செய்து இல்லற வாழ்வை நல்லற வாழ்வாக்கி வாழ்ந்து வருதல் எல்லாம் நல்லனவே.

சிவத்தை உணர்ந்தால் என்ன நடக் கும். அதை எம்மால் எடுத்தியம்ப முடியாது. நாம் சொன்னால் அது அறிவாகும். சிவராத் திரியன்று விரதமிருந்து முதுகுத்தண்டை நேராக வைத்து முழு விழிப்புணர்வோடு இருந்தால் அத்தனை பயனும் கிடைக்கும் என்கிறார்கள் யோகிகள். கர்ம வினைகளும் தீரும் என்கிறார்கள். இவ்வாறிருந்து முதுகுத் தண்டை நேராகவைத்து மூச்சை விட்டுவிட்டு இழுக்க கர்மவினை அகலும். நினைத்துப் பார்க்க முடியாத வெறுமைக்குள் நீங்கள் போகமுடியும். இந்த வெளியை நீங்கள் அடைந்தால் உங்கள் கஷ்டம் தீர்ந்துவிடும். இந்த நாளிலேயே ஞானமும் கிடைக்கும். யாது பிரச்சினைகளும் தீர்ந்துவிடும். இதுவும் நமது வாழ்வுக்கு நல்லனவே.

ஒரு பூ மற்றைய பூவைப் பார்த்து கவலைப்படுவதில்லை. என்னுடைய அழகு என்னுடன். உன்னுடைய அழகு உன்னுடன். இதுபோல சமுதாயத்தின் விருப்பத்திற்கேற்ப நான் இருக்க வேண்டுமென்று விரும்பக்கூடாது. உதாரணமாக நான் டாக்டராக, இஞ்சினியராக என நினைக்கலாமா? இதில் தவறில்லை. இதனால் எவ்வளவு கஷ்டம். பகீரதப் பிரயத் தனம் செய்யவேண்டும். இதனால் எமது இயல்பை இழக்கின்றோம். இந்த மாமரம் மாங் காய் காய்க்கும். தேங்காய் காய்க்கமாட்டாது. அவ்வாறு காய்க்கச் செய்யில் விஞ்ஞான உலகில் மிக அரிதிலும் அரிதே. இது நமக்கு தேவைதானா. டாக்டர் மகன் டாக்டராவது சுலபம். வாத்தியார் மகன் வாத்தியாராவது சுலபம். விவசாயி மகன் விவசாயியாவார். அதை வளப்படுத்தி விஸ்திகரித்து மெருகூட்டி நவீனமயப்படுத்த வேண்டும். வெளிநாடுகளில் விவசாயி ஹெலி மற்றும் பாரிய இயந்திரங் கள் வைத்தே தொழில் நடாத்துகிறார்கள். மீன் பிடிப்பவர் மீன்பிடித் தொழிலை விஸ் தரிக்க வேண்டும். தந்தை இளையராஜா இசையில் வல்லவர். மகனும் அதைப் பின் பற்றுவதில் தவறில்லையே. இது கைகண்ட பயிற்சியே. இதற்கு பேராசையை அகற்றி பொறுமையை கைக்கொள்ளவும். உரம் போட்டு மரம் வளர்த்து தோப்பாக்கி வளர்க்க வேண்டும்.

சமுதாயம் பின்னாடி போவதால் உனது இயல்புத் தன்மையை நீ இழந்து விடுகின்றாய். சமுதாயத்துக்காக வாழாது உனக்காக வாழப்பழக வேண்டும். எனது சக்தி என்னை வளப்படுத்தும். சமுதாயத்தைப் பார்த்து ஏங்காதே. சமுதாயம் வீழ்ந்தாலும் ஏசும், தாழ்ந் தாலும் ஏசும். கண்ணதாசன் கூறுகிறார். இதை மனதில் வைக்காது உமது விடாமுயற்சி யுடன் வாழ்ந்தால் எல்லாம் நல்லனவையே ஆகும்.

*எதையும் எதிர்கொள்வேன் என்ற மனநிலை மட்டுமே நம்பிக்கையைக் கொடுக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு இருளை நீக்குபவர். அகத்திலுள்ள இருளை நீக்கி அறிவு வெளிச்சத்தை தருபவர். ஒரு பாதசாரிக்கு அம்புக்குறி வழி காட்டி போன்றவர். விதிப்பயனை அசைக்க எவராலும் முடியாது. ஆனால் இதை மாற்றும் சக்தி குருவுக்குண்டு. குரு இல்லாத வித்தை பாழ். குரு அருள் இருந்தால் திருஅருள் பெற முடியும். இது ஏகலைவனுக்குப் பொருந்தும். நாட்டை ஆளும் இராஜாவுக்கு ராஜகுரு குரு ஆவார். இராம அவதாரத்தில் வசிட்டர் குரு ஆனார். கிருஷ்ணபிரான் சாந்தீபினி ரிஷியிடம் உபதேசம் பெற்றார். நாமும் குருவை வழிபட்டு, குரு உபதேசம் கேட்பது, அந்தணர்க்கு உதவுவது, அவர்களிடம் ஆலோசனை கேட்டு நடப்பதால் வாழ்வு ஒளிவிளக்காகும். இவை எல்லாம் நல்லனவே.

பழைய ஏற்பாட்டில் அத்தியாயம் ஒன்றில் கடவுள் வாக்களிக்கிறார். பூலோகத்தில் மனித குலத்திற்குச் சகல கீரைவகைகள், தானியங்கள் கொடுக்கின்றேன். இதுதான் அவனுடைய மாமிசம். மரக்கறி உணவுதான் மனிதனுக்கு உகந்தது என்று கடவுள் கட்டளை அளித்தார். இயேசு மரக்கறி உணவு உண்பவரே. இதில் மிருகங்களைச் சாப்பிடுபவர்கள் நரகத்திற்குப் போவார்கள் என்று இயேசு எச்சரிக்கின்றார். மேலும் இயற்கையுடன் ஜீவிக்க வேண்டுமென்றும், பூமி ஒரு இயற்கைத் தாய் என்றும் விபரிக்கின்றார்.

மேலும், மோசஸ் சில இறைச்சி இனங்களைச் சாப்பிடலாம் என்று கூறுகிறாரே என்று ஒரு சிஷ்யன் யேசுவைக் கேட்டான். யேசு அதற்கு, மோசஸ் காலத்தில் மக்கள் மிகக் கொடூரமான குணமுடையவர்களாக இருந்தனர். அவர்கள் தாவர உணவை முழுக்கவும் கடைப்பிடிக்கமாட்டார்கள். ஆதலால், சில இறைச்சி வகைகளை மட்டும் சாப்பிடலாம் என்று மோசஸ் கூறினார். எனவே இறைச்சி வகைகளை யேசு கூறியதுபோல் விரும்பாமை யாவும் நல்லனவையேயாகும்.

மரம், செடி, கொடிகள் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டே தனக்குத் தேவையான நீர், உணவு சகலதையும் பெற்றுக்கொண்டு மக்களுக்கு விதை, கிழங்கு, காய், கனியும் கொடுத்தும், இவர் நம்மவர் பிறர் என்று பாராது நிழலும் கொடுத்து ஈற்றில் தன்னையும் கொடுத்து உதவுகிறது. இது போல ஜீவராசிகளும் தங்கள் தங்கள் இடங்களிலும் நீரிலும், நிலத்திலும் தமது உணவுகளைப் பெற்றுக்கொள்ளுகிறது. இவை யாவும் இயற்கையின் நியதியேயாகும்.

ஆனால் மனிதனோ பேசத்தெரிந்த ஆறாம் அறிவினால் உலகத்தைச் சுருட்டி தனக்குள் அடக்கி ஒளியாண்டு தூரம் பல சென்று பொருள், பணம் ஈட்டி வாழப் பழகிக் கொண்டான். ஆனாலும் அவனால் மன நிம்மதியாக இருக்க முடியவில்லையே. பேராசை மிகுதியால் மனிதனை மனிதன் கொன்று குவிக்காமல் அகிம்சை வழியில் வாழப் பழகவில்லையே. 1ஆம், 2ஆம் மற்றைய போர்கள் ஏன் ஏற்படுகின்றன. அதிக விளைச்சல் மீதியால் உணவைக் கடலில் கொட்டப்பழகியவன் சத்துணவின்மையால் நோயினால் வாடும் பல கோடி குழந்தைகளையும், அவர்களது பெற்றோர்களையும், பட்டினியால் வாடும் உலக ஏழைகளையும் காப்பாற்றும் அறிவை அவனால் அறியமுடியவில்லை. மரங்கள், மிருகங்கள், பட்சிகளுக்கிருக்கின்ற அறிவு மனிதனுக்கு கிடைக்கவில்லையே.

இக் கருத்துக்கள் யாவற்றையும் நாம் நல்லனவாக எடுப்போமேயானால் நாட்டில் குழப்பம், சண்டை சச்சரவுகளே இருக்காது. அமைதியான உலகம் அற்புதமான மக்கள் கொண்ட புது உலகம் உதயமாகும் என்பதில் ஐயமில்லை. எல்லாம் நல்லனவே.

*ஆயிரம் பேரிடம் யோசனைகேள். ஆனால் முடிவை நீமட்டும் எடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

(தொடர்ச்சி...

## நீத்தல் விண்ணப்பம்

### பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

135. சச்சைய னேமிக்க தண்புனல் விண்கால் நிலம்நெருப்பாம்
விச்சைய னேவிட் டிடுதிகண் டாய்வெளி யாய்கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய னேயொண் படவரவக்
கச்சைய னேகடந் தாய்தடந் தாள அடற்கரியே.

**ப-ரை:**

சச்சையனே- ஆராய்ந்தறியப்படுபவனே, மிக்க தண் புனல் விண் கால்நிலம் நெருப்பாம் விச்சையனே- மிகுந்த குளிர்ந்த நீரும் வானும் காற்றும் நிலமும் நெருப்புமாகிய ஐம்பூதங்களிடத்தும் வியாபித்து நின்ற வியக்கத்தக்கவனே, வெளியாய் கரியாய் பச்சையனே செய்ய மேனியனே- வெண்ணிறமுடையவனே, கருநிறமுடையவனே, பச்சை நிறமுடையவனே, செந்நிறமுடைய திருமேனியையுடையவனே, ஒண் பட அரவ கச்சையனே- ஒளி பொருந்திய படத்தையுடைய பாம்பாகிய கச்சையையுடையவனே, தட தாள அடல் கரிகடந்தாய்- பெரிய கால்களையுடைய வலிய கயாசுரன் என்னும் யானையைக் கொன்று வெற்றி கொண்டவனே, விட்டிடுதி கண்டாய்- என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

சச்சையனே, புனல் விண் கால் நிலம் நெருப்பாம் விச்சையனே, வெண்மை கருமை பசுமை செம்மை ஆகிய நிறங்களையுடைய திருமேனியையுடையவனே, அரவக் கச்சையனே, கயாசுரன் என்னும் யானையைக் கொன்று வெற்றி கொண்டவனே, என்னைக் கைவிடுகின் றனையோ கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

மிக்க தண்புனல் என மிகுதியும் தண்மையுமாகிய நீரின் பொதுக் குணமும் சிறப்புக் குணமும் கூறப்பட்டமையால் இவ்வாறே விண் கால் நிலம் நெருப்புக்களிலும் அவ்வவற்றின் பொதுக்குணம் சிறப்புக் குணங்களை விரித்துக்கொள்க. விண் கால் நெருப்பு புனல் நிலம் எனத் தோற்றமுறைபற்றியாவது நிலம் புனல் நெருப்பு கால் விண் என ஒடுக்கமுறை பற்றியாவது கூறாது. புனல் விண் கால் நிலம் நெருப்பு என முறை பிறழக் கூறினார். செய்யுளாதலின், இறைவன் ஐம்பூதங்களாயும் உள்ளான் என்பது

"அலைகின்ற நீர் நிலம் காற்று அனல் அம்பரமாகி நின்றீர்"

நாவு 95:3.

"தோற்றுந் தீயொடு நீர் நிலந் தூவெளி காற்றுமாகி நின்றான்"

நாவு 182:6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மண்ணவன் காண் தீயவன்காண் நீரானான் காண் வந்தலைக்கும்
மாருதன் காண் மழை மேகஞ்சேர், விண்ணவன் காண்" நாவு 265:1.
"மண் இலங்குநீர் அனல் கால் வானுமாகி மற்றவற்றின்
குணமெல்லாமாய் நின்றாரும்" நாவு 272:5.
"நிலனாகி நெருப்பாய் நீராய் நிறைகாலாய் இவையிற்றின் நியமாகி"
நாவு 239:6.

எனத் தேவாரத்து வருவனவற்றாலுமறிக. ஒருவனே பல்வேறு இயல்புகளையுடையனாதல் வியப்புக்குரியதாகலின் விச்சையனே என்றார். வித்தை- விச்சை என்றாயிற்று.

இறைவனுடைய ஈசானம் முதலிய திருமுகங்கள் ஐந்தனுள் ஈசானம் பசுமையும் வெண்மையும், தற்புருஷம் பொன்மையும், அகோரம் கருமையும், வாமதேவம் செம்மையும், சத்தியோசாதம் நல்ல வெண்மையுமுடைமையின், "வெளியாய் கரியாய் பச்சையனே செய்யமேனியனே" என்றார். ஈண்டுக்கூறிய நான்கு உபலட்சணத்தில் பொன்மையனே என்பதை யும் சேர்த்துக்கொள்க. இனி, "புனல் விண் கால் நில நெருப்பாம் விச்சையனே" என்றமையால் புனலுக்கு வெண்மையும், விண்ணுக்குப் பசுமையும், காலுக்குக் கருமையும், நிலத்திற்குப் பொன்மையும், நெருப்பிற்குச் செம்மையும் கொள்ளப்படுதல்,

"மண் புனல் அனல் கால் வான்.... வண் பொன்மை வெண்மை
செம்மை கறுப்பொடு தூமவன்னம்" சூத். 2 செய். 67

எனச் சிவஞானசித்தியாரிலும்,

"பொன் பார் புனல் வெண்மை பொங்கும் அனல் சிவப்பு
வன் கால் கருமை வளர் வான் தூமம் என்பர்" (5)

என உண்மை விளக்கத்தும் வருவனவற்றாலறியப்படுதலின் இப்பூதங்களிற் கலந்து நிற்கும் இறைவனுக்கு ஐந்து நிறங்களும் அமையுமாறு காண்க. நிறங்களோர். ஐந்துடையாய் (சிவபுராணம் 49) என அடிகள் அருளியவாறுங் காண்க.

இனி, இறைவன் திருவடி ஞானமுடையார்க்கு வெளியாயும் குறையுணர்வாகிய பசு அறிவும் பாச அறிவும் உடையார்க்கு வெளிப்படாமல் இருளாயுமிருத்தலின் "வெளியாய் கரியாய்" என்றார் எனக் கோடலுமொன்று. "ஊனக் கண் பாசம் உணராப்பதியை ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி" (சூத் 9) எனச் சிவஞான போதத்து வருதலுங் காண்க. பாதியாம் உமைதன்னோடும் பாகமாய் நின்ற இறைவனது இடப்பாகம் பச்சை நிறமுடையவனாகவும் வலப் பாகம் செம்மை நிறமுடையவனாகவும் விளங்குதலின் "பச்சையனே செய்ய மேனியனே" என்றார் எனலுமாம். "பச்சை நிறமுடையார் பாலர் சாலப் பழையர்" (நாவு 230:7) எனவும், "அயன்மாற்கரியொண்ணாச் செய்ய மேனியனே" (செத்திலாப் 1) எனவும் வருவன காண்க.

ஒண்பட அரவு என்புழி ஒண்மை படத்தின்கணுள்ள ஒளிபொருந்திய மணிக்கு ஆகு பெயர் எனக் கொள்ளினுமமையும். படஅரவு- நாகம். கச்சை- அரையில் அணியப்படும் வடம். அரவைக் கச்சாக அணிந்தமை "புற்றரவக் கச்சார்த்த புனிதா", "பையரவக் கச்சையாய்" (நாவு 244:7; 312:3) எனத் தேவாரத்து வருதலாலுமறிக. இறைவன் அரவைக் கச்சாக அசைத்தமை குண்டலினி என்னும் சுத்தமாயைத் தன்னுள் அடக்கியிருத்தலைப் புலப்படுத்துவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடத்தல்- வெல்லுதல். கடந்தாய் என்பது முன்னிலை வினைப்பெயர் விளியேற்று நின்றது. தடந்தாள அடற்கரி என்றது கஜன் என்னும் யானை வடிவையுடைய அசுரனை- தாள என்பதில் உடைமைப் பொருளில் வந்த அகரவுருபு ஒருமைக்கண் வந்தது. அடற்கரி கடந்தாய் என்பது இறைவனின் மறக்கருணையைப் புலப்படுத்தியது.

இதன்கண், விட்டிடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடா தொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 31.

**136. அடற்கரி போலைம் புலன்களுக் கஞ்சி யழிந்தவென்னை**
**விடற்கரி யாய்விட் டிடுதிகண் டாய்விழுத் தொண்டர்க் கல்லால்**
**தொடற்கரி யாய்சுடர் மாமணி யேசுடு தீச்சுழலக்**
**கடற்கரி தாயெழு நஞ்சமு தாக்குங் கறைக்கண்டனே.**

**ப-ரை:**

விழு தொண்டர்க்கு அல்லால் தொடற்கு அரியாய்- சிறந்த மெய்யடியார்க்கன்றிப் பிறர்க்குப் பற்றுதற்கு அரியவனே, சுடர் மாமணியே- ஒளி விளங்கும் பெரிய மாணிக்கமே, சுடு தீ சுழல- சுடுமியல் பினையுடைய நெருப்பும் தன்னைக் கண்டு அஞ்சிச் சுழலும்படி, கடல் கரிதாய் எழு நஞ்சு அமுது ஆக்கும் கறை கண்டனே- திருப்பாற் கடலின் கண் கரிய நிறமுடைத்தாய் எழுந்த ஆலகால விடத்தை உணவாகக் கொண்டு மிடற்றில் தங்கச் செய்த அதனால் நஞ்சின் கறுப்புப் பொருந்திய திருமிடற்றையுடையவனே, அடல் கரிபோல் ஐம்புலன்களுக்கு அஞ்சி அழிந்த என்னை- கொல்லுதலையுடைய யானையைப் போன்ற ஐம்புலன்களுக்கும் அச்சமடைந்து நிலைகலங்கிய அடியேனை, விடற்கு அரியாய்- விட்டு நீங்காதிருக்க வேண்டியவனே, என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

விழுத்தொண்டர்க்கல்லால் பிறர்க்குப் பற்றுதற்கு அரியவனே, சுடர் மாமணியே, நஞ்சு அமுதாக்கும் கறைக்கண்டனே, வலிய யானை போன்ற ஐம்புலன்களுக்கு அஞ்சி மனமழிந்த என்னை விடற்கரியாய், கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

அடற்கரிய- கொல்லுதலையுடைய கரி, அடலேறு- கொல்லுதலையுடைய வேறு (கலி 102:31) என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமையுங் காண்க. அடல்- வருத்துதலுமாம். கரிபோல் புலன்- யானையைப் போன்ற ஐம் புலன்கள். "வருங்கை யானை மதகளிறஞ்சு" (நாவு 159:8) என்றார் தேவாரத்தும். ஈண்டு புலன் என்றது ஐம்புலன்களை. போல் என்னும் உவமவுருபு இடைச்சொல் போன்ற எனப் பெயரெச்சமாகி ஈறுகெட்டுப் பகுதி மாத்திரையாய் வினைத்தொகையாய் நின்றது. விடற் கருமை- விட்டு நீங்கமாட்டாமை. அதுபற்றி விடற்கரியாய் என்பதற்கு விட்டுநீங்காதிருக்க வேண்டியவனே எனப் பொருளுரைக்கப்பட்டது.

விழுத்தொண்டர் என்றது ஈண்டு அணுக்கண் தொண்டரை. தொடுதல்- மனத்தினால் அணுதல். அரியாய் என்றது விழுத் தொண்டர்க்கன்றிப் பிறர்க்கு அணுகற்கரியாய் என்றவாறு. "நண்ணல் அரியாய் போற்றி", "சார்தற்கரியானை" (தே. நாவு 270:10; 276:1) என்னும் அருள்வாக்குகள் ஓர்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுதீச் சுழல எழுநஞ்சு என்றது சுடுமியல்பினையுடைய நெருப்பும் தன் வெம்மைக் காற்றாது சுழல கடலின் கண் எழுந்த நஞ்சு என்றவாறு. இதனால் நஞ்சுவேகங் கூறப்பட்டது.

"வரைதிரிதர அரவக டழலெழவரு நுரைதரு கடல்விடம்" ஞான 125:3.

"கனத்தார் திரைமாண் டழற்கான்ற நஞ்சு" ஞான 155:10.

"கடல் கடைந்திடக் கனன்றெழுந்த விடம்" ஞான 229:10.

எனத் தேவாரத்தும் வருவன காண்க. இனி, தன் வேகம் எண் திசையையும் சுடுகின்ற தீயாகச் சுழலும் வண்ணம் எழுந்த நஞ்சு எனினுமாம்.

"திருநெடுமால் நிறத்தை யடுவான் விசும்பு சுடுவான் எழுந்து விசை போய்ப்பெருகிட", "அண்டவர்கள் கடல் கடைய அதனுள் தோன்றி அதிர்ந்தெழுந்த ஆலாலம் வேலை ஞாலம், எண்டிசையும் சுடுகின்றவாற்றை" (தே. நாவு 14:1; 296:8) என வருவன காண்க. கடல் எழு, கரிதாய் எழு எனத் தனித்தனி இயையும். கடற்கண் எழு என ஏழாவது விரிக்க. கரிதாய் எழுவிடம்- கரிய நிறமுடைத்தாய் எழுந்தவிடம். "வானவர்கடையக் கரிய நஞ்சது தோன்ற" (தே. ஞான 231:6) என வருதல் காண்க. அமுதாக்கல்- உணவாகக் கொள்ளல். "கனை கடற் செய்த நஞ்சுண்டு" "ஓங்குமொரு விடமுண்டு அம்பலத் தும்பருய்யவன்று தாங்கு மொருவன்", விண்ணோர் குழு வினையுய்ய நஞ்சுண்டு" (141;158;229) எனத் திருக்கோவையாரில் வருவன காண்க. கறை- கறுப்பு. உண்ட அக்கரிய நஞ்சினைக் கழுத்தின் கண் அடக்கிக்கொண்டு அந்நஞ்சின் கருமை புறத்தே தோன்றுமாறு செய்தமையின், "கண்ணகத்தான் மனத்தான் சென்னியானெங் கறைக்கண்டேன்" (நாவு 9:9; 112:6) எனத் தேவாரத்தும் வருவன காண்க.

இதன் கண், "ஐம்புலன்களுக்கஞ்சி யழிந்தவென்னை" விட்டிடுதி கண்டாய் என்றமையால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 32.

(தொடரும்...

நாமெல்லாம் என்ன வேலை செய்கிறோம் என்பது முக்கியமல்ல. எவ்வாறு செய்கிறோம் என்பதுதான் முக்கியம். செய்யும் தொழிலில் பக்தி, பொறுப்பு, இலக்கை எட்டுவதில் ஆர்வம், சாதனைகளின் மூலம் நாங்கள் அடையும் திருப்தி போன்ற உயரிய உணர்வுகள் யாவும் நமது உள்ளிருந்தே எழும் தூண்டுகோல்களாகும். இத் தூண்டுகோல் மூலமாக மற்றவரையும் ஊக்குவித்து அதன்மூலம் நாம் முன்னேறு வதுடன் அவர்களையும் பயனடையச் செய்வதுதான் வெற்றியின் சிறப்பு.

இதை எப்படிச் செய்வது? மற்றவர்களுக்கும் மதிப்பளியுங்கள். அவர்களை உங்களிடத்தில் வேலை பார்ப்பவராகவோ அல்லது உங்கள் கூடவோ வேலை பார்க்கும் ஒரு தொழிலாளியாகவோ மட்டுமல்லாமல் ஒரு தனிமனிதன் என்ற முறையிலும் அவர்கள்மேல் அக்கறை செலுத்துங்கள். அவர்கள் நல்ல வேலை செய்யும்போது பொறாமைப்படாமல் பாராட்டி ஊக்குவியுங்கள். தவறு செய்தால் அதைத் திருத்தி நம்பிக்கை ஊட்டுங்கள். திறமையுடன் பணியாற்றி முன்னேற அனைவரும் ஒத்துழையுங்கள். வெற்றி பெற்றவருக்கு உரிய உயர்வையும் பாராட்டையும் அளிப்பதில் வருத்தம் கொள்ளாதீர்கள். ஊக்கத்துடன் செயற்படும் ஒரு குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும், ஒருவருக்கொருவர் உதவும் மிகப்பெரிய தூண்டுகோலாக இருங்கள்.

*சரியான வாய்ப்பு வந்தால் தெளிவாகச் சிந்தித்துச் செயலாற்றுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகம மரபில் சைவசித்தாந்தம்

– செல்வி ச. சரணியா அவர்கள் –

"சொற்பத வேவித் துரிசற்று மேலான
நற்பதம் கண்டுனோர் சைவசித்தாந்தரே"

என்ற திருமூலரின் செய்யுளில் "சைவசித்தாந்தம்" என்ற சொல்லாடல் தோற்றம் பெற்றது. இத்தகைய சொல்லில் இடம்பெறும் சைவமும், சித்தாந்தமும் முறையே சமயமும், மெய்யியலாகவும் விளங்குகின்றது. சைவசித்தாந்தங்கள் பதினான்கும் மெய்கண்ட சாஸ்திரங்கள் என்று சிறப்புப் பெயரைக் கொண்டது. இது வேதத்தை பொதுப் பிரமாணமாவும் ஆகமத்தை சிறப்புப் பிரமாணமாகக் கொண்டமைந்தது. இதற்குச் சான்றாக

"வேதம் பசு மெய்யாகமம் நால்வர்
ஓதும் தமிழ் அதனுள்ளுறு நெய் - போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள் வெண்ணெய்
மெய்கண்டான் செய்யதமிழ் நூலின் திறம்" என்றது.

மேலும் ஆகமத்தின் சாரமே சைவசித்தாந்தம் என்பதனை ஆதாரப்படுத்தும் முகமாக திரு மு. ஞானப்பிரகாசரின் செய்யுளடி அமைகிறது. இதனால் சைவசித்தாந்த உணர்ச்சி சைவாகம அறிவின்றி முற்றுப்பெறுவதில்லை என்பது புரிகிறது.

மேலும் ஆகமத்தில் காணப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்ற நாற்பாதங்களில் ஞான பாதத்தை பெரும் பகுதியாக சைவசித்தாந்தம் எடுத்துக் காட்டுகின்றது. பரஞ்சோதி முனிவர் ஆகமத்தின் ஞானபாத பொருளை மெய்கண்டதேவருக்கு உபதேசித்தார். இதனை துணையாகக் கொண்டு சிவஞானத்தை தமிழிலே ஆக்கினார்.

இதனைத் தொடர்ந்து மெய்கண்டார் தமது சீடராகிய அருணந்தி சிவாச்சாரியாரிடம் சிவஞான போதத்தை விளக்கிக் கூற, மேலும் தேவையான விஷயங்களை ஆகமத்தில் இருந்து திரட்டி இவர் சிவஞானசித்தியார் எனும் சைவசித்தாந்த நூலை ஆற்றினார். இதனை,

"தீதில் பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம் பிறநூல்
திகழ் பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்தமாகும்".

மேலும் ஆகமத்தில் கூறிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றை உமாபதி சிவாச்சாரியார் தனது சைவசித்தாந்தமான சிவப்பிரகாசத்தில் கூறவிழைகிறார் இதனை,

"பெருநூல் சொன்ன அறத்தினால்
விளைவதாய்..."

என்று மொழிந்தார். இதில் "பெருநூல் சொன்ன அறம்" என்று ஆகமத்தைச் சிறப்பிக்கின்றார்.

மேலும் ஆகமத்திலுள்ள ஞானபாதம் கூறும் தன்மையால் சித்தாந்தம் "முடிந்த முடிவு" "நிறுவப்பட்ட உண்மை" என்று கூறப்படுகின்றது. மேலும் இதனை, "வேதத்தின் அந்தமும் மிக்க சித்தாந்தமும்...." என்ற செய்யுள் கூறவிழைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஆகமத்தை சாரமாகவும் சிறப்புப் பொருளாகவும் கொண்டு பன்னிரு திருமுறைகளும் விளங்கலாயின. இதனுள் திருமூலர் தனது திருமந்திரத்தை காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், யாமளம், காலாந்திரம், சுப்ரபேதம், மகுடாகமம் ஆகிய ஒன்பது ஆகமத்தின் சாரமாகவே ஆக்கியுள்ளார். இதனை,

"அந்திமதிப்புனன் அரனடி நாள்தோறும்
சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே"

இவற்றோடு தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, வழி ஆகமத்தின் மரபினை காணக்கூடியதாக இருக்கின்றன. இதனை "ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க..." என்றுரைத்தார் மாணிக்கவாசகர்.

இவ்வாறு ஆகமம் பெற்ற செல்வாக்கு மற்றும் மரபு எடுத்துக்காட்டப்படுகிறது. இவ்வாறு ஆகமமானது சிவபிரானால் தோற்றம்பெற்ற வரலாற்றைக் கொண்டது. அத்தோடு குறித்த காலத்தை நிர்ணயிக்க முடியாத தோற்றச் சிறப்பையும் கொண்டமைந்தது. இத்தகைய சிவாகமமானது பிற்பட்ட தோத்திர சாஸ்திரங்களுக்கு சாரமாகவும் உறுதுணையாகவும் கொண்டமைந்தது என்பதோடு மரபுரீதியான சைவசமய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளது என்பதுவும் ஆகமத்திற்கு சாலப்பொருந்தும் பெருமைகளில் ஒன்று.

"ஆகமம் சொன்ன அடைவிலே ஆனந்தயோகம்"

-உண்மை விளக்கம்.

திருவொற்றியூரிலே வாழ்ந்த சித்தர் ஒருவர் ஒவ்வொரு நாளும் தனது வீட்டுத் திண்ணையிலே அமர்ந்திருந்து வீதியில் செல்பவர்களைப் பார்த்து "இதோ பச்சோந்தி போகிறது, பச்சோந்தி போகிறது" என்றெல்லாம் கூறுவார். (பச்சோந்தி இடத்துக்கிடம் தனது நிறத்தை மாற்றக்கூடியது.)

ஒருநாள் வள்ளலார் வருவதைப் பார்த்ததும் "இதோ ஒரு மனிதர் போகிறார்" என்றார். இதைப் பக்கத்திலிருந்து பார்த்த ஒருவர் விபரம் கேட்டபோது, "நான் வெளித் தோற்றத்தை வைத்து மனிதர்களை எடைபோடுவதில்லை. இந்தப் பூவுலகில் மாந்தரைத் தவிர வேறு எந்த உயிரினமும் தனது இயல்பை அடிக்கடி மாற்றிக் கொள்வதே இல்லை. தேளிடம் பாம்பின் தன்மை இல்லை. புலியிடம் நரியின் தந்திரம் இல்லை. மனிதர்கள் மட்டுமே அடிக்கடி தங்களின் இயல்பிலிருந்து மாறுபடுகின்றனர். மனிதனை மனிதனாகக் காண்பது அரிதாகிவிட்டது. மனிதர்கள் எப்பொழுதும் மானுடத்துக்குரிய அன்புகொண்டு வாழவேண்டும்" என்றார்.

பிறருக்குத் துன்பம் கொடுத்து அதில் இன்பம் காண்பது மிருக இயல்பு படைத்தவர்களின் குணம். பிறருக்குத் துன்பம் கொடுக்காமல் தனக்கு இன்பம் தேடுவது நாகரிகப் பண்பாடு. பிறருக்கு இன்பம் கொடுத்து தானும் இன்பம் அடைவது தெய்வீகம். நாம் துன்பமுற்றாலும் பிறருடைய துன்பங்களை நீக்கி அவர்களுக்கு இன்பம் தருவது ஆன்மிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளையாடற் புராண வசனம்

(முப்பத்தொன்பதாவது)

## மாமனாக வந்து வழக்குரைத்த படலம்

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

மதுரைத் திருநகரத்தில், வைசியர் குலத்திலே தனபதி எனப் பெயர் கொண்ட ஒருவன் இருந்தான். அவன் மனைவி பெயர் சுசீலை. அவ்விருவரும் நெடுங்காலம் புத்திர பாக்கியம் இல்லாமையால் வருத்தமுறும் பொழுது, தனபதி தன் மருமகனையே தனக் குப் புத்திரனாகக் கொண்டு, மனையாள் கைக் கொடுக்க, அவள் தொழுது வாங்கி அன்போடு வளர்த்தாள். தனபதி தன் தங்கை வருந்திப்பெற்ற பிள்ளையைத் தனக்குத் தந்த நன்றியைப் பாராட்டாது, தன் மனைவி மேல் வைத்த ஆசை மயக்கத்தினாலே, அத் தங்கையோடு நித்தமும் தீராச் சண்டை இட்டுக்கொண்டு வந்தான். ஒரு நாள் இளை யாள் கோபித்து, "உனக்குப் பெருமிதம் ஏன்? நீ பிள்ளைப் பேறற்ற பாவி நீ என் அருமைப் பிள்ளையினாலன்றோ இருமைப் பயனையும் அடைவாய்" என்றாள். தனபதி அதுகேட்டு, மிக நாணி, "மேலைக்காயினும் பிள்ளைப் பேற்றைத் தரவல்ல தவத்தைச் செய்ய வேண்டும்" என்று துணிந்து, தன் செல்வமெல்லாவற்றையும் மருமகனுக்கே ஆக்கிவிட்டு, மனையாளோடு தவஞ் செய்யப் போயினான்.

பின்பு, தனபதி வரவு தாழ்த்தமை யால், அவன் மருமகனுக்குக் கொடுத்த வீடு, விளைநிலம், ஆடை, ஆபரணம் திர வியம் பசுக்கள் முதலிய செல்வங்கள் எல்லாவற்றையும் தாயத்தார்கள் வல்வழக்குப் பேசிக் கவர்ந்துகொண்டார்கள். அதனாலே, தனபதியுடைய தங்கை, தன் புதல்வனொடு தளர்வடைந்து, "சார்பில்லாதவர்களெல்லாருக் கும் ஓர் களைகண்ணாயுள்ளவர் சோம சுந்தரக்கடவுளே; ஆதலால் அவரே எமக்குப் புகலிடம்" என்று துணிந்துகொண்டு, திருக் கோயிலையடைந்து, சோமசுந்தரக் கட வுளை வணங்கி, "எல்லாருக்குந் தந்தையுந் தாயுமாகிய சுவாமி நீரே அடியேங்களுக்குத் தந்தையும் தாயும். அடியேனுடைய தமை யன், தனக்குப் புதல்வன் இல்லாமையால், அடியேனுடைய இந்தப் புதல்வனையே தனக்குப் புதல்வனாகக் கொண்டு, தன் செல்வமெல்லாவற்றையும் இவனுக்கே கொடுத்துவிட்டு, அன்றே போயினான். பின்பு தாயத்தார்கள் அவைகளெல்லாவற்றையும் வலியினாற் கவர்ந்து கொண்டார்கள். நான் ஒருத்தி; ஒருத்திக்கு இவ்வொரு மகனே உள்ளவன். இவனும் அறிவிலாச் சிறுவன். அடியேங்களுக்கு வேறு துணையில்லை. அருட் பெருங்கடலே! எங்கும் நிறைந்திருக் கின்ற நீர் இவையெல்லாம் அறியீரோ" என்று விண்ணப்பஞ் செய்து, பூமியில் விழுந்து, சிவபெருமானது திருவருளினாலே சிறிது நித்திரையடைந்தாள்.

அப்பொழுது சிவபெருமான், அவளுக் குச் சொப்பனத்திலே ஒரு பிராமணராய்த் தோன்றி, "கேளாய், பெண்ணே! விடிந்தபின், தாயத்தார்களை அரசனாணையினாலே தரும சபையில் வருவித்து, மறித்துக்கொண்டிரு; நாம் வந்து வழக்குத் தீர்த்துத்தருவேம், போ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றருளிச் செய்தார். உடனே தனபதி தங்கை விழித்தெழுந்து, வியந்து, "யாரும் இல்லாதவருக்குத் தெய்வந்துணையென்பது அறிந்தேன்" என்று சிவபெருமானை வணங்கிக்கொண்டு, மகனோடு வீட்டிற்குச் சென்றாள். சென்றவள் விடிந்தபின் எழுந்து, திருக் கோயில் வாயிலில் வந்து, சிவபெருமானை வணங்கிக்கொண்டு, தாயத்தார்களுடைய வீட்டுக்குப் போய்ப், பலருங் கேட்க அவர் களைப் பார்த்து "மடைப் பள்ளியிலே நெருப் பிடா தொழிமின்கள். வேறெங்கும் ஓரடியும் எடுத்துவையாது ஒழிமின்கள். பொய் வழக்கால் வென்று போக விடேன். பலருங் கேட்க அரசாணையிட்டேன். தரும சபைக்கு வந்து, பெரியோர்கள் பண்ணிய தீர்ப்பைக் கேட்டு எங்கள் உரிமைப் பொரு ளைத் தந்துவிட்டுப், போங்கள்" என்று சொல்லி மறித்தாள். மறித்தலும், தாயத்தார் கள் அவளை வைது, தள்ளியடித்தார்கள். அவள், மகனுடனே "முறையோ! முறையோ!" என்று சொல்லிக் கொண்டு, தருமசபையை அடைந்து, சபையாருக்குத் தன் வழக்கைச் சொன்னாள். அதுகேட்ட சபையார் ஏவலாளர் களை விடுப்பத், தனபதி தங்கை அவர் களோடு போய்த், தாயத்தாரை மறித்துச், சபையிற் கூட்டி வந்தாள்.

அப்பொழுது சிவபெருமான், தனபதி போலத் திருவுருக்கொண்டு, திருச் செவி களிலே இரத்தின குண்டலங்களும், திருப் புயங்களிலே தோளணிகளும், திருமார்பிலே கண்டிகையும் பிரகாசிக்க, மோதிரம் இட்ட திருக்கரத்தை வீசிச், சிங்கேறுபோலப் பெரு மிதத்தோடு நடந்து, இங்கே அரசன் இல் லையோ? அரசன் செங்கோல் கொடுங் கோலாயிற்றோ? தெய்வமும் இல்லையோ? தருமம் ஒளித்ததோ?" என்று சொல்லிக் கொண்டு, தருமசபையை அடைந்தார். அது கண்ட தாயத்தார்கள் மனந்தளர்ந்து, ஆச் சரியம் அடைந்து, "வெல்வோம்" என்னும் மனவலியிழந்து, முன் பொய் வழக்கால் வென்றதை நினைந்து நினைந்து, அச்சமும் நாணமுங்கொண்டு, நின்றார்கள். தனபதி யாய் வந்த சிவபெருமான், மருமகனையுந் தங்கையையுந் தழுவிக்கொண்டு, "ஐயையோ! வறியவர்களானீர்களே!" என்று சொல்லி அழுதார். தங்கையும் புதல்வனுந் தனபதி யார் பாதத்தில் விழுந்தழுதார்கள்.

தனபதியார், அவர்களையெடுத்துத் தழுவித், தமது கண்ணீர் வெள்ளத்தாழ்த் திப், புதல்வனைப் பார்த்து, "மார்பிலே பஞ் சாயுதத்தைக் காணேன்; காலிலே சிலம் பைக் காணேன்; தோளிலே தோளணியைக் காணேன்; முகத்திலே சுட்டியைக் காணேன்; காதிலே குண்டலங்களைக் காணேன்; வெற் றுடம்பை மாத்திரங் கண்டேன். யாது பெறும் என்று பிள்ளைப் பணிகளையுங் கவர்ந்து கொண்டார்கள்" என்று சொல்லி, வாய் விட்டழுது, தங்கையையும் மகனையுங் கண் ணீர் மாற்றி, முதுகைத் தடவி, "நீங்கள் உங்கள் கவலையை விடுங்கள். தாயத்தார் கள் வழக்குத் தோற்றுப்போம், பாருங்கள்" என்றார். "சிநேகிதரை வஞ்சித்தும், நம்பின வரைக் கெடுத்தும், யாசகருக்கு இம்மியுங் கொடாது உலோபஞ் செய்தும், கடுவட்டி வாங்கியும், சம்பாதித்ததா? தரும வழி யினாலே சம்பாதித்த என் பொருள் அழி யுமா?" என்றார். சோமசுந்தரக்கடவுள் எழுந் தருளியிருக்கும் திக்கை நோக்கிச் சிரமேற் கைகுவித்து, "மாணிக்கம் விற்ற நமது வைசிய குலத் தலைவரே! நமது தாயத்தார் வழக்கை இச் சபையாரிடத்து நின்று தீர்த் துத் தந்தருளும்" என்றார். பின்பு சபை யாரை நோக்கி, "அரசனது செங்கோலாகிய நூல் கட்டிய தருமமாகிய தட்டிலே உங்கள்

*பகிர்ந்த துன்பம் பாதியாகிறது. பகிர்ந்த இன்பம் இரட்டிப்பாகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக்காகிய துலாக்கோலையிட்டு நமது வழக்கையுந் தாயத்தார் வழக்கையுஞ் சீர் தூக்கித் தீர்ப்புச் சொல்லுங்கள்" என்றார்.

அதுகேட்ட சபையார்கள், இருபக்கத் தாருடைய வழக்கையுங் கேட்டு, நன்றாக ஆராய்ந்து, "தாயத்தார் வழக்குப் பொய் வழக்கு" என்றார்கள். தாயத்தார்கள் அது கேட்டு, அச்சமுற்று, "நமது தனபதிச் செட்டி யார் இவரல்லர்" என்றார்கள். அப்பொழுது தனபதியார் கைகொட்டிச், சிரித்து, அவரவர் குடிப்பெயரும் பட்டமுங் காணியுந் தந்தை தாய் மாமன் மாமி தாயத்தார் அவர்களைப் பெற்றவர்கள் பிள்ளைகள் உடன்பிறந்தார் மனைவியர் சுற்றத்தார் என்பவர்களுடைய பெயர்களும், அவரவர் குணங்களுஞ் செய் கைகளும், பிறவுஞ் சிறிதும் வழுவா வண் ணம் சொன்னார். அதுகேட்ட பெரியோர் களெல்லாரும் "தனபதிச் செட்டியார் இவரே" என்றார்கள். உடனே தாயத்தார்கள், "நம் வழக்குத் தோற்றது. பாண்டியன் அறிந்தால் நம்மைத் தண்டிப்பான்" என்று நினைந்து, "வீட்டுக்குப் போய் வருகிறேன்" என்றும், "குளத்துக்குப் போய் வருகிறேன்" என்றும், ஒவ்வொரு வார்த்தையிட்டுப் போய்விட்டார் கள். போய்விடுதலும், தருமசபையார்கள், தனபதிச் செட்டியாருடைய செல்வமெல் லாம் அவர் புதல்வனுக்கென்று தீர்ப்பெழு திக் கொடுத்தார்கள். உடனே தனபதியுருவங் கொண்ட சிவபெருமான் எல்லாருங் காண மறைந்தருளினார்.

சுந்தரேசபாதசேகர பாண்டியன், அதைக் கேள்வியுற்றுத், தனபதியுருவங்கொண்டு வந்து மறைந்தவர் சோமசுந்தரக் கடவுள் என்று அறிந்து, வியந்து, தனபதியுடைய புதல்வனுக்குப் பல வரிசைகளைக் கொடுத் துச், சோமசுந்தரக்கடவுளுடைய திருக்கோயி லைப் பொன்னினாலே புதுக்குவித்தான். சிலகாலஞ் சென்ற பின்பு, தன் புத்திர னாகிய வரகுண பாண்டியனுக்குத் தன் அரசைக் கொடுத்துவிட்டுத், தான் சிவ பிரானது திருவடி நீழலையடைந்தான்.

(தொடரும்...

அங்கிங்கெனாதபடி எங்கும் பரம்பொருளாய் ஆனந்த சொரூபியாய் மரம், செடி, கொடி, மலர்கள் எல்லாவற்றிலுமே இறைவன் இருக்கிறான் என்பதை உணராமல் அவனையே பறித்து அவனுக்கே அர்ப்பணம் செய்கிறோம். உருவம் இல்லாத இறைவனுக்கு எண்ணற்ற உருவங்கள் அமைக்கிறோம். எல்லா உயிரினங்களிலும் அவன் இருக்கிறான். அப்படியான இறைவன் நம்முள்ளும் இருப்பதை அறியாமல் அவனைத்தேடி எங்கெல்லாமோ அலைகிறோம். கொஞ்சம் யோசித்தால் நாம் எவ்வளவு தவறுகள் செய்கிறோம் என்பது புரியும். வெளியே கற்சிலைகளிலுள்ள இறைவனை மலரிட்டு நாம் அர்ச்சிப்பதும், நம்முள்ளே இருக்கும் இறைவனுக்கு மதுவூட்டி மகிழ்வதும் விந்தையிலும் விந்தை.

கடவுளைக் குறித்து உங்களுடைய பலவிதமான கருத்துக்களைப் பொருட் படுத்த நான் தயாராக இல்லை. கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடி கொண்டிருக்கிறார். இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்துகொண்டேன்.

*-சுவாமி விவேகானந்தர்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 49

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 சிறுதியாகம் ஒன்றிங்கு செய்வதற்கு நேர்கையிலே
சீற்றமது கொண்டிங்கு சினந்துநீர் சீறுமுன்னர்
மாற்றமது கொண்டுஅதை மனமேற்கும் தன்மைவரை
பெருந்தியாகம் புரிந்தோரை மனதிருத்திப் பார்த்திடுவீர்.

02 சிறுநோய்கள் வந்துங்கள் உடல்சோரும் வேளையிலே
வாழ்க்கையது முடிந்ததுபோல் வகையற்று வாடிடாமல்
மாற்றமது கொண்டுடலைத் தேற்றுகின்ற தன்மைவர
பெருநோய்க ளோடுமிங்கே உழைப்போரை எண்ணிடுவீர்.

03 சிறுநஷ்டம் ஒன்றிங்கு அடைவதற்கு நேர்கையிலே
அதையெண்ணிப் புலம்பியே ஆயுளினைக் குறைத்திடாமல்
சிறுநஷ்டம் லாபத்தின் அத்திவாரம் என்றுணர
பெருநஷ்டம் அடைந்தும்பின் நிமிர்ந்தோரை நோக்கிடுவீர்.

04 ஆகாயக் காற்றதனை அகத்துள்ளே இழுத்தெடுக்க
அகத்தழுக்கு ஓடியே உற்சாகம் பெருகுதல்போல்
ஆலயத்துள் ஆண்டவனை அகத்துள்ளே இழுத்தெடுக்க
மலமனைத்தும் ஓடியே மங்கலங்கள் உமதாகும்.

05 மலரது மட்டுமே மலரடியில் வீழவென்று
மனதுக்குள் எண்ணியே மனமதனை வீழ்த்தாமல்
புலர்பொழுதில் பூப்பறித்து பூந்தாளிற் கிட்டென்ன
மனமதனை வீழ்த்திப்பின் மலர்வீழ்த்தும் இறைமகிழ்வான்.

06 கரங்கூப்பல் மட்டும்தான் கடவுளாற்கு உகந்ததென்று
கரமேந்தி நிற்போர்க்காய் கரங்கொடுத்து உதவாமல்
பரம்பொருளைப் பகலிரவாய் கரங்கூப்பி நின்றென்ன
கரமேந்துவோர்க்குதவி பின் கரங்கூப்பும் இறைமகிழ்வான்.

*ஒரு அறிவாளி தனக்குள்ளேயே எல்லாவற்றையும் எதிர்பார்க்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 ஒழுக்கமது கெட்டோற்கும் ஒழுக்கத்தின் விலைதெரியும்
விலைதெரிந்து ஒழுக்கவழி ஒழுகஅவர் வருதற்கு
பக்கத்துணையிருக்க ஒழுக்கமுள்ளோர் தவறிவிட்டால்
ஒழுக்கமற்றோர் உருவாக ஒழுக்கமுள்ளோர் காரணமே.

08 உண்மைக்கு மாறாகக் குற்றமொன்றை நீர்சுமப்பின்
ஆத்திரம் கொண்டலறி அதற்குஉரம் சேர்க்காதீர்
உண்மையது துலங்கும்வரை மௌனமாகக் காத்திருந்தால்
குற்றத்தைச் சுமத்தியோரே பின்குற்றவாளிபோல் நிற்பர்.

09 தன்பிழையைப் பிழையென்று ஏற்றொருவர் நிற்கையிலே
பின்பிழையே பிழையேதான் என்றுரைத்தல் நன்றன்று
ஏற்றிடாமல் வாதாடி வழக்காடும் நம்செயல்தான்
பிழைகூடச் சரியாக வழிவகுத்து விட்டுவிடும்.

10 பிறப்பும் இறப்பும் உண்டென்று நம்புமாப்போல்
மானிடப் பிறப்பும் ஓர்முறைதான் நம்பிடுவீர்
மறுமுறையும் பிறந்துநாம் சிறந்திடலாம் என்பதிலும்
பிறந்திட்ட இப்பிறப்பில் சிறந்திடலே நன்றாம்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுதலும் நற்குணமே

– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –

பாராட்டுதலை புகழ்தல், அன்பு காட்டுதல், பெருமிதம் உரைத்தல், கொண்டாடுதல், மனத்தில் வைத்தல், மேன்மை, புகழ்ந்து பேசுதல் எனப் பொருள்கொள்ளலாம். பாராட்டு என்பது மனிதனின் நற்குணங்களில் ஒன்று. மனிதனுக்கு மட்டுமே உண்டானது. உலகெங்கும் பாராட்டு என்பது நற்பண்பாக உள்ளது. மனிதனுக்கு வேண்டிய முதன்மைக் குணம் பாராட்டும் குணம்தான். பணம் செய்யாததை பாராட்டு செய்யும் என்பது புதுமொழி. இன்றைய வேகமான உலகில் பாராட்டு என்பது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சிறந்த அங்கீகாரம் ஆகிறது. அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாராட்டுத்தான் அடிப்படை. நேரம்தான் செல்வம் என்று இயங்குகின்ற உலகில் வார்த்தைகள் குறைந்து பாராட்டும் வார்த்தைகள் மெலிந்துவிட்டன. பாராட்டுக்களில் சிக்கனம் தவிர்க்கப்பட வேண்டும். பாராட்டுதலிலும் சிக்கனமா? வேண்டாம்.

பாராட்டுக்கள் உள்ளுணர்விலிருந்து வரவேண்டும். நல்ல வார்த்தைகளுக்கு நாம் எல்லோரும் ஏங்குகிறோம் என்றால் நம்புவீர்களா? நீங்கள் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் உங்களுக்கு வந்துசேரும் ஒரு சிறிய பாராட்டுக்கூட உங்களை ஒரு நொடியாவது சிறு ஆனந்தத்தில் ஆழ்த்துகிறது என்பதை ஒப்புக்கொள்வீர்களா? குழந்தை வளர்ப்பில் பாருங்கள். குழந்தை வளர்வது உணவைவிட ஆதரவும் பாராட்டும்தான் தொடர்ந்து பிள்ளையை வளர்க்கிறது என்பது உளவியல் ஆய்வாளர்கள் கருத்து. மொழியறிவு வளரும்வரை வார்த்தைகள் தரும் நம்பிக்கையும் பாராட்டும் தொடுகைமூலமே நிகழ்கிறது. உறவுகள் இயந்திரத்தனமாக இயங்குகையில் தேவைகள் கருதிமட்டும் வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த வார்த்தைகளில் பாராட்டைத் தேடவேண்டி உள்ளது.

மனதார ஒருவரை பாராட்டுவது என்பது அரிதான செயலாகிறது. ஒருவர் பாராட்டினாலே இவர் எதற்காக இப்படிப் பாராட்டுகிறார்? இவருக்கு என்ன தேவைப்படுகிறது? என்று சந்தேகப்படுபவர்களும் உள்ளனர். எதையும் எதிர்பார்க்காமல் ஒருவரை மனதாரப் பாராட்டுதல் என்பது பாராட்டுபவரின் மனவளத்தைக் காட்டுகிறது. அது ஒரு பரிமாண வளர்ச்சி அதனால்த்தான் பலருக்கு மனதாரப் பாராட்டும் மனவிலாசம் இருப்பதில்லை. இன்னொரு வகை மனிதர்களும் இருக்கிறார்கள். அவர்கள் யாரையும் எதுவும் பாராட்டமாட்டார்கள். ஏனெனில் அவர்கள்தான் தலைசிறந்தவர்கள் என்று நினைப்பார்கள். அவர்களிடம்தான் நாம் கவனமாக இருக்கவேண்டும். ஒதுங்கிக் கொள்வது நன்று.

உங்களின் பாராட்டு வார்த்தைகள் உங்களின் செயல்களை நிருபிக்கிறதா? நீங்கள் பாராட்டுவது எதுவானாலும் அதை எளிதில் மற்றவர்கள் பிரதி எடுக்கும்படி இருக்கவேண்டும். அப்படிச் செய்தால் உங்களின் பாராட்டுக்கள் உண்மையானவை. உங்களது சிறந்த பாராட்டு வார்த்தைகளை அவர்களும் பின்பற்றுவார்கள். ஒவ்வொரு வார்த்தையும் உண்மையாக இருக்கவேண்டும். ஒன்றுக்கு இருமுறை புகழ்ந்தால் எதையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கிறான் என நினைக்க வாய்ப்பு உள்ளது. அதிகமாகப் புகழ்ந்தால் நீங்கள் போலித்தனமானவர்கள் என்று அடையாளம் கண்டுகொள்ளலாம். பாராட்டு வார்த்தைகள் உங்களின் இதயத்திலிருந்து வந்தால் நீங்கள் வெற்றி பெற்றுவிட்டீர்கள். அவர்கள் வெற்றி பெறுவதற்கு நீங்கள் ஏணியாகிவிட்டீர்கள். பாராட்டு நமது சொந்த மதிப்பு. அவர்கள்மீது நாம் கொண்டுள்ள அக்கறை மரியாதையை உறுதிப்படுத்தும். எனவே பாராட்டுபவர்கள் யாராக இருந்தாலும் பாராட்டை ஏற்றுக்கொள்ளப் பழக வேண்டும். இது மிகவும் முக்கியம். மற்றவர்களை வெற்றி பெறச்செய்து நாமும் வெற்றி பெற்றுவிடலாம்.

நல்லவற்றை பாராட்டத் தயங்காதீர்கள். உங்கள் மனதுக்கு பாராட்டத் தோற்றிய உடனே பாராட்டிவிடுவது நல்லது பாராட்ட வார்த்தைகள் - உடனே தெரியவில்லையா? சிறு புன்னகை போதும். நமது சிறு புன்னகை கூட பாராட்டுத்தான். ஒருவரை நீங்கள் உண்மையாக பாராட்டும்போது உங்களது உண்மையான குணமும், தன்மையும் தானாக வெளிப்படுகிறது. சரியான சமயத்தில் பாராட்டுங்கள். உண்மையாக மனதாரப் பாராட்டுங்கள். முன்னேற்றப் படிக்கட்டில் ஏற முக்கியமான ஒரு குணம் பாராட்டும் மனம்.

பாராட்டுவதில் ஏன் தயக்கம்? பாராட்டி வளர்க்கப்படும் குழந்தை புத்திசாலியாகவும், தன்னம்பிக்கைப் பண்பில் சிறந்ததாகவும் வளர்கிறது. நம்பிக்கையை வளர்ப்பதுடன் பாதுகாப்பு உணர்வைப் பெருக்கும் கற்பதைத் தூண்டும். நல்லெண்ணத்தை மனதில் பதியவிடும். பிறருக்கு உதவும் மனப்பாங்கை ஏற்படுத்தும். மனிதநேயத்தை ஊட்டும். மானிட உறவுகளை தழைத்தோங்கச் செய்யும். ஆகவே வாழ்க்கையை மெலிதாகத் தொட்டுச் செல்லும். மனிதர்கள் செய்யும் சிறு காரியங்களைக்கூட பாராட்டுங்கள். அவர்களுக்கு அந்நாள் சிறப்பாக அமையும். நம் மனநிலையும் ஆக்கபூர்வமாக அமையும். உங்களுடன் வாழும் மனிதர்களின் நல்ல பண்புகளை, நல்ல செயல்களைப் பாராட்டுங்கள். அது அவர்களது வாழ்க்கையை சிறப்பானதாக மாற்றும். வீட்டுக்குள்ளும் பாராட்டுக்கள் அவசியமா? என யோசிப்போரும் உள்ளனர். அது வீண்வாதம். பாராட்டுக்கள் அதிகமானாலும் பாதிப்பில்லை. குறைவானால்த்தான் பாதகம் முடியாதவர்களிடம் முடியும் என்று சொல்லிச் சற்று அதிகப்படியாக பாராட்டினால்கூட பிழை இல்லை. முடியுமென்பவரையும் பாராட்டாமல் விட்டால் பலர் தங்கள் திறமைகளின்மேல் நம்பிக்கை இழந்துவிடுவர்.

அன்பு எங்கே ஊற்றெடுக்கும் தெரியுமா? பரிவும், தட்டிக்கொடுத்தலும் பாராட்டும் இருக்கும் இடத்தில்த்தான் குழந்தைமுதல் பெரியவர்கள்வரை அனைவரும் பாராட்டப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். பாராட்டுக்கள் வெறும் வார்த்தைகள் அல்ல. அது உத்வேகம் அளிக்கும் வார்த்தைகள். ஒருவரது முயற்சி சின்னதாக இருப்பினும் சரி, பெரிதாக இருப்பினும் சரி அம்முயற்சியை பாராட்டுங்கள். அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும் நண்பு என்னும் நாடாச்சிறப்பு என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப அன்பு ஒன்றே மனிதனிடத்தில் ஆர்வம் உண்டாக்கும். அதனால் முடிந்தவரை மற்றவரை பாராட்டுங்கள். பிறருடைய நிறைகளை பலர் முன்னிலையில் பாராட்ட வேண்டும். குறைகளை தனிமையில் நாசுக்காக சுட்டிக்காட்ட வேண்டும்.

தனிமனிதனுடைய அமைப்புக்களது தேடலை, ஆற்றலை, செயலை மென்மேலும் வளர்த்துக்கொள்ள உந்துசக்தியாகிறது பாராட்டு. சமுதாயத்தில் பாராட்டு பெறுபவர்கள் எல்லோரும் போற்றப்படுகிறார்கள். ஒரு

*திறமை உள்ளவரின் முன்னேற்றத்தை யாராலும் தடுக்கமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளில் எத்தனைபேரிடம் பாராட்டு வாங்கு கிறோமோ அவ்வளவு நல்ல சேவையைச் செய்கிறோம் என்பது சேவை நிறுவனங்கள் தங்கள் பணியாளருக்கு சொல்லித்தரும் பாடம். ஒருநாளில் எத்தனைபேரை பாராட்டு கிறீர்களோ அவ்வளவு நல்ல வாழ்க்கை வாழ் கிறீர்கள் என்பது பொருள். பாராட்டுவதற்காகப் பாராட்டு பாராட்டப்படும் பொருளோ, மனிதரோ அருகதையாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. பாராட்டுபவரின் அருகதைதான் முக்கியம்.

உங்கள் பாராட்டு என் வார்த்தை களுக்கு பெருமை சேர்த்தது. இனி என் வார்த்தைகள் உங்கள் பாராட்டுக்கு பெருமை சேர்க்க விழையும் பாராட்டுரை சக்தியை அதிகப்படுத்துகிறது. நேர்மறை எண்ணங்களை வளர்த்து எதிர்மறை எண்ணங்களை அடி யோடு நீக்குகிறது. வெற்றியடைந்த பின் பாராட்டும் வார்த்தைகள் இல்லையெனில் அது ஒரு வெற்றிபோலவே தெரியாது. தோல்வி அடைந்தபின் தட்டிக்கொடுக்கும் வார்த்தைகள் இருந்தால் அது ஒரு தோல்வியாகவே தெரி யாது. ஒரு மென்மையான வார்த்தையால் பாராட்டுக் கிடைத்தால் அதிசயங்களையும், அற்புதங்களையும் நிகழ்த்திக் காட்ட முடியும். நாம் ஒருவருக்கு அளிக்கும் சிறு பாராட்டு என்பது நமக்கு வார்த்தை அவர்களுக்கு வாழ்க்கை. அடுத்தவர் செய்யும் நல்ல விஷ யங்களைப் பாராட்ட தைரியம் இல்லாதவன் அடுத்தவன் செய்யும் தவறுகளை சுட்டிக் காட்டத் தகுதியே இல்லாதவன் ஆவான். பாராட்டுதல் மூலம் ஒருவன் ஊக்கமடை கிறான். பிறரைப் பாராட்டுங்கள் பாராட்டு கிடைக்கும். இவை ஒற்றை வழிப்பாதை அல்ல. இரட்டை வழிப்பாதைகள். உறவுகளை மதிக்காவிட்டாலும் அவர்களது உணர்வு களை மதியுங்கள்.

பாராட்டுபவர் நல்ல வழிகாட்டி. பாராட்டு ஒரு மனிதனுக்கு ஊக்க மருந்தாகும். ஒரு செயலைச் செய்பவனைப் பாராட்டும்போது அவன் அச்செயலை இன்னும் சிறப்பாகச் செய்ய முயற்சி செய்வான். ஒருமுறை பாராட் டப்பட்டவன் நிச்சயமாக மறுமுறையும் பாராட் டுப்பெற முயல்வான். பாராட்டை எல்லோரும் விரும்புவார்கள். பாராட்டுதலும் நற்குணமே. பாராட்டில் சிக்கனம் வேண்டாம்.

---

*பூமி அதாவது நிலம் சமூகத்திலிருந்து குறைவாகப் பெற்றுக்கொள்கிறது. நிறையத் திருப்பிக் கொடுக்கிறது. இதுவே நியதி. ஆனால் மனிதனோ சமூகத்திலிருந்து நிறைய எடுத்துக்கொள்ள விரும்புகிறான். எதையும் திருப்பித்தர விருப்பப்படுபவனாக இல்லை. மண்ணில் விளையும் பொருள்களிலே மனிதனுக்குப் பயன்படாத கழிவுகளையே மண் விரும்புகிறது. அந்தக் கழிவுகளைத் தான் எடுத்துக்கொண்டு உருசிமிக்க கனிகளையும் காய்களையும் மட்டுமன்றி இறைவனுக்குச் சூட்டக்கூடிய அழகிய மலர்களையும் நமக்குத் தருகிறது. கழிவுப் பொருட்களையும் ஆக்கமாக மாற்றும் ஆற்றல் மண்ணுக்கு இருக்கிறது. கொண்டும் கொடுத்தும் வாழும் இயற்கை முறையினை நாம் மரங்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். மண்ணிலிருந்து தண்ணீரையும் உரத்தையும் பெற்றுக்கொள்ளும் மரமானது, தனது பழுத்த இலைகளை மண்ணுக்கு உரமாகத் தந்துவிடுகிறது. எதையும் கொடுக்காமல் எடுக்கும் வாழ்க்கைக்கு "சுரண்டல் வாழ்க்கை" என்று பெயர்.*

*தான் நேசிப்பதை மற்றவருக்குக் கொடுக்க விரும்பாதவனால், தான் விரும்பு வதையும் அடைய முடியாது.*

***-குன்றக்குடி அடிகளார்-***

*விலைகொடுத்தும் பெறமுடியாத ஒரே பொருள் அனுபவம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| திரு நடேசன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| M. அக்ஷனன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| G. சகாதேவன் | நல்லூர் | 2000. 00 |
| சு. ராஜகோபால் | ஊரெழு | 5000. 00 |
| கா. தயாளன் | நுணாவில் | 5000. 00 |
| திரு ஸ்ரீஸ்கந்தராஜா குடும்பம் | கனடா | 5000. 00 |
| திரு பவநீதன் குடும்பம் | கனடா | 10000. 00 |
| பாலசுப்பிரமணியம் நினைவாக | கரணவாய் | 2000. 00 |
| சு. சத்தியானந்தன் | கனடா | 15000. 00 |
| ச. சோதிவடிவேல் | வட்டுக்கோட்டை (தெகிவளை) | 3000. 00 |
| பகீரதன் அபினா | கனடா | 5000. 00 |
| ச. பூவேந்திரன் | கொழும்பு | 5000. 00 |
| பூ. சிவதவேந்திரன் | தெகிவளை | 5000. 00 |
| சாவித்திரியம்மா அருணாசலம் | பருத்தித்துறை | 10000. 00 |
| திரு சந்திரசேகரம் குடும்பம் | நீர்வேலி | 5000. 00 |
| பொ. நாயகம் | வளலாய் | 500. 00 |
| S. தாரகா | வவுனியா | 5000. 00 |
| ந. பொன்னையா | வல்வெட்டி | 1000. 00 |
| ச. ஜதுர்ஷனா | நல்லூர் | 500. 00 |
| அ. லோகநாதன் | தெல்லிப்பழை | 1000. 00 |
| திரு சிவயோகசுந்தரன் | கொழும்பு | 5000. 00 |
| தெ. அபறாஜீதன் | கந்தரோடை | 5000. 00 |
| பா. கேதீஸ் | உரும்பராய் | 10000. 00 |
| P.T. பாலச்சந்திரன் | அவுஸ்திரேலியா (வல்வெட்டித்துறை) | 5000. 00 |
| அ. ஆதிரை | கனடா | 5000. 00 |
| கோ. கோபிநாத் | நீர்வேலி | 2000. 00 |
| கு. சுஜீபன் | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| திருமதி அ. வேலாயுதம் | திருகோணமலை | 500. 00 |
| க. லிங்கலட்சுமி | திருகோணமலை | 500. 00 |
| திருமதி த. சௌந்தரிப்பிள்ளை | திருகோணமலை | 500. 00 |
| K. விஜயராணி | திருகோணமலை | 500. 00 |
| சரஸ்வதி தம்பிராசா நினைவாக | மட்டக்களப்பு | 500. 00 |
| R. ராமமூர்த்தி | திருகோணமலை | 1000. 00 |

*பசி, உழைப்பு, வியர்வை இவை மூன்றும் பிணி போக்கும் மருந்துகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| செ. வர்ஷன் | உப்புவெளி | 500. 00 |
| ந. செல்வஜோதி | திருகோணமலை | 1000. 00 |
| சோ. முருகானந்தன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| த. குணராசா | இணுவில் | 1500. 00 |
| ந. சிறிகரன், சி. லாவண்யா, சி. அஸ்வின், சி. ஆதர்ஷா, சி. ஜெய்ஷா | புன்னாலைக்கட்டுவன் | 10000. 00 |
| கு. பாஸ்கரன் | உடுப்பிட்டி | 3000. 00 |
| சிவா நறுமணப் பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| க. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 20000. 00 |
| இ. சிவராஜா | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| த. ராமநாயகம் கே.கே.எஸ் றோட் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| K. தாஸ்நவன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| J. ஷஸ்மிகன் | கோண்டாவில் | 5000. 00 |
| க. ஞானச்சந்திரன் | கொக்குவில் | 2000. 00 |
| யோ. கம்ஷிகா | மூளாய் | 6000. 00 |
| திரு கைலாசபிள்ளை குடும்பம் | மூளாய் | 5000. 00 |
| கு. தக்ஷன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| ஜெ. ஸ்ரீதரன் | கோப்பாய் | 1000. 00 |
| திரு செந்தில்நாதன் | மீசாலை | 500. 00 |
| M. அக்ஷயா, M. அக்ஷரா, M. அஸ்மியா, K. அக்ஷிகா | பிரான்ஸ் | 15000. 00 |
| செ. சியான் | மட்டுவில் | 5000. 00 |
| சி. சம்பூர்ணி | ஆவரங்கால் | 1000. 00 |
| செ. கமலச்செல்வா | ஆவரங்கால் | 1000. 00 |
| ஸ்ரீ. அபிலஷா | பிரான்ஸ் | 5000. 00 |
| வே. சிவசீலன் குடும்பம் | கனடா | 15000. 00 |
| வடிவேலு சத்தியபதி | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| பாலாம்பிகை கந்தசாமி | கரவெட்டி | 1000. 00 |
| செந்தூரன் நந்தினி | வல்வெட்டித்துறை | 5000. 00 |

*முதுமையின் சுருக்கம் முகத்தில், முயலாமையின் சுருக்கம் அகத்தில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கு. கஜலக்ஷன் | அச்சுவேலி | | 1000. 00 |
| Dr. குகதாசன் | கோண்டாவில் | | 10000. 00 |
| மு. விஜயரகுநாதன் | இணுவில் | | 1மூடை அரிசி |
| ச. யாழினி, ச. ஆரணி | வட்டுக்கோட்டை | | 5000. 00 |
| ராசம்மா தில்லைராஜா, காந்தன் தில்லைராஜா | கனடா | | 3000. 00 |
| ம. மோகனதாஸ் | உரும்பராய் | | 5000. 00 |
| திரு செல்வரட்ணம் குடும்பம் | புலோலி | | 1000. 00 |
| S. முரளிநாத் | திருநெல்வேலி | | 500. 00 |
| க. அகிலன் | யாழ்ப்பாணம் | | 2000. 00 |
| சு. சக்தி | அவுஸ்திரேலியா | | 5000. 00 |
| திருவருள் | பருத்தித்துறை | மரக்கறி, 2மூடை அரிசி | 1000. 00 |
| G. சஜீபன் | உரும்பராய் | 1புட்டி அரிசி | 2000. 00 |
| இ. செந்தூரன் | சிறுப்பிட்டி | | 1000. 00 |
| த. சிவசுப்பிரமணியம் | வல்வெட்டித்துறை | | 5000. 00 |
| கா. சிவஞானசுந்தரம் | நெல்லியடி | | 3000. 00 |
| திரு செல்லத்துரை | பருத்தித்துறை | | 1மூடை அரிசி |
| S. நடேசலிங்கம் | யாழ்ப்பாணம் | | 1050. 00 |
| R. நிவர்ணன் | கோப்பாய் | | 2000. 00 |
| ச. கதிர்காமத்தம்பி | அல்வாய் | | 1000. 00 |
| S. சற்குணநாதன் | கல்வியங்காடு | | 1000. 00 |
| திரு ஞானேஸ்வரன் | வவுனியா | | 25000. 00 |
| சி. சற்குணநாதன் | இருபாலை | | 2000. 00 |
| K. யோகராஜா | சிலாபம் | | 500. 00 |
| E. துவாரகா | சிலாபம் | | 500. 00 |
| பூ. கானவேந்தன் | சிலாபம் | | 500. 00 |
| சதீஸ்வரன் மேரி | யாழ்ப்பாணம் | | 1500. 00 |
| சி.க. சண்முகசுந்தரம் | சொய்சாபுரம் | | 1000. 00 |
| பா. சர்மினி, சு. துஷாந்தி, சு. மஞ்சுளா | பிரான்ஸ் | | 5000. 00 |
| லயன் V.R. ரஞ்சன் | வண்ணார்பண்ணை | பருப்பு, அப்பளம் | 1மூடை அரிசி |
| த. யோகரத்தினம் | வசாவிளான் | | 5000. 00 |
| பா. சர்மிளன் | குரும்பசிட்டி | | 1000. 00 |
| சரண்யா கஜகயூரன் | அளவெட்டி | | 1000. 00 |
| செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி | காங்கேசந்துறை | | 10000. 00 |
| ச. பிரசாந் | மானிப்பாய் | | 1மூடை அரிசி |
| சி. தினேஸ் | மானிப்பாய் | | 2000. 00 |
| சந்நிதியான் துணை | சங்கானை | | 1000. 00 |

(தொடரும்...

*மற்றவர்களுடைய தவறுகள் நமக்கு நல்ல பாடங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாந்த, சித்தாந்த மரபில் யோகர் சுவாமியின் கருத்தியல்

– **செல்வி க. பரணிகா** அவர்கள் –

இலங்கைச் சித்தர்களுள் தனித்துவமான இடத்தினைப் பெறும் சிவயோக சுவாமிகள் வேதாந்த சித்தாந்த சைவசமய மரபினைப் பெரிதும் பின்பற்றியவராக விளங்குகின்றார். இவர் 1872ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் மாவிட்டபுரத்தில் சதாசிவம் எனும் இயற்பெயருடன் அம்பலவாணருக்கும் சின்னாச்சிக்கும் மகனாகப் பிறந்தார். இவரது ஆன்மீகக் குரு செல்லப்பா சுவாமிகள் ஆவார். இவரால் பாடப்பட்ட பாடல்கள் நற்சிந்தனை எனும் நூலாக வெளிவந்தது. இந்நூலானது ஞானப் பொக்கிஷமாகவும் வேத உபநிடத ஆத்மசாரமாகவும் விளங்குகின்றது. இந்நூலில் யோகர் சுவாமிகள் அவரது குருவின் மகா வாக்கியங்களான

ஒரு பொல்லாப்பும் இல்லை
நாம் அறியோம்
எப்பவோ முடிந்த காரியம்
முழுவதும் உண்மை"

என்பவற்றைப் பயன்படுத்தியுள்ளார். இவற்றின் சிறப்புக்களை நற்சிந்தனையில் தெளிவாகக் காணலாம்.

ஈழத்து வேதாந்த சித்தாந்த சமரச செல்நெறியில் யோகர் சுவாமியின் கருத்தியல் பற்றி நோக்குகையில் இவரது சிவதொண்டன் எனும் பத்திரிகையில் சிவத்தொண்டர் மரபு எனும் பாடலில் "வேதாந்த சித்தாந்த சமரச வினோத" என்று அப்பத்திரிகையை விளித்துள்ளமையினைக் காணலாம். சுவாமிகளின் கருத்துக்களை வேதாந்தி என்றோ சைவ சித்தாந்தி என்றோ கருதாமல் அவர்களை இத் தத்துவங்களிற்கு அப்பாற்பட்டவர்கள் என மதிப்பீடு செய்யலாம். யோகர் சுவாமிகள் "பண்டு செய வல்வினை... வேதாந்த நெறி நிலபு" என்றும் "வேதாந்த நிலை மேவி வேறில்லை எனக்கூவி" என்று கூறுவது வேதாந்த தத்துவத்தைச் சிறப்பாக விளக்குவதாக அமையப்பெற்றுள்ளது.

யோகர் சுவாமிகள் வேதம் உபநிடதம் என்பனவற்றின் வழிவந்த வேதாந்தத்தில் நம்பிக்கை உள்ளவரா அல்லது சைவசித்தாந்த நெறி முறைகளில் நம்பிக்கையுள்ளவரா என்ற ஐயம் எல்லோர் மனதிலும் உண்டு. அவ்வையம் தீர அவரது நற்சிந்தனையே போதுமானது.

"அத்துவிதப் பொருள் காப்பாம் எனக்
கடியார்களென்றென்றுங் காப்பாம்...." என்றும்,
"நானே நீ - நீயே நான்
கோனே நீ - குருவே நீ...."

எனும் பாடல்கள் மூலம் அறியலாம். யோகர் சுவாமிகள் தாம் "வேதாந்த சித்தாந்த சமரச நன்நிலை பெற்ற வித்தகர் சித்தர் கணம் நாமே" என்றார். இதனூடாக இவர் வேதாந்த சித்தாந்த சமரசவாதி என்பது தெளிவாகின்றது.

*எத்தனை கைகள் என்னைத் தள்ளிவிட்டாலும் என் நம்பிக்கை என்னைக் கைவிடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகர் சுவாமிகள் வேதாந்தமும் சித்தாந்தமும் சமரசம் என்பதை மறைமுடிவாம் வேதாந்தமும் முறைமுடிவாம் சித்தாந்தமும் பள்ளி வகுப்பு போன்றமைந்தது. ஈற்றில் ஈனும் பிரம்ம ஞான அத்வைத நிலையே! சுருதியில் சொன்ன துணிவு இதுவாம். இதனை,

"அன்னையுந் தந்தையும் ஆத்மாவுக்கில்லைச்
சொன்ன சுருதியின் துணிவிதுவாமே" என்கிறார்.

மறைமுடிவாம் வேதாந்தமும் முறைமுடிவாம் சித்தாந்தமும் ஆக விளங்கும் மலர்ப்பாதமே இறைவனடி என்பதனை, "வேத சாத்திரம்கற்றிடல் இன்பமே" என கூறுவதன் ஊடாக வேதாந்த சித்தாந்த சமரச செல்நெறியினைக் காணலாம்.

வேதங்கள் சைவசித்தாந்தத்திற்கு இன்றியமையாதது. "வேத நூல் சைவ நூலென் றிரண்டே நூல்கள்" என சிவஞான சித்தியார் சிறப்பாக கூறுகிறது.

"வேதாந்த தீதில் பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம்"
"சிவாகமங்கள் சித்தாந்தமாகும்"

என்ற பகுதிகள் வேதாந்தம் சித்தாந்த சமரச செல்நெறி என்பது தெளிவாகப் புலனாகின்றது.

வேதாந்தமும் சித்தாந்தமும் சமரசம் என்பதைத் திருமூலர்

"சிவமாதல் வேதாந்த சித்தாந்தமாகும்...." என்றும்
"வேதாந்த சித்தாந்த வேறிலா முத்திரை...."
"வேகமில வேதாந்த சித்தாந்த மெம்மையொன்றாக...." என்றும்

மணிவாசகர் கூறும்போது,

"சிந்தைதனை தெளிவித்து சிவமாக்கி...."
"மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி....."

என்ற சிவபுராணப் பாடல் ஊடாக வேதாந்தம் சித்தாந்தம் ஒன்று என்பதனை வெளிப்படுத்தியுள்ளார்.

வேதாந்தமும் சித்தாந்தமும் வேறல்ல, இரண்டும் ஒன்றே எனும் சமரசம் காணும் யோகர் சுவாமிகள் அவரது சிவதொண்டன் பத்திரிகையில்

"தெளி வழி காட்டும் சிவதொண்ட என்பாற்.....
வேதாந்த சித்தாந்தம் வேறல்ல வென்றுலகில்
நாதாந்தம் காட்டும் நமக்கு......"

என்பதன் ஊடாகச் சிறப்பித்துள்ளார்.

சிவதொண்டன் வெள்ளி விழா மலர் வாழ்த்தில்

"வேத சித்தாந்த வியனெறிச்
சமரசன் ஓதத் தகுவன வெவையும் ஓதுவேன்"

என்றும் வாழ்த்தியிருப்பதன் ஊடாகவும் வேதாந்த சித்தாந்த சமரசம் வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம். வேதாந்தம் சித்தாந்தம் கற்றலும் இறைவனை வழிபட வேண்டும் என்பதனை யோகர் சுவாமிகள் வலியுறுத்துகின்றார். இதனை "வேதாந்தம் சித்தாந்தம் கற்றால் என்ன..." என்பதன் மூலம் காணலாம்.

*நேரத்தை வீணாக்கும்போது கடிகாரத்தைப் பார். ஓடுவது முள் அல்ல. உன் வாழ்க்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வேதாந்தமும் சித்தாந்தமும் ஒன்றே என்பதை யோகர் சுவாமிகள் பின்வரும் பாடல்கள்மூலம் தெளிவுபடுத்துகிறார்.

"வேதாந்த சித்தாந்த வேறாகக் காணோம்"
"வேதாந்த சித்தாந்த சமரசந் தருவான்"
"வேதாந்த சித்தாந்தம் ஒன்றென்று நோக்கும்"
"வேதாந்த தெய்வமுயர் சித்தாந்த தெய்வம்"
"வேதாந்தம் சித்தாந்தம் சகமெனத் தெரிவிப்போம்"
"வேதாந்தம் சித்தாந்தம் வேறல்ல வென்றுலகில்
நாதாந்தங் காட்டும் நமக்கு"

என்பதால் காணலாம்.

தாயுமானவர் கூறும்போது "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகர் சித்தர் கணமே" என்கிறார். தாயுமானவரின் வேதாந்த சித்தாந்தம் கலந்த முடியுடைத்தாய் அசைக்க முடியாத அறிவுரைகளாய் விளங்கி ஞான உபதேசங்களால் மிளிர்கிறது. இத்தகைய சமரச நோக்கு யோக சுவாமிகளிடம் திகழ்ந்துள்ளது என்பது அவர் தம் பாடல்கள் ஊடாக தெளிவாக புலனாவதுடன் அது பல அடியார்களை சுவாமிகள்பால் ஈர்த்தது.

தொகுத்து நோக்குமிடத்து ஈழத்து வேதாந்த சித்தாந்த சமரச செல்நெறியில் யோகர் சுவாமிகளும் அவரது சிவதொண்டன் பத்திரிகையும் பாரிய பங்களிப்பை ஆற்றியுள்ளது என்பது அவர் தம் நற்சிந்தனை நூல் வாயிலாக தெளிவாகின்றது. வேதாந்தம் சித்தாந்தம் இரண்டும் சமரசம் என்பதை யோகர் சுவாமிகள் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். எனவே வேதாந்தமும் சித்தாந்தமும் சமரசம் என்பது தெள்ளத் தெளிவாக புலப்பட்டுள்ளமையானது சிறப்பானதே.

சிலர் பேசும்போது "நாமெல்லாம் கடவுளுக்கும் மனச்சாட்சிக்கும் மட்டுமே பயப்பட வேண்டும்" என்று கூறுவார்கள். இது தவறு. கடவுளும் மனச்சாட்சியும் நம்மைக் காயப்படுத்தும் விடயங்களே அல்ல. அதுமட்டுமல்லாமல் கடவுளும் மனச்சாட்சியும் வேறு வேறல்ல. கடவுள் நம்முள்ளேதான் இருக்கின்றார் என்பதை மறந்துவிடாதீர்கள். அப்படி நினைத்தால் பயம் தானாகவே வெளியேறிவிடும். எமது செயல்களும் தவறாக இருக்கமுடியாது. ஜனனத்துக்கு முன்பு நாம் எங்கிருந்தோம், மரணத்துக்குப் பின்பு நாம் எங்கே போகப்போகிறோம் என்று தெரியும்வரை நமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி ஒன்று நம்முள் இருக்கிறது என்பது புரிகிறது. இடைப்பட்ட வாழ்க்கையையும் அந்த சக்திதான் நடத்துகிறது என்பதை மறந்துவிடாதீர்கள்.

நாம் அறிந்துள்ளவைகளுக்கு அப்பால் ஒரு அறியும் சக்தி நம்முள் உள்ளது. அது அன்பினால் மட்டுமே வெளிப்படக்கூடியது. நமது சிந்தனைகளைவிட நாம் உயர்ந்தவர்கள் என்பதை அப்போது அறியலாம்.

ஆதாரமான வேர்கள் நிலத்தினுள் மறைந்திருக்க ஒரு மரம் தனியாக நிலையாக நிற்பது போன்று இறைவனும் ஆதாரமாக நமக்குள் இருப்பதனால்த்தான் நாமும் வாழமுடிகிறது.

*தைரியம் பயத்தைவிட ஒருபடி மேலே உள்ளது.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனுநீதி, அரசநீதி, தெய்வநீதி வழுவா சான்றோர்கள் வரிசையில்

## ஐயப்பன் வழிபாடு

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

உலகின் தொன்மை மொழி தமிழ், இறைவன் தமிழ் வளர அனுசரணை தந்து இந்து மதத்தையும் உறுதுணையாக இயக்கினார். இந்திய மாநிலங்களில் பலர் இந்து சமயத்தைத் தழுவியபோதும் தென் மாநிலங்களில் தோன்றிய ஆதிசங்கரர், பரசுராமன் போன்றோர் சைவ சமயக் கடவுளான சிவபெருமானையும், மகாவிஷ்ணுவையும் ஐயப்பன் போன்ற பல தெய்வங்களையும் இடையறாது வழிபட்டனர். இந்து சமயத்திலேயே ஆறு பிரிவினர் வழிபட்டதால் ஆதிசங்கரர் இந்து சமயத்தை ஆறு உப பிரிவுகளாக்கினார். சிவனை வழிபடும் சமயம் சைவம் என்றும் சக்தியை வழிபடும் சமயம் சாக்தம் என்றும் விநாயகரை வழிபடும் சமயம் காணபத்தியம் என்றும் முருகனை வழிபடும் சமயம் கௌமாரம் என்றும் மகாவிஷ்ணுவை வழிபடும் சமயம் வைஷ்ணவம் என்றும் சூரியனை வழிபடும் சமயம் சௌரம் என்றும் அழைக் கப்பட்டது.



இவ்வாறு பல பிரிவுகளாக வழிபட் டாலும் மூலமூர்த்தியாம் இறைவன் ஒருவரே. ஆதியில் உலகம் இயங்க வேண்டும் என்ற தால் சிவபெருமான் சக்தியைத் தோற்று வித்தார். இவர்கள் தம் பணியைச் செய்த போதும் சிவமும் சக்தியும் ஒன்றேயென அறி யும் வண்ணம் அர்த்தநாரீஸ்வரர் எனப் போற்றப்பட்டார். காத்தல் கடவுளாகத் தோற்றம் பெற்ற மகாவிஷ்ணு தமது பணியைச் செவ்வனே செய்வதன் பேரில் பத்து அவதாரமெடுத்து வாழ்ந்து காட்டியும் தாம் எடுத்த பணியைச் சிறப்பித்தார். சிவனும் மகாவிஷ்ணுவும் ஒரே உருவில் அரிநாராயணர் எனப் போற்றப்படுகின்றனர்.

மகாவிஷ்ணுவின் ஒரு அவதாரம் பரசுராமராக அமைந்தது. பரசுராமர் தனது பக்தியின் மகிமையால் கேரள மாநிலத்தில் 18 சாஸ்தாவின் ஆலயங்களை நிறுவினார். அவர் அவதரித்த இந்த மாநிலத்திற்கு பரசுராமர் ஷேத்திரம் எனும் பெயரும் உண்டு.

*ஒரு மனிதனின் பத்து விரல்களே அவனது சிறந்த நண்பர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இந்து சமயம் ஆறு உப சமயங்களாகப் போற்றப்படுவது போல சாஸ்தா வழிபாடு - ஐயப்ப வழிபாடும் அமைந்துள்ளது. மேற்கூறிய ஏழு பிரிவுகளும் ஒரே ஆன்மிக தத்துவத்தையே போதிக்கின்றன. சகல பிரிவு நெறிகளிலும் பூரணமான சமய பக்தியும் சமய அடிப்படை நெறிக் கட்டுப்பாடும், வழிபடும் முறை, விரதம் அனுட்டித்தல், விரதகால விதிமுறைகளுக்கான கட்டுப்பாடும் ஒருங்கமைவதைக் காணலாம்.

## ஆரம்பகால ஐயப்பன் வரலாறு

கேரள மாநிலத்தில் பழைய திருவிதாங்கூர் என்னும் புண்ணிய பூமியில் பந்தனநாடு மிகவும் சிறப்புடையது. இப்புனித மண்ணில் இராசசேகர பாண்டியன் என்னும் மன்னன் செங்கோலோச்சினான். இவன் சிறந்த சிவபக்தனானதால் நாட்டு மக்களை அன்புடன் அரவணைத்து அனைவரையும் மன நிறைவுடன் வாழ வைத்தான். மன்னனின் செங்கோலாட்சியால் வானம் பொய்க்காது மாதம் மும்மாரி பொழிந்தது. நீர்வளம் பெற்ற நாட்டின் மண்வளம் மிகுந்து மக்கள் சகல சிறப்புக்களையும் பெற்றனர். நாட்டு மக்களின் மனநிறைவுபோல மன்னனின் பட்டத்து ராணியும் மன்னனின் பெருமையை நிலை நாட்டவென சீரிய பண்பும் பண்புக்கேற்ற அன்பும் சொரிந்து இனிய தம்பதியராகப் பல செல்வங்களுடன் திகழ்ந்தனர். ஆனாலும் இவர்களுக்கு மழலைச் செல்வம் கைகூடவில்லை.

அத் தம்பதியினர் அறப்பணிகளுடன் சிவப்பணியையும் சிறப்பாக ஆற்றியதுடன் தமது கவலையைச் சிவபிரானிடம் விண்ணப்பித்தனர். இதே சமயம் அவ்வூர் பொதுமக்கள் மன்னனின் மறுப்பில்லாத செங்கோலாட்சியால் குறைகளேதுமின்றி மனநிறைவாக இருந்தது போல அரச தம்பதியினரின் கவலை தீர வேண்டுமென இறைவனை இடையறாது பிரார்த்தித்தனர். இவ்வாறு நாட்டில் சிவப் பொழுதே படர்ந்திருந்தது.

## மகிஷன் வதம்

அசுரகுலத்தவனான மகிஷன் என்பவன் பிரமதேவரை வேண்டி நெடுங்காலம் தவமிருந்தான். அசுரனின் போக்கைப் பிரமா நீக்கமுற்பட்டார். ஆனாலும் அசுரனின் தவ வலிமை மேலோங்கியது. பிரமா வேறு வழியின்றி அவன் முன் தோன்றி வேண்டும் வரம் யாதெனக் கேட்டார். பிரம்மாவைக் கண்டதும் மனம் மிக மகிழ்ந்த அசுரன் பிரம்மாவைப் பலமுறை வணங்கி தனக்கு இப்பிறவியில் இம்மண்ணில் பிறந்த எவராலும் மரணம் ஏற்படக் கூடாதென வரங்கேட்டான். பிரம்மா மகிஷன் கேட்ட வரம் தந்து மறைந்தருளினார்.

அசுரன் தான் பெற்ற வரத்தின் பெருமையால் இறப்பேயில்லை என்ற இறுமாப்பினால் விண்ணிலும் மண்ணிலுமுள்ளோரைக் கொடுமைப்படுத்தினான். அசுரனின் கொடுமைகளைத் தாங்கமுடியாத முனிவர்கள் யாவரும் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளிடம் முறையிட்டனர். மும்மூர்த்திகள் தாம் தனித்து வெல்ல முடியாதென உணர்ந்தனர். தமது சக்திகளை ஒன்றிணைத்து "சண்டிகா தேவி" என்னும் சக்தியைத் தோற்றுவித்தனர். சண்டிகாதேவி தமது எட்டுக் கரங்களில் சிறப்பான ஆயுதங்களை ஏந்திய வண்ணம் சிங்க வாகனத்திலமர்ந்து மகிஷன் முன் தோன்றினார். இருவருக்குமிடையே கடும் போர் மூண்டது. சண்டிகாதேவி மகிஷனை வதம் செய்தார். தேவர்கள் தமது துன்பம் நீங்க மகிழ்வடைந்தனர்.

மகிஷனின் சகோதரியான மகிஷி என்னும் அசுரப்பெண் அண்ணன் இறந்ததும்

*பொறுப்புமிக்க ஒரு தந்தை நூறு ஆசானுக்குச் சமம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுஞ் சினங்கொண்டாள். இக்கொலைக்கு உறுதுணையாக நின்ற தேவர்களை அழிக்க முற்பட்டாள். தேவர்களை அழிப்பதன்பேரில் பிரம்மதேவனை வேண்டிக் கடுந்தவமிருந்தாள். மகிஷியின் கடுந் தவவலிமை பிரம்மாவை முன் தோன்ற வைத்தது. பிரம்மா அவளை நோக்கி நீ வேண்டும் வரம் யாதெனக் கேட்டார். அவள் பிரம்மாவிடம் சிவனுக்கும் விஷ்ணுவிற்கும் பிறக்கும் மகனாலன்றி வேறெவராலும் மரணம் நிகழக்கூடாதெனக் கேட்டாள். பிரம்மாவும் கேட்ட வரம் தந்து மறைந்தருளினார். மகிஷி தான் பெற்ற வரத்தினால் தேவர்களைத் துன்புறுத்த தேவலோகஞ் சென்றாள்.

**ஐயப்பனின் அவதாரம்**

தேவர்கள் முன்னொரு காலத்தில் துர்வாச முனிவர் இட்ட சாபத்தால் அவர்களுக்கு நரை ஏற்பட்டது. இதனால் வருந்திய தேவர்கள் மகாவிஷ்ணுவை நாடினர். தேவர்களுக்கு உதவ முன்வந்த மகாவிஷ்ணு பாற்கடலைக் கடைந்து அமுதத்தை எடுக்குமாறு ஆலோசனை கூறினார். தேவர்களும் அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடைந்தபோது வெளிவந்த அமுதத்தை அசுரர்கள் கவர்ந்து சென்றனர். இதனை நோக்கிய மகாவிஷ்ணு மோகினி வடிவம் எடுத்து அசுரர்கள் முன் தோன்றினார். அசுரர்கள் மோகினியின் அபூர்வமான அழகில் மயங்கினர். மோகினி அமுதத்தைக் கவர்ந்து சென்று தேவர்களிடம் கொடுத்தாள்.

மோகினியின் அழகைக் காணவந்த சிவன் அவள்மீது மையல் கொண்டார். இருவரும் இணைந்தபோது ஒரு ஆண் குழந்தை உருவானது. சிவன் அக்குழந்தைக்கு ஒரு மணிமாலையைக் கழுத்தில் அணிவித்தார். அக்குழந்தையை பூலோகத்தில் மழலைச் செல்வம் வேண்டி வணங்கிய இராசசேகரனுக்குக் கிடைக்கும் வண்ணம் காட்டினருகே வைத்தார்.

இராசசேகரன் தன் பரிவாரங்களுடன் வேட்டைக்குச் சென்றவன் பம்பா நதிக்கரையில் ஒரு குழந்தை அழுத சத்தம் கேட்டு அவ்விடத்தை நாடினான். இது யார் குழந்தை என அறிய முன்வந்தான். அச்சமயம் ஒரு முனிவர் அவ்விடத்திற் தோன்றினார். மன்னா உனது குழந்தை இல்லாத கவலையை நீக்கவே இக்குழந்தை அவதரித்தது. இதனை எடுத்துச்சென்று அன்புடன் வளர்த்துவா. இதனால் நீ சிறப்படைவாய். இக்குழந்தையின் கழுத்தில் மணிமாலை இருப்பதால் மணிகண்டன் எனப் பெயரிட்டு இன்ப அருள் பெறுவாய். இவனின் பன்னிரெண்டு வயதின் பின் இவன் யாரென அறிவாய் எனக் கூறி மறைந்தருளினார்.

மன்னன் தனக்குக் கிடைத்த குழந்தையை பரிவுடன் எடுத்துச் சென்று தன் மனைவியிடம் ஒப்படைத்தான். மழலைச் செல்வம் இல்லாது வருந்திய அரச தம்பதியர் பெரும் பாச உணர்வோடு குழந்தையை வளர்த்தனர். மன்னனுக்கு இறையருளால் மணிகண்டன் கிடைத்ததையிட்டுக் குடிமக்கள் யாவரும் இன்பக்கடலில் மூழ்கினர். இதே வேளை அரசருக்குப் பிள்ளை இல்லாததால் பிற்காலத்தில் அரச சொத்தைத் தாம் எடுக்கலாமெனத் திட்டமிட்ட பந்தனநாட்டு திவானிடம் பொறாமையும் வஞ்சனையும் குடிகொண்டது.

**மணிகண்டனின் கல்வி கலைப்பயிற்சி**

பெற்றோரின் அரவணைப்பில் வளர்ந்த மணிகண்டன் கல்வி கலை பயிலவும் எதிர்கால அரச பணிக்கான பயிற்சிகளைப் பயிலவும் குருகுலக் கல்வி மூலம் கற்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த குருவிடம் சேர்க்கப்பட்டான். சிறந்த விவேகமும் தகுந்த பயிற்சியும் குறுகிய காலத்திற் கற்றுக் கொண்டான். சீடனின் கற்கை நெறியில் தெய்வீகச் சாயல் இருப்பதை முனிவர் (குரு) புரிந்துள்ளார். சகல பயிற்சிகளும் இனிதே நிறைவு கண்டதும் மணிகண்டன் தனது வீட்டுக்குச் செல்லும் முன் குருதட்சணையாக என்ன தரவேண்டும் என்றான். மணிகண்டனின் சிறப்பை ஏற்கெனவே அறிந்த குரு தனது மகன் கண்பார்வை அற்றும், பேச்சுத்திறனற்றும் இருக்கிறான். அதனைச் சுகப்படுத்தினாற் போதுமென்றார். மணிகண்டன் குருவான முனிவரின் மகனை ஆசீர்வதித்துக் கண்பார்வையையும் பேச்சு வன்மையையும் தந்தான். இந்த நிகழ்வை வேறெவரிடமும் கூறவேண்டாம் எனக் கூறி விட்டுக் குருவிடம் விடைபெற்றான்.

## 12 வயதில் மணிகண்டனுக்கு மணிசூட்டுவிழா ஏற்பாடும் சதியும்

மணிகண்டன் முனிவரிடம் சகல கல்வி கலைகள் போர்ப் பயிற்சிகளையும் நிறைவு செய்து வந்ததும் 12 வயது நிறைவில் முடிசூடி வைக்க ஏற்பாடானது. இச் சமகாலத்தில் மகாராணிக்கொரு ஆண் குழந்தை பிறந்தது. ஏற்கெனவே நெஞ்சில் வஞ்சனை கொண்ட திவான் மணிகண்டனுக்கு நஞ்சு கொடுத்து அழிக்க முற்பட்டான். இறை அருளால் அக் கெடுமதி கைகூடவில்லை. திவான் இராணியிடஞ் சென்று பட்டத்து இராணியாரே உன் மகனை விட்டு வளர்ப்பு மகனுக்கு முடிசூட்டுவது தகாது என்னும் சதியாலோசனையை அவளிடம் வளரச் செய்தான். இராணியும் சதித்திட்டத்தின்படி செயற்பட முன்வந்தாள். ஏற்கெனவே தீட்டிய சதித்திட்டத்தின் படி இராணி தீராத தலைவலியால் வேதனைப்பட்டாள். திவானின் யோசனைப்படி இராணியிடம் அனுப்பப்பட்ட வைத்தியர் இக்கொடிய தலைவலியைப் புலிப்பால் கொண்டுதான் மாற்ற முடியும். உடனடியாக புலிப்பால் எடுத்து வருமாறு வைத்தியர் கூறினார். மனிதரால் புலிப்பால் எடுத்துவருவது முடியாத காரியம் என்பதை உணர்ந்த அரசன் புலிப்பால் கொண்டுவருபவருக்குத் தனது இராச்சியத்தில் அரைவாசியைத் தருவதாக அறிவித்தான். பலர் முயன்றும் பயன் கிடைக்கவில்லை. அரசன் மனவேதனை அடைந்தான்.

அச்சமயம் அரசன் முன் வந்த மணிகண்டன் தான் புலிப்பால் எடுத்துவரப் புறப்பட்டான். மணிகண்டன் 12 வயதுச் சிறுவனாக இருந்ததால் காட்டுக்கு அனுப்ப மன்னன் மறுத்தான். தாயின் அவசிய தேவைக்காகத் தன்னைப் புலிப்பால் எடுத்துவர அனுமதிக்குமாறு மணிகண்டன் கேட்டதால் அவனின் பரிவான வேண்டுதலுக்கு மன்னன் அனுமதித்தான். (தொடரும்...

---

கோபம் பாவத்தைத் தேடும் என்பது பழமொழி. நாம் எந்தப்பொருள் கிடைக்கவில்லை என்ற கவலையால் கோபமுற்றோமோ அந்தப் பொருளே நம்மைவிட்டுப் போவதற்கான வழிவகைகளை நமது கோபம் உருவாக்கிவிடும். கோபம் தாமச குணத்தின் அடையாளம் என்பதால் மனிதனுக்குப் பகுத்தறிவு போய்விடுகிறது. சீதையைச் சிறைமீட்கச் சென்ற அனுமான் இராவணன்மீது கொண்ட கோபத்தினால் இலங்கையைக் கொளுத்தினார். சீதாதேவி இருக்குமிடத்தையும் அந்நெருப்பு எரித்துவிடும் என்ற எண்ணத்தை அவரது கோபம் மறைத்துவிட்டது. வெப்பத்தை ஓரிடத்தில் அடக்கினால் அது சக்தியாக மாறுவதுபோல, கோபத்தையும் அடக்குவதற்குப் பழகிக்கொண்டோமானால் அதுவும் ஒரு நல்ல சக்தியாக மாறும். அந்த சக்தி உலகத்தையே மாற்றக்கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானங்களில் சிறந்தது அன்னதானம்

– இணையத்தில் இருந்து –

ஒருவரின் பசியைப் போக்குவது மிகப்பெரிய புண்ணியம். பல தானங்களைச் செய்த கர்ணனையே பசிக்கொடுமை வாட்டியது. அதற்கு காரணம் கர்ணன் அன்னதானம் செய்யாதது தான் என்று கூறப்பட்டது. அதுபற்றிய சுவையான கதை உள்ளது.

கர்ணனின் கொடைத்தன்மையை உலகம் அறியும். அதர்மத்துக்குத் துணைபோன துரியோதனனுடன் சேர்ந்திருந்ததால், அவனை அழிக்கவேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார் கிருஷ்ணர். குருஷேத்திர யுத்தத்தின் முடிவில், கர்ணன் இறக்கவேண்டும் என்பது விதி. இதற்காகவே அர்ஜுனன் விட்ட சில அம்புகள் அவனைக் காயப்படுத்தினவே ஒழிய உயிரைப் பறிக்கவில்லை. அதற்குக் காரணம் கர்ணன் செய்த தர்மம்தான். அப்போது, அந்தணராக வேடமணிந்து வந்த கிருஷ்ணன் கர்ணன் செய்த தர்மங்களை அவனிடமிருந்து தானமாகப் பெற்றார். அதற்காக, அவனுக்கு மோட்சம் அளித்தார்.

## கர்ணனுக்குப் பசி

சொர்க்கம் சென்ற கர்ணனை உரிய மரியாதைகளோடு எமன் அழைத்துக் கொண்டார். யமன் கர்ணனிடம் நீ நிறையப் புண்ணியங்களைச் செய்ததால் சொர்க்கத்தை நன்றாக அனுபவித்துக்கொள் என்றார். கர்ணன் மகிழ்வுடன் சொர்க்கத்தை அனுபவிக்கிறார். சில காலம் கழித்து அவருக்குப் பசிக்கிறது. தன்னுடன் உள்ளவர்களிடம் உணவு பரிமாறும் இடம் எங்கே என்று கேட்கிறார். சொர்க்க வாசிகள் திகைப்படைந்து, அவரிடம் இங்கிருப்பவர்களுக்கு பசிக்காது. அதனால் உணவு உண்ணும் தேவையே இருக்காது என்கிறார்கள்.

## பசி தீர்ந்தது

தேவகுரு பிரகஸ்பதி அனைத்தையும் கவனித்துக்கொண்டிருந்தார். பின்னர் ஆழ்ந்த தியானத்தில் இதற்கான விடையைக் கண்டுபிடிக்கிறார். பிறகு கர்ணனிடம் வந்து கர்ணனின் ஆட்காட்டி விரலைச் சுவைக்கச் சொல்கிறார். கர்ணன் ஆட்காட்டி விரலைச் சுவைத்தவுடன் பசி தீர்ந்துவிடுகிறது.

## ஆச்சரியப்பட்ட கர்ணன்

கர்ணன் மிகவும் ஆச்சரியப்பட்டான். இதற்கான காரணம் என்ன என்று குரு பிரகஸ் பதியிடம் கேட்க, அவரோ விளக்குகிறார். "கர்ணா பிறப்பால் நீ ஒரு வள்ளல். நீ யார் எதைக்

*உன் மனம் வலிக்கும்போது சிரி. பிறர் மனம் வலிக்கும்போது சிரிக்கவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டாலும் உடனே கொடுத்து விடுவாய். ஆனால் நீ அன்னதானம் மட்டும் செய்யவில்லை, அதனால்த்தான் நீ இங்கே பசியை உணர்ந்தாய் என்றார். ஆட்காட்டி விரலைச் சுவைத்தவுடன் பசி தீர்ந்துவிட்டதே ஏன்? எனக் கேட்கிறார்.

## ஆள்காட்டி விரல் புண்ணியம்.

அதற்குக் குரு "கர்ணா ஒருமுறை ஒரு ஏழைப் பிராமணர் உன் வீட்டிற்கு வந்து உணவு கேட்டார். நீ பொதுவாக அன்னதானம் செய்யும் வழக்கம் இல்லாததால் அதை மறுத்துவிட்டாய், ஆனால் உன் ஆட்காட்டி விரலால் அன்னதானம் நடக்கும் இடத்தை அந்த ஏழைப்பிராமணர்க்குக் காட்டினாய். அவரும் அங்கே சென்று சாப்பிட்டு தன் பசியை ஆற்றிக்கொண்டார். அந்தப் புண்ணியம் உன் ஆட்காட்டி விரலில் இருந்ததால் நீ ஆட்காட்டி விரலைச் சுவைத்தவுடன் பசி தீர்ந்துவிட்டது என்று கூறினார்.

## பூலோகம் வந்த கர்ணன்

கர்ணன் கண்களில் நீர் கசிந்தது. அடடா அன்னதானத்திற்கு இத்தனை புண்ணியம் இருக்கிறதா என்று நினைத்துக்கொண்டு உடனே எம தர்மராஜனிடம் சென்று வேண்டுகோள் வைத்தார். நான் ஒரு பட்சம் மனித உடலுடன் பூலோகம் செல்ல அனுமதி வேண்டும், நான் போய் அன்னதானம் செய்துவிட்டு வருகிறேன் என்கிறார். எமதர்மராஜனும் அனுமதிக்கிறார்.

## மகாளயபட்ச அன்னதானம்

கர்ணனும் பூலோகம் வந்து யாரும் அடையாளம் கண்டுகொள்ளாத இடத்தில் அன்னதானம் செய்கிறார். பதினைந்து நாட்கள் முடிந்தவுடன் எமன் மீண்டும் வந்து மனித உடலைத் துறந்துவிட்டு சொர்க்கம் வரச் சொல்கிறார். கர்ணன் மகிழ்வுடன் செல்கிறார்.

## எமன் மகிழ்ச்சி.

கர்ணா, மனிதர்கள் பூலோகத்தில் உள்ள சுகங்களை அனுபவிக்கவே மீண்டும் மீண்டும் பூலோகம் வர வேண்டும் என்று கேட்பார்கள். ஆனால் நீங்கள் எதற்காக மனித உடலுடன் பூலோகம் வந்தீர்களோ அதை முழுமையாக முடித்துவிட்டு, உங்கள் வார்த்தை களைக் காப்பாற்றி விட்டீர்கள். நீங்கள் இப்போது ஒரு வரம் கேட்கலாம் என்கிறார் எமன்.

## அன்னதானம் செய்ய வேண்டும்.

கர்ணன் உடனே மகிழ்ச்சியடைந்தார். எமதர்மராஜரே! மனிதர்கள் தங்கள் முன்னோர்களுக்கு திதி, உணவு அளிக்க மறந்துவிடுகிறார்கள். அதனால் இந்த மகாளய பட்ஷத்தில் முன்னோர்களுக்காக செய்யும் திதி, மற்றும் அன்னதானம் கர்மங்கள் செய்ய சந்ததி இல்லாத முன்னோர்களைக்கூட சென்று அடையவேண்டும். கர்மவினைகளால் பூமிக்கும் சொர்க்கத்துக்கும் இடையில் தவிக்கும் முன்னோர்களையும் இந்தப் பலன் சென்றடைய வேண்டும் எனக் கேட்கிறார். எமன் மகிழ்வுடன் ஒப்புக்கொள்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முன்னோர்களுக்கு உணவு

சூரியனின் மைந்தர் கர்ணனே! அன்னதானத்தின் மகிமையை உணர்ந்து பூமியில் வந்து தர்மம் செய்த மகாளயபட்ச காலத்தில், நாம் எல்லாருமே முன்னோர்களை வரவேற்று 14 நாட்களும் தர்ப்பணம் முதலானவை செய்ய வேண்டும். புண்ணிய தீர்த்தத் தலங்களுக்குச் சென்று எள், தண்ணீர் இறைத்து, அவர்களது தாகம் தீர்க்கவேண்டும். இந்தக் காலகட்டத்தில் வரும் பரணி, மஹாபரணி என்றும், அஷ்டமி, மத்பாஷ்டமி என்றும் திரயோதசி கஜசஜசாயை என்றும் கூறப்படும். இந்த நாட்களில் தானம் கொடுப்பது சிறப்பு. யார் இந்த மகாளய பட்சத்தில் உணவு அளிக்கிறார்களோ அவர்கள் பாக்கியம் பெற்றவர்கள்.

### தலைமுறைக்கும் உணவு கிடைக்கும்

மாதந்தோறும் முன்னோர்களுக்கு தானம் செய்யமுடியாதவர்கள் இந்தக் காலத்தில் தானங்களைச் செய்வதால் பன்னிரண்டு மாதங்களிலும் செய்த பலன் கிடைக்கும் என்பது ஐதீகம். கடைசி நாளான மகாளய அமாவாசையன்று முன்னோர்களுக்கு பிடித்தமான படையல் படைத்து, அதை ஏழைகளுக்கு அன்னதானம் செய்ய வேண்டும். மகாளயபட்ச காலத்தில், நம் முன்னோருக்காக விரதம் அனுஷ்டிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம், முன்னோரின் ஆசி நமக்குக் கிடைக்கும். நம்முடைய பல தலைமுறைக்கு மட்டுமின்றி, உலகிலுள்ள பிறருக்கும் பசியின்றி உணவு கிடைக்கும் என்பது ஐதீகம்.

---

## இயற்கைக்கும் அறிவிற்கும் உள்ள உறவு

ஒடுங்கியும், விரிந்தும், பொருளாகவும், கருத்தாகவும், நன்மையாகவும், தீமை யாகவும், இன்பமாகவும், துன்பமாகவும் இயங்கும் அறிவை உடைய மனிதன் எந்த அளவுக்கு, எவ்வளவு ஆழ்ந்து இயற்கையை, அதன் உண்மைகளை, இரகசியங்களை உணர்ந்து கொள்கிறானோ அந்த அளவிற்கே அவன் வாழ்வில் வெற்றியும், மகிழ்ச்சியும், நிறைவும், அமைதியும் பெறுகிறான். இயற்கையை, அதன் விரிவான இயக்க ஆற்றல்களை, மனிதன் அறியாமலோ, அல்லது அறிந்தும் மறந்தோ, புலனளவில் குறுகி இயங்கும்போது அறிவு, காலம், தூரம், வேகம், பருமன் என்ற பரிணாமங்களால் கருத்தாகவும், வடிவமாக வும் மாற்றம் பெற்று உயர்வு தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகின்றது.

இந்த நிலையில் அறிவுக்கு தன்முனைப்பு எனும் சிறுமை நிலை உண்டாகின்றது. இந்த சிறுமை நிலையில் மயக்கம், உணர்ச்சி, பயம், மிரட்சி, விளைவறியாச் செயல்கள், சிக்கல், கவலை இவை தோன்றிப் பெருகித் துன்பமடைகின்றது. இயற்கையோடு விரிந்தும் ஆழ்ந்தும், அதன் பெருமையோடு ஒன்றும்போது விளக்கம், விழிப்பு, அன்பு, கருணை, நிறைவு, அமைதி, மகிழ்ச்சி, இவை பெற்று அமைதி பெறுகிறது. இங்கு "தன்முனைப்பு" என்ற திரை விலகி இயற்கை என்ற அருட்பேராற்றலோடு இணைந்து மனிதன் பேரின்பமடைகிறான். எனவே, இயற்கையோடு ஒன்றி, உணர்ந்து, தெளிந்து விழிப்புடன் வாழ்வதே ஆறாவது அறிவைப் பெற்ற மனிதனின் பிறவி நோக்கமாகும். இந்த நோக்கத்திற்கு ஒப்ப வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற உள்ளுணர்வே தெய்வ வழிபாடாக உருவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருமூலர் தவமொழி

– திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள் –

திருமூலர் கலைகளையெல்லாம் கற்றுத் தேர்ந்தவர். வைத்தியம், இரசாயனம், பௌதீகம், வானசாஸ்திரம் முதலிய எல்லாத் துறைகளிலும் வல்லவர். சாதாரண மனித அறிவின் எல்லைக்குள்ளும், அதற்கு அப்பாலும் விரிந்து பரந்து நிற்கின்ற தத்துவங்களையெல்லாம் மெய்யுணர்வினால் கண்டு பேசுகின்ற ரிஷி என்பதைத் திருமந்திர நூலில் பல இடங்களிலும் வியக்கத்தக்க விதத்தில் காணமுடிகிறது.

அறிவுக்கு அப்பாற்பட்ட தத்துவங்களை விளக்குவதற்காக அறிவுக்குப் புலனாகின்ற உண்மைகளை உதாரணம் காட்டுவார்.

சூரிய காந்தக்கல் என்றொரு வகையான "லென்ஸ்". அதன் கீழே பஞ்சை வைத்து சூரியனுடைய கதிர்களை அந்தக் கண்ணாடியூடாக செலுத்தினோமானால் பஞ்சு தீப்பற்றிக் கொள்ளும். சூரிய காந்தக் கல்லுக்குச் சூரியனின் கதிர்க்கோலைக்கூப்பி செலுத்தக்கூடிய இயல்பு இருக்கிறது. பஞ்சு தீப்பிடிக்கும் இயல்பு கொண்டது. எனினும் சூரியகாந்தக் கல்லையும் பஞ்சையும் ஒன்று சேர்த்து வைத்துக் கொண்டிருப்பதால் தீப்பிடிக்கிறதா? இல்லை! சூரியனுக்கு எதிரே கல்லைக் காண்பிக்க வேண்டும். அப்போதுதான் சூரியனிடமிருந்து ஒளிக்கற்றையைப் பெற்று அதைக் குவித்துப் பஞ்சிலே பாயச்செய்யும்போது தீப்பற்றுகிறது.

இந்த இயற்கை உண்மையை எடுத்துக்கொண்டு பெரிய ஆன்ம தத்துவத்தை விளக்குகிறார் திருமூலர்.

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே,<br>
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா

இந்த ஆன்மாவோடு மும்மலமாகிய அழுக்குப் பிணைந்து கிடப்பது, சூரிய காந்தக் கல்லோடு பஞ்சைச் சுற்றி வைத்திருப்பதுபோல! ஆன்மாவாகிய சூரியகாந்தக் கண்ணாடிக்கு இந்த பாசமாகிய பஞ்சைத் தன்னியல்பாக சுட்டெரித்துவிட முடியாது!

சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல்<br>
சூரியன் தோற்றம்முன் அற்ற மலங்களே.

இறைவன் குருவாகி வந்து தன்னுடைய ஞான ஒளியை இந்த ஆன்மக் கண்ணாடிக்குள்ளே செலுத்தினாலன்றி ஆணவம், கன்மம், மாயை என்ற பாசமலங்கள் எரியமாட்டா.

சூரியகாந்தக் கல்லும் பஞ்சும் ஒன்றாகப் பொதிந்து வைத்ததுபோல் இந்த உடம்புக்குள் ஆன்மாவைச் சுற்றி மும்மல அழுக்குகள் சூழ்ந்து நிற்கின்றன. இந்த மாசுகள் அகலுவதற்காக அந்த சூரியகாந்தக் கல்லை என்ன செய்யவேண்டும்? ஞான குருவாகிய இறைவனை நோக்கி நிறுத்த வேண்டும். அப்படி நிறுத்தினால் பஞ்சு எரிவதுபோல் மாசுக்கள் எரிந்துவிடும்.

சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா தாமாகவே தன்னைச் சூழ்ந்த மாசுக்களைக் களைந்து கொள்ள இயலாது.

சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல்
சூரியன் தோற்றம்முன் அற்ற மலங்களே.

(சூரியன் சந்நிதியில் சூரியனுக்கு முன்பாக, சுடுமாறு போல் சுடுவது போல் சூரியன்- இறைவனுடைய ஞானகுரு சொருபம். தோற்ற முன்- தோற்றத்தின்முன்; அவனுடைய ஞான நோக்கு பாய்ந்தவுடன், அந்த தரிசன ஒளியிலே "அற்ற" என்பது பன்மை வினை முற்று- தீர்த்து விடுகின்ற, சந்தேகமில்லை அறவே தீர்ந்து விட்டன. மலங்களே- ஆன்மாவைப் பிணைத்துள்ள பாச அழுக்குகள்.

இறைவனாகிய குருவின் சந்நிதியில் ஆன்மா தன்னை நிறுத்திக்கொண்டால், அந்த ஞானக் கதிரொளியின் வேகத்தினால் மாசுக்கள் எரிந்துபோய் விடுகின்றன. பூதக் கண்ணாடி வழியாக வருகின்ற சூரிய கிரகணம் பஞ்சை எரிப்பதுபோல.

ஆன்மாக்களின் நிலைக்கு ஏற்ப இறைவனே குருவாக வந்து ஞானம் வழங்குகிறான் என்பது சித்தாந்தம். குருவைச் சூரியனுக்கும் குருவருளைச் சூரியனுடைய கதிருக்கும் ஆன்மாவைச் சூரியகாந்தக் கல்லுக்கும், மும்மல அழுக்கை பஞ்சிற்கும் உவமானம் காட்டி இந்த உண்மையை விளக்குகிறது இத் திருமந்திரப்பாடல்.

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ் பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல்
சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே.

இறைவனே குருவாக வந்து ஞானத்தை ஊட்டுகிறான் என்பது நமது சமயக் கொள்கைகளின் அடிப்படையாகும். ஆசாரியனைத் தெய்வமாகக் கொண்டு வழிபடுவது ஒன்றே, பூட்டைத் திறப்பதற்குரிய திறவுகோல், இந்த மூல உண்மையை நமக்கு அறிவுறுத்துகிறார் திருமூலர்.

குருவின் உருவத்தில் வந்து தமக்குத் திருவருள் புரிகின்ற அந்தத் திருமேனியை தரிசிப்பதே ஞானத்திற்கு வேண்டிய பயிற்சி. குருநாதனின் திருநாமத்தை செப்புவது, குருபெருமானின் திருமொழிகளைச் செவியில் கேட்பது, அவனுடைய திரு உருவத்தை எப்போதும் பெறுவதற்குரிய வழிகளாம். இதை இப்பாட்டின்மூலம் திருமூலர் தெளிவுபடுத்துகிறார்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉருச் சிந்தித்தல் தானே.

(தெளிவு- ஞானம்; ஞானத்தை பெறும் முறைகளுக்கும் அதுவே ஆகுபெயர். முடிவில் முறையும் பயனும் ஒன்றாகும். முறையே பயனாக முற்றும்)

காண்பது அவனது திருமேனியை. மந்திரம் அவனுடைய திருநாமம். கேட்பது அவனுடைய திருவார்த்தை. சிந்திப்பது அவனுடைய திருவுருவத்தை. இவை எல்லாம் ஞானத்தை அடையும் வழியாகும். (தொடரும்...

*சேமிக்கக் கற்றுக்கொள். சிக்கனம் தானாக அமையும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியுகத்தில் பக்தி

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

ஒரு காலத்தை வெல்ல வேண்டுமானால், அக்காலத்துக்கேற்ற செயலை நாம் செய்தாக வேண்டும். எக்காலத்திலும் எல்லாச் செயலையும் யாம் செய்துவிட முடியாது. அவ்வாறு செய்தல் பொருத்தமுமாகாது. காலம் யுகங்களாக வகுக்கப்பட்டுள்ளது. ஆயிரம் சதுர்யுகங்களையும் ஒரு "கல்பம்" என்றழைப்பர். கல்பம் முடிவுக்கு வந்ததும், உலகம் பிரளயத்தில் அழிந்துபோய்விடும். மீண்டும் அடுத்த கல்பம் தொடங்கும்போது அத்தனை உலகங்களும் படைப்புக்குள் இடம் பெறும்.

இவ்வாறு காலம் படைத்து, காத்து, அழிக்கின்றது என்ற வகையிலே கடவுளே கால வடிவை எடுக்கின்றார் என்பது கண்கூடு.

கிருதயுகம், திரோதாயுகம், துவாபர யுகம், கலியுகம் என்னும் நான்கு யுகங்களுக்கும் நான்கு வெவ்வேறு வழிபாட்டு முறைகள் கூறப்பட்டுள்ளன.

வழிபாட்டு முறைகளில், கிருத யுகத்திற்கு தியானமும், திரோதாயுகத்திற்கு யக்ஞங்கள் என்னும் கர்ம வழியும், துவாபர யுகத்திற்கு அர்ச்சித்தலும், கலியுகத்திற்கு பக்தியும் கூறப்பட்டுள்ளது.

கலியுகத்தில் விஷ்ணு மேல் பக்தி கொண்டு பகவானை அடைந்தவர்கள் என ஸ்ரீ ஆண்டாள், ஆழ்வார்கள், மீரா, இராம தாஸர், கபீர்தாஸர், துளசிதாஸர், ஞானேஷ்வர் ஆகியோரை விஷ்ணு புராணம் குறிப்பிடுகின்றது. சைவத்தில் காரைக்கால் அம்மையாரில் ஆரம்பித்து சமய குரவர்கள், சந்தான குரவர்கள் மற்றும் மெய் அடியார்கள் சிவனார் மேல் பக்தி செய்து முத்தி எய்தியதை யாம் அறிவோம்.

கலியுகத்திற்கு மிகவும் ஏற்றது பக்தி மார்க்கமே.

பக்தியைப்பற்றி பல்வேறு விதத்தில் கூறலாம். இறைவனால் ஆட்கொள்ளப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தினால் இறைவன் மேல் பற்றுக்கொள்வதும் பக்திதான். இறைவனது அருட்செயல்களையே மீண்டும் மீண்டும் கேட்கப் பிரியப்படுவதும் பக்திதான். இறைவனது அன்பைப்பெற ஏங்குவதும் பக்திதான். இறைவனின் மூர்த்தம் ஒன்றை அபிடேகித்து, பூசித்து, அலங்கரித்து, விழா எடுப்பதும் பக்திதான். இறைவன் இன்னருள் பெற விரதமிருத்தல், உபவாசமிருத்தலும் பக்திதான்.

பக்தி செய்யும்போது ஒருவனது மனம் உலக விடயங்களில் தனது ஈடுபாட்டைக் குறைத்துக்கொள்கின்றது. ஆண்டவனைத் தன் உயிராகக் கருதி ஈடுபடுகின்றது. ஆண்டவனிடம் தன்னை அர்ப்பணிக்கின்றது. அவனிடம் அடைக்கலம் புகுகின்றது. இறைவனைச் சிந்திக்கும் பொழுதையே தவப் பொழுதாகவும், மற்றைய பொழுதை அவப் பொழுதாகவும் கருதுகின்றது.

பக்தி மனத்தை நெகிழ்ச்சி செய்து, உணர்வுகள் அனைத்தையும் இறைவனிடம் ஒன்றிவிடச் செய்கின்றது.

இறையின்பம் வேறு, உலக இன்பம் வேறு. இறை இன்பம் நிரந்தரமானது. ஆனால், உலகப் பொருள்கள் தரும் இன்பம்

*கட்டுப்பாடற்றவன் கௌரவம் இழப்பான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறல்ல. உலகத்தில் காணப்படும் பொருள்கள் எல்லாம், எல்லோர்க்கும் எப் போதும் இன்பம் தரா. சில பொருட்கள் சில ருக்கே இன்பம் தரும். பலருக்குப் பயன்தரா.

இதிலிருந்து அவரவர் விருப்பம் எதிலோ, அப்பொருளில்தான் இன்பம் பெற முடியும் என்பது விளங்குகின்றது. ஆகவே, விரும்பும் மனதால் தான் எந்தப் பொருளிலும் இன்பம் உண்டாகின்றது. எனவே மனதின் விருப்பமே இன்ப துன்பத்திற்கு காரணமாக அமைகின்றது என முடிவு செய்யலாம்.

நிலையற்ற பொருளுக்குப் பொருள் தாவும் மனதை நாம் கட்டிப்போட்டேயாக வேண்டும். கட்டிப்போடும் கம்பமே கடவுள், கயிறே பக்தி.

ஆலயத்துக்குச் செல்வதோடு, ஆலய வழிபாட்டின்போது நாம் கடைப்பிடிக்க வேண் டிய விதிமுறைகளையும் நாம் கவனித்தாக வேண்டும். ஆலயத்துக்குச் செல்லும்போது எமது அகமும், புறமும் தூய்மையானதாக இருக்கவேண்டும், எமது எண்ணங்களை இறை வழிபாட்டில் முற்றாகச் செலுத்த வேண்டும். எமக்குத் தெரிந்தோரை ஆலயத்தினுள் சந் திக்க நேர்ந்தாலும் அவர்களோடு குசலம் விசாரித்து, ஆலயத்தின் அமைதியான சூழ லைக் குலைப்பது, வரவேற்பதற்கில்லை. ஆல யத்துள் ஒருவரோடு ஒருவர் பேசுதல், சுகம் விசாரித்தலைத் தவிர்த்துக்கொள்ளல் பண் பாகும்.

ஆலய அமைப்பிற்கும், எம்முடைய உடம்பின் அமைப்பிற்கும், உலகத்தின் அமைப் பிற்கும் மிக மிக நெருங்கிய தொடர்பு உண்டு.

உலகம் பஞ்சபூதங்களால் ஆனது. மண், நீர், தீ, வளி, வான் என்பன ஐம்பூதங் களாகும். இவற்றை பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்றும் அழைப்பதுண்டு. உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்பதை, "நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்" என தொல்காப்பியர் மரபியலிற் கூறியுள்ளார்.

இதேபோன்றுதான் எமது உடம்பும் ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆனதே. "அண்டத்தில் உள்ளது பிண்டத்தில்" என்பது ஞானிகள் வாக்கு.

தமிழ் நாட்டிலே அமைந்த திருத்தலங் களில் பிருதுவித் தலமாக காஞ்சிபுரமும், அப்புத் தலமாக திருவானைக்காவும், தேயுத் தலமாக (அதாவது அக்கினித் தலமாக) திரு வண்ணாமலையும், வாயுத் தலமாக திருக் காளத்தியும், ஆகாயத் தலமாக சிதம்பரமும் அமைந்துள்ளன.

ஒரு ஊர், அங்கு அமைந்துள்ள ஆலயத்தினாலேயே மேன்மை பெறுகின்றது என்றால் மிகை ஆகாது. ஊர் மக்களுக்கு ஆத்மீக பலத்தையும், பாதுகாப்பையும் அவர் கள் மனிதர்களாக வாழும் பக்குவத்தையும் அருளுவதும், வழிகாட்டுவதும் அங்கு அமைந் துள்ள ஆலயமே ஆகும். ஒரு ஊரில் அமைந் துள்ள ஆலயத்தின் அழகுமிகு கோபுரமே, அவ்வூருக்கு மகுடமாக அமைகின்றது. ஆல யம் இல்லாத ஊர் அடவிகாடாகும் என்பது அப்பர் சுவாமிகள் வாக்காகும். இக்கருத்தைக் கொண்ட அப்பர் பாடல் ஒன்றைக் கேட்டுப் பாருங்கள்.

திருக்கோயில் இல்லாத திருவிலூரும்
திரு வெண்ணீறணியாத திருவிலூரும்
பருக் கோடிப் பத்திமையால் பாடாவூரும்
பாங்கினொடு பல தளிர்கள் இல்லா ஊரும்

*அறிவு தலைக்குக் கிரீடம். அடக்கம் காலுக்குச் செருப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பொடு வெண் சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண் கொடியும் இல்லா ஊரும்
அருப்பொடு மலர் பறித்திட்டு உண்ணா ஊரும்
அவை எல்லாம் ஊர் அல்ல அடவி காடே!

இது அப்பர் பாடல். இப்பொழுது தமிழ் நாட்டில் சரி, எமது நாட்டில் சரி பெரிய ஆலயங்கள் பல அமைந்துள்ளன.

ஆனால் வேத காலத்தில் ஆலயங்கள் என்ற தனிப்பட்ட வழிபாட்டுத் தலங்கள் அமைந்ததாக இல்லை. இயற்கை சூழ்நிலைகளே வழிபாட்டுக்குரிய இடங்களாக அமைந்தன.

வேள்வித் தீயின் மூலம் வழிபாடு நடாத்தி, இறை ஆசி பெற்றனர் வேதகால மக்கள். நதிக்கரைகளிலும், சோலைகளிலும் தெய்வ வணக்கம் நிகழ்ந்தன. அத்தகைய விருட்சங்கள் தல விருட்சங்கள் ஆயின.

காலப்போக்கில் ஆகமங்களை அனுசரித்தே ஆலயங்கள் அமைக்கப்பட்டன. ஆரம்பத்தில் மலைகளைக் குடைந்தும் கற்களை அடுக்கியும் காலப்போக்கில் பிரமாண்டமான ஆலயங்கள், மன்னர்களால் கட்டி எழுப்பப்பட்டன.

மானிட சரீரமே ஆலயங்களுள் சிறந்தது என்பதை ஆன்றோர்கள் அங்கீகரித்துள்ளமை யாம் எல்லோரும் அறிந்ததே. எனவே எமது ஆத்மீக முன்னேற்றத்திற்கு ஆலய வழிபாடு மிக அவசியம் என்பதை நாம் மனதிற்கொள்ள வேண்டும்!.

## கந்தன் காலடியைத் தொழுவோம்

எங்கிருந்தோ மணியோசை காதில் விழுகுதே
இங்கிதமாய் உள்மனது மகிழ்ந்து குளிருதே
பங்கமில்லா வாழ்வுயரப் பலதிசையும் கேட்குதே
பாடலொலிபோல மணியோசை காதில் இனிக்குதே
அதிகாலை வேளை விரும்பிக் கேட்டுக் கண் விழித்துப்பார்
அதில் அமைதிதெரியும் அன்புபெருகும் இறையை நினைத்துப்பார்
கதி அவன்தாள் என்றே மகிழ்ந்து கண்ணை விழிப்போம்
கவலை இன்றி வாழ்வுயரக் கந்தன் காலடி தொழுவோம்.

*-சின்னப்பு தனபாலசிங்கம்-*

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆகஸ்ட் | 14 | ஆடி | 29 | சனி | மயில்வாகனம் சுவாமிகள் |
| | | | | | சுந்தரமூர்த்தி நாயனார் |
| செப் | 04 | ஆவ | 19 | சனி | நீலகண்ட சிவாச்சாரியார் |
| செப் | 14 | ஆவ | 29 | செவ் | குங்குலியக்கலயர் |
| செப் | 20 | புர | 04 | திங்கள் | கடையிற் சுவாமிகள் |

*உறுதியான உள்ளம் உலகை வெல்லும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கரன்பாற் சேர்ந்தேன்

– முருகவே பரமநாதன் அவர்கள் –

சைவம் சிவத்தோடு தொடர்புடையது. இதை மாறிப் போட்டால் சிவசம்பந்தமானது சைவம். சிவன் செம்மையானவன். அப்பரம்பொருள் செம்பொருள். சிவனைச் சங்கரன் என்றும் சொல்வர். தாயுமானவர் ஆனந்தக் களிப்பில் சங்கரனைப் பாடினார்.

சங்கர, சங்கரசம்பு - சிவ
சங்கர, சிவசங்கர சங்கர சம்பு.
-56. ஆனந்தக்களிப்பு.

சங்கரன்- (சம் + கரன்) நலத்தைச் செய்பவன். சம்பு- ஆனந்தத்தைக் கொடுப்பவன், சிவன் மங்கலமானவர். அந்த மங்கலம் சக்தியால் வந்தது. அப்பர் பெருமான் சொல்லோவியங்களிலே சங்கரன் முக்கிய இடம்வகிக்கிறார்.

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத்தயனோடு மாலுங்காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி.
-அப்பர் 6:32:6.

சங்கரன்- இன்பத்தைத் தருபவன், போற்றி- வணக்கம்.

சங்கரன் காண் சக்கரம் மாற் கருள் செய்தான் காண்
தருணேந்து சேகரன்காண் தலைவன்தான் காண்
அங்கமலத் தயன் சிரங்கள் ஐந்தி லொன்றை
அறுத்தவன்காண் அணி பொழில்சூழ் ஐயாற்றான் காண்
எங்கள் பெரு மான்காண் என் னிடர்கள் போக
அருள் செய்யும் இறைவன் காண் இமை யோரேத்துஞ்
செங்கமல வயல் புடைசூழ் திருவாரூரில்
திருமூலட்டானத்தெஞ் செல்வன் தானே.
-6:30:6.

சிவபிரான் உயிர்களுக்கு இன்பத்தைத் தருபவன். சடைமுடியிற் சந்திரனைக் கொண்டவர். நான்முகனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்தவர், பொழில்கள் சூழ்ந்த ஐயாற்றில் அமர்பவர்; எனது இடரைக் களைந்து அருள்பாலிக்கும் அருட்சீலர், விண்ணவர் போற்றும் திருவாரூரில், திருமூலட்டானத்தில் உறையும் எம் செல்வன் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெறுமாறெ ண்ணுதியேல் நெஞ்சேநீவா
நித்தலு மெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந் தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலை புனல் சேர் செஞ்சடை யெம் ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே. -6:31.1.

புலர்வதன்முன்- வைகறையில், அலகிடல்- கூட்டல், தலையார- தலை தாழ்த்திப் பன்முறையும் பிரார்த்தித்து, அலறுதல்- கத்துதல்.

இவ்வரிசையிலே திருவாசகச் செம்மல் பல இடங்களிலே சங்கரன் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார்.

சங்கரா போற்றிமற்றோர் சரண் இலேன் போற்றிகோலப்
பொங்கு அரா அல்குல் செவ்வாய் வெண்ணகைக் கரிய வாள்கண்
மங்கையோர் பங்கா போற்றி மால் விடை ஊர்தி போற்றி
இங்குஇல் வாழ்வாற்ற கில்லேன் எம்பிரான் இழித்திட்டேனே.
-திருவாசகம் சதகம் 65.

சுகம் கொடுப்பவனே வணக்கம். நின்னைத் தவிர வேறு புகல் இல்லாதேன் வணக்கம். சீற்றங்கொண்ட பாம்பின் அழகிய படத்தையொத்த நிதம்பத்தையும், சிவந்த இதழையும், வெண்மையான பல்லினையும் ஒளிமிக்க கண்களையும் உடைய மங்கைப் பருவத்தினளாய உமையம்மையைப் பாகமாக உடையவனே! வணக்கம், அரியைக் (அரி- திருமால்) காளை வாகனமாய் உடையவனே வணக்கம். இல்வாழ்க்கையை யான் பொறுக்க இயலாதேன், எம்பெருமானே- இதனை அருவருத்துவிட்டேன். சரண்- புகலிடம், வாட்கண்- வாள்போன்ற கண்

எம்பெருமான் பெருமையை அருளாளர் பாடிப் பரவிப் பரவசமாயினர். நாயன்மாரும், ஆழ்வார்களும் ஒருவகையான கவிஞர்கள்தான்.

இன்று கவிஞர்களுக்குப் பஞ்சமே இல்லை. கவிதை நூல்களுக்கும் பஞ்சமே இல்லை. பழைய மரபுப் புலவர்கள் வறுமையான வாழ்வமைதி உள்ளவர்கள். ஒரு புலவன் தனது பரிதாப நிலையைப் பாவம் நிறைந்த கவிதையாக வடித்துள்ளான். அது நம் நெஞ்சத்தைத் தொடுகிறது.

வஞ்சகர்பால் நடந் தலைந்த காலிற்புண்ணும்
வாசல் தொறு முட்டுண்ட தலையிற் புண்ணும்
வெஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பாற் சென்றேனப்பா
கொஞ்சமல்ல பிரம் படியின் புண்ணும்
வேடன் கொடுங்காலால் உதைத்த புண்ணும்
பஞ்சவரில் ஒருவன் வில்லால் அடித்த புண்ணும்
பாரென்றே காட்டி நின்றான் பரமன் தானே. -தனிப்பாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஏழைப் புலவன் வசதிபடைத்தவர்களின் வீடுகளை நாடி நாடிக் களைத்து காலிலே காயங்களும் பட்டான். வீடுதோறும் சென்றபோது அவனின் தலையில் அன்றைய பதிந்த வீட்டுத் தாழ்வாரம் முட்டி முட்டிக் காயம் வந்ததுதான் மிச்சம். அவர்களெல்லாம் இந்தத் தமிழ்ப் புலவனைப் பார்த்து பரிகசித்த வெஞ்சொற்கள் அவன் மனதையே புண்ணாக்கி விட்டன. அப்படி அவமானப்பட்ட புலவன் செய்வதறியாது சிவனிடம் சென்று தன் முறைப்பாட்டை முன்வைத்தான். சிவனோ அவனைப் பார்த்து, தான் பட்டபாடுகளைக் காட்டிய தாக இப்பாடல் எடுத்துப் பேசுகிறது. பாண்டிய மன்னன் வந்திக்காக முறிப்பையடைத்த சிவனுக்கு பிரம்பினாலே முதுகில் அடித்ததும், கண்ணப்பன் கண்ணையப்ப தன்காலால் கண்ணைத் தொட்டு நின்ற காட்சியையும், அருச்சுனன் பன்றி வேட்டையில் சிவனோடு மாறு பட்டு அவனுக்கு வில்லால் சாத்திய காயத்தையும் காட்டியதாக இப்பாடல் வடிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுலகத்தையே இயக்கும் எம்பெருமானின் நிலையிப்படியென்றால் நம்மைப் பற்றிப் பேசவே வேண்டியதில்லையன்றோ. மணிமொழியார் பிரம்படிபட்ட பட்டறிவைப் பாவாக வார்த்துள்ளார்.

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன்
கண்சுமந்த நெற்றிக்கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன் மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

-திருஅம்மானை.

பண்சுமந்த பாடற் பரிசு- பண்களைக் கொண்ட பாடலைப் பாடும் பண்பு. மொத்துண்டு- அடிபட்டு, கலிமதுரை- முழக்கம், இரைச்சல் நிறைந்த மதுரை. இக்காட்சியைத் தமிழ் விடுதூது "பண்சுமந்த பாட்டினிற்கும், பாவை தந்த பிட்டினிற்கும் மண் சுமந்த சோதி மணி முடியும்" எனப் படம் பிடித்துக் காட்டி இருக்கிறது.

பட்டினத்தாரும் இக்கருணைப் பாட்டைப் பாடுகிறார்.

வாளால் மகவரிந்து ஊட்டவல் லேனல் லேன் மாது சொன்ன
சூளால் இளமை துறக்க வல் லனல்லன் தொண்டு செய்து
நாளாறிற்கண் இடந்துஅப்ப வல்லே னல்லன் யான் இனிச் சென்று
ஆளாவது எப்படியோ திருக்காளத்தி அப்பனுக்கே.

-பட்டினத்தார் பாடல் 29.

சம்பந்தர் "எனதுரை தனதுரையாக" என்று கூறுகிறார். அப்பரோ "பாமாலை பாடப் பயில்வித்தானை" எனப் பாட்டுக் கட்டினார். "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை" என வாதவூரர் பதிவுசெய்துள்ளார். அர்ச்சனை பாட்டேயாதலின் சொற்றமிழ் பாடுக என ஆக்ஞை பிறப்பித்தார். இந்த அடிப்படையிலே நம்பியாரூரர் பொய்மையாளரைப் பாடாதேயென்றார்.

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்கி னும் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடா தேஎந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே. -7:10.1.

புலவர்களே! தம்மையே விரும்பிப் புகழ்ந்து பேசினும், சார்ந்திருந்தாலும், இந்நிலை கொண்ட அடியவர்களுக்கு ஒன்றுமே கொடாத பொய்யரைப் பாடுவதை விடுத்து, எம் தந்தையாகிய திருப்புகலூர்ப் பெருமானைப் பாடுங்கள். அவ்வண்ணம் பாடினால் அவன் இப்பிறப்பில் உண்ண உணவும், உடுக்க உடையும் கொடுப்பதோடு மறுமையில் சிவலோகம் செல்வதற்குரிய நிலையையும் தருவான். இதிற் சந்தேகமே இல்லை. எனவே எம் துன்பம் நீங்க அவன் புகழ் பாடுவோம் வாருங்கள்.

இந்த வரிசையிலே நம்மாழ்வார் தன் பாசுரங்களில் ஸ்ரீமந் நாராயணனைப் பாடுங்கள். என எமக்கு அறிவுறுத்தத் தவறவில்லை.

சொன்னால் விரோதம் இது ஆகிலும்
சொல்லுவன் கேண்மினோ
என்னாவில் இன்கவி யானொரு
வர்க்கும் கொடுக்கிலேன்
தென்னா தென்னா வென்று வண்டு
முரல் திரு வேங்கடத்து
என்னானை என்னப்பன் எம்பெரு
மானுள னாகவே. -திருவாய் மொழி 3:9.1.

சொன்னால் உங்கட்குப் பிடிக்காது. என்றாலும் சொல்லவேண்டியது என் பொறுப்பு. கேட்கலாம் விடலாம் அது உங்கள் நோக்கு. நான் இப்பிறவியில் திருவேங்கட நாதனைப் பாடுவதன்றி என்னாவால் வேறு யாரையும் பாடமாட்டேன். ஏனென்றால்,

என்னாவ தெத்தனை நாளைக்குப்
போதும் புலவீர்காள்
மன்னா மனிசரைப் பாடிப்
படைக்கும் பெரும் பொருள்?
மின்னார் மணிமுடி விண்ணவர்
தாதை யைப் பாடினால்
தன்னாக வேகொண்டு சன்மம் செய்
யாமையும் கொள்ளுமே.
சென்மம் - பிறவி. -திருவாய் மொழி 4.

எனவே அருளாளர்களின் திருவாக்கை மனதிற் கொண்டு புனித வாழ்வமைதியைப் பெறுவோம்.

பொய்மை யாளரின் பாட்டைவிட்டு
செம்பொருளாம் இறை புகழ் பாடுவோம்.

*செய்ய முடிந்தவன் சாதிக்கிறான். செய்ய முடியாதவன் போதிக்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பணி செய்பவர்கள் வினையை ஒழித்து பிறவிக் கடலை நீந்தி இறைவனடி சேர்வர்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

நாடொறும் சிவப்பணி செய்பவர்கள் வினையை நீக்கிப் பிறவிக்கடலைக் கடந்து இறைவனடி சேர்வரென்று வேதங்கள் கூறுகின்றன. இந்த உண்மையை உணரக்கூடிய தன்மை மானிடத்தில் மாத்திரம் உண்டு. ஏனைய ஓரறிவு தொடக்கம் ஐவறிவுள்ள உயிரினங் களுக்கு இந்த அறிவு இல்லை. எனவே மானிடப்பிறவி எடுத்த மானுடர்கள் அறத் தொண்டு களையும், சிவப்பணிகளையும் செய்து இறைவனடி சேரும் வாய்ப்பை இறைவன் அருளியுள்ளார்.

அரிய பிறவியை எடுத்த மானுடர்கள் அறப்பணி செய்யாது, மண் ஆசை, பொன் ஆசையில், பெண்ணாசையில் அகப்பட்டு சிவப்பணியை மறக்கின்றனர். இந்த ஆசைகள் நாம் இறக்கும்போது எம்முடன் வராதென்ற உண்மை நிலை உணராது இருக்கின்றனர். ஆசைகள் அற்றால் இறைவனடி சேரலாமென திருமூலர் "ஆசை அறுமின் ஆசை அறுமின்" என்று அருளியுள்ளார். தினமும் கோவில் சென்று வழிபட்டு வர ஆசைகள் அறுந்துவிடும் என்ற உண்மைப் பொருளை உணர்வார்கள். இறைவன் எம்மைப் படைத்து, காப்பவன். எண்ணியதை எண்ணியவாறு அருளுபவன் என்ற நல்ல சிந்தனை மனதில் உதிக்கும். எல்லோருக்கும் உதவிசெய்ய வேண்டுமென்ற மனப்பாங்கு பெருகும். கோவில்கள் கட்டவும், அறச்சாலைகள் கட்டவும் மனம் எண்ணங்கொள்ளும். தெய்வ சிந்தனையுடன் வாழுகின்ற மனிதனுக்கு, பஞ்சமாபாதகங்கள் களைந்து வாழ இறையருள் கூட்டும். பிறவியாகிய கடலை நீந்தி இறைவனடி சேர்வான் என்பது திண்ணம்.

சந்தான குரவர்களில் ஒருவரான உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயன் என்னும் நூலில்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்" என்று அருளியுள்ளார்.

ஆன்மாக்கள் வினைப்பயனை ஒழிப்பதற்கே பிறவி எடுக்கின்றனர். ஆன்மா செய்த வினைப்படி பிறவி கிடைக்கின்றது. மாணிக்கவாசகர் கூறியபடி "புல்லாகிப் பூடாய் புழுவாகி... எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என்று அருளியதை நாம் அறிவோம். கைலாயக் காட்சியைக் கண்டு களித்த அப்பர் சுவாமிகள். கைலாய திருத்தாண்டகத்தில்

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று இறைவன் படைப்பைக் கூறு கிறார். இறைவன் பல்வகைப்பட்ட உயிரினங் களைப் படைத்து, அவற்றின் தேவைகளுக்கு வேண்டியதையும் கொடுத்து வாழ வழிகாட்டி உள்ளார். எந்த உயிரும் உண்ண உணவு இல்லையென்று கவலைப்படத் தேவை இல்லை. ஒவ்வொரு உயிரினமும் வாழும் சூழலை உண்டாக்கிக் கொடுத்துள்ளார். இந்த உண்மையை, ஔவைப் பிராட்டியார் பிறந்த பொழுது தாயாகிய ஆதி விட்டுப் பிரியமுடி யாமல் மனம் வருந்தியபோது, குழந்தை யாகிய ஔவையார் "கல்லினுள் தேரைக்கும் கருப்பை அண்டத்துயிர்க்கு புல்லுணவு அளித் துக் காக்கும் கடவுள் எம்மையும் கைவிடு வானா? என்று அருளிய வார்த்தை கேட்டு ஆதி அவ்விடத்தை விட்டு நீங்கினாள். இறை வன் உயிர்கள் மேல் பற்றுடையவராக இருக்கின்றாரென்பதை, ஔவை பாடல் உணர்த்துகின்றது.

எங்கும் காற்றாய் கலந்திருக்கும் எம்பெருமான் அடியார்கள் அரிய செயல்கள் செய்ய அருள்புரிந்துள்ளார். சிறுத்தொண்டன் தனது ஒரே மகனை வெட்டி கறி சமைக்கும் மனஉறுதியை நாயனாருக்கு அருளியுள்ளார். அதுபோல் திண்ணனார் தனது கண்ணை இடந்து திருக்காளத்தி அப்பனுக்கு அப்ப மனத்திடத்தை அருளியுள்ளார்.

இறைவன் பக்குவம் உள்ள அடியார் களுக்கு பிறவிக்கடலைக் கடந்து, தன்னடி சேர அருளியுள்ளதை வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. இறைவன் சிவனடியார்களை யும் ஆட்கொள்ளும் பொருட்டு, வினைகளை நீக்க அப்பர் அடைந்த துயரங்கள் கூறமுடி யாதன. அறுபத்து மூன்று நாயன்மார்களும், வினைப்பயனை நீக்க அல்லற்பட்டு, துயர் அடைந்தனர். சண்டேஸ்வர நாயனார் வினைப் பயனை நீக்க மாடு மேய்த்து தந்தையின் காலை வெட்டி சண்டேஸ்வரர் எனும் பதத் தைப் பெற்று, வினை நீக்கியவராய் இறை பதம் அடைந்தார். கணம்புல்ல நாயனார் இறைவனுக்கு விளக்கேற்ற எண்ணெய் இல்லாமையினால் தனது தலை மயிரையே எரிக்கத் துணிந்தார். இளையான்குடி மாற நாயனாரை ஆட்கொள்ள விரும்பி நடுநிசியில் அவர் இல்லம் சென்று உணவு கேட்க, நாய னார் உணவு கொடுப்பதற்கு அன்று பகல் வயலில் விதைத்த நெல்லை வாரி எடுத்து வந்து, கீரைப் பயிர்களைக் கறியாக மனைவி சமைக்க, விறகு இல்லாமையினால் வீட்டுக் கூரையின் மரத்தை எடுத்து வந்து மனைவி யின் கையில் கொடுக்க, உணவு சமைத்து அன்பாக வழங்கினார். இதை உணர்ந்த இறை வன் இளையான்குடிமாறன் என்னும் நாமத் தையும் சூட்டி அருள்புரிந்து சென்றார். இப்படி எத்தனை நாயன்மார்களின் வினைப்பயனை ஒழித்து ஆட்கொண்டருளியமை இறையருள் அன்றோ?

இறைவன் ஆன்மாக்கள் மேல் அளவு கடந்த கருணையுள்ளவர் என்பதை அடியவர் கள் நன்கு அறிவர். திருநீலகண்டர் வீட்டுக்கு வேதியர் வேடத்தில் வந்த இறைவன் அடைக் கலமாகக் கொடுத்த ஓடு காணாமற் போய்விட் டது. திருநீலகண்டரிடம் கொடுத்த ஓட்டைக் கேட்க வந்த வேதியர் அது காணாமல் போன தால் மனைவியும் நீயும் கைபிடித்து சத்தியம் செய்து தரும்படி கேட்க, ஊடலோடு இருந்த இருவரும் கைப்பிடித்து, சத்தியம் செய்து கொடுத்து ஊடலை நீக்க வழி சமைத்த இறைவனின் அருளை யார் அறிவார்?

இறைபணி செய்து, வினைகள் நீக்கப் பெற்று, இறைவன் அடிசேர வைத்த அரு ளாளர்களை என்றும் போற்றித் துதிப்போம்.

*பிறந்துவிட்டோம் என்று வாழாதே, இனி பிறக்கப்போவதில்லை என்று நினைத்து வாழுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



கரணவாய் வடக்கு கொற்றாவத்தை உப்புக்கிணற்றடி அம்மன் ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக 130 குடும்பங்களுக்கு 1,50,000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை மாவட்டம் மொறவேவ பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 128 குடும்பங்களுக்கு தலா 3000 ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டது.



*அவசரமாகத் தவறு செய்வதைவிட தாமதமாகச் சரிவரச் செய்வதுமேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தம்பாட்டி கிராமத்தில் உள்ள 100 குடும்பங்களுக்கு உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டது.



*மனிதன் தோல்வியின் மூலமே புத்திசாலி ஆகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொட்டடி பிரதேச கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட 22 குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காங்கேசந்துறை 769 பயணிகள் சிற்றூர்திச் சேவை நடத்துனர், சாரதி சார்ந்த 72 குடும்பத்தினருக்கு 1,65,000 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.



வடமராட்சி தனியார் பஸ் சேவைச் சங்கத்தின் நடத்துனர், சாரதி சார்ந்த 102 குடும்பங்களுக்கு 2,10,000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் இடர்கால நற்பணிகள்

*12.07.2021 திங்கள்:*

கிழக்கு மாகாணம் - திருகோணமலை மாவட்டம், மொறவெவ பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஔவைநகர், பன்குளம் நொச்சிக்குளம் கிராமங்களில் வசிக்கும் 128 குடும்பங்களுக்கு தலா 3000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் ஆச்சிரம சுவாமி உட்பட அவர்தம் குழுவினரின் நேரடிக் கண்காணிப்பில் வழங்கப்பட்டது.

*14.07.2021 புதன்:*

ஊர்காவற்துறை பிரதேசச் செயலர் ஆளுகைக்குட்பட்ட தம்பாட்டி கிராமத்தில் உள்ள 100 குடும்பங்களுக்கு 3000. 00 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் தம்பாட்டி அரசினர் த.மி.க. பாடசாலையில் வைத்து பாடசாலை அதிபர் வில்லியம் சாந்தகுமார், ஆசிரியர் செந்தில்வேல் சமூகத் தொண்டர் இ. தயாபரன் மற்றும் ஆச்சிரம சுவாமிகளும் அவர்தம் தொண்டர்களும் நேரில் சென்று கையளித்தனர்.

*19.07.2021 திங்கள்:*

பண்டாரவளை கிரேக் தோட்டப் பகுதியில் கல்வி கற்கும் செல்வி R. சுவேத்தாவின் இணையத்தள கற்றல் செயற்பாட்டிற்காக ரூபா 25000. 00 ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி ஆச்சிரம சுவாமிகளால் வழங்கப்பட்டது.

*31.07. 2021 சனி:*

இலங்கை முதல் உதவிச் சங்கத்தைச் சார்ந்த முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் சார்ந்த இடங்களில் சேவை ஆற்றும் 22 தொண்டர்களுக்கு ரூபா 3000. 00 பெறுமதியான அத்தியாவசியமான உலர் உணவுப் பொருட்கள் விசுவமடு பிரமந்தனாறில் வைத்து ஆச்சிரம சுவாமிகளால் நேரில் சென்று வழங்கப்பட்டது.

*05.08.2021 வியாழன்:*

மஸ்கெலியா சாமிமலை கவரவில கொலனி எனும் இடத்தில் வசித்துவரும் திருமதி தி. மங்களரூபிணி ஆசிரியையின் கல்விமாணி கற்கை நெறிக்கான உதவித் தொகையாக ரூபா 25000. 00 வங்கிமூலம் வழங்கப்பட்டது.

*31.08.2021 செவ்வாய்:*

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் நிர்வாக ஆளுகைக்குட்பட்ட புன்னாலைக் கட்டுவன் வடக்கு கிராமத்தைச் சேர்ந்த 47 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு ரூபா 3000. 00 பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் இராவணா ச.ச. முன்றலில் வைத்து ஆச்சிரம சுவாமி உட்பட அவர்தம் குழுவினரால் நேரில் சென்று வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*01.09.2021 புதன்:*

திக்கம் - அல்வாய் வடமேற்கு மெதடிஸ் நகரில் வசித்துவரும் உதயகுமாரன் இந்திராதேவி என்பவரின் 18 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தினருக்கு ரூபா 20000. 00 பெறுமியான உலர் உணவுப் பொருட்கள் ஆச்சிரமத்தில் வைத்து சுவாமிகளால் வழங்கப்பட்டது.

*11.09.2021 சனி:*

கரணவாய் வடக்கு கொற்றாவத்தை உப்புக்கினற்றடி அம்மன் ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டதற்கமைவாக அச் சூழலில் வசிக்கும் 130 குடும்பத்தினருக்கு 1,65,000. 00 ரூபா பெறுமதியான அரிசி, மா, சீனி, பருப்பு, தேயிலை முதலிய பொருட்கள் ஆச்சிரம வாகனத் தில் நேரில் கொண்டுசென்று நிர்வாகத்தினரிடம் கையளித்து அம்மக்களுக்கு வழங்கப்பட்டது.

*13.09.2021 திங்கள்:*

கிளிநொச்சி செல்வாநகர் முருகன் ஆலயத்திற்கான பூசைப் பொருட்கள் வகையிலும் ஆலயத்தைப் பராமரிக்கும் குடும்பங்களின் தேவை கருதியும் ரூபா 60,000. 00 பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும் ஆலய நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

*21.09.2021 செவ்வாய்:*

தெல்லிப்பழை பிரதேச செயலர் நிர்வாக ஆளுகைக்குட்பட்ட 769 பயணிகள் சிற்றூர்தி சேவை உரிமையாளர்களின் வரையறுக்கப்பட்ட சங்கம் சார்ந்த சாரதிகள் நடத்துனர்களைச் சார்ந்த 72 குடும்பங்களுக்கு வழங்குவதற்காக 1,65,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டன.

*23.09.2021 வியாழன்:*

யாழ்ப்பாணம் கொட்டடி கிராமத்தைச் சேர்ந்த 22 குடும்பங்களுக்கு ரூபா 2500. 00 பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் கொட்டடி வைரவர் ஆலயப் பகுதியில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஆச்சிரம சுவாமிகளுடன் முன்னாள் மாநகரசபை உறுப்பினர் மு. தவநாதன் அவர்களும் திரு ந. ரமணப்பிரகாஸ் அவர்களும் கலந்து பொருட்களைக் கையளித்தனர்.

*26.09.2021 ஞாயிறு:*

வடமராட்சி கரவெட்டி தனியார் சிற்றூர்திச் சேவை சாரதி, நடத்துனர்களைச் சார்ந்த 102 குடும்பங்களுக்குரிய 2,10,000. 00 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைத்து சங்கம் சார்ந்தவர்களிடம் கையளிக்கப்பட்டது.

*27.09.2021 திங்கள்:*

பருத்தித்துறை வடமராட்சி வடக்கு 751 தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்க சாரதிகள், நடத்துனர்களைச் சேர்ந்த 48 குடும்பங்களுக்கு 1,10,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான பொருட்கள் சங்க நிர்வாகிகளிடம் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*28.09.2021 செவ்வாய்:*

வடமராட்சி தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் 759 (பருத்தித்துறை - கொடிகாமம்) சாரதிகள், நடத்துனர்களைச் சேர்ந்த 35 குடும்பங்களுக்கு 65,000. 00 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் சங்க நிர்வாகிகளிடம் ஆச்சிரமத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

*30.09.2021 வியாழன்:*

யாழ். கொட்டடி - சோலைபுரத்தைச் சேர்ந்த 22 குடும்பங்களுக்கான 2500. 00 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வில்லூன்றி பிள்ளையார் ஆலயத்தில் வைத்து ஆச்சிரம சுவாமிகள் அவருடன் இணைந்த தொண்டர்களினால் நேரில் சென்று கையளிக்கப்பட்டது.

கெக்கிறாவ களநேவ பிரதேசத்தில் உள்ள விநாயகர் ஆலயத்தின் பூசை வழிபாட்டிற்குரிய பொருட்கள் வாங்குவதற்கான நிதி 30,000. 00 ரூபா ஆலய நிர்வாகத்தினருக்கு வங்கிமூலம் இரு கட்டங்களாக வைப்பிலிடப்பட்டது.

வன்னேரிக்குளம் யோகர் சுவாமிகள் முதியோர் இல்லத்தில் வதியும் முதியோர்களுக்கான சீனி, பருப்பு நேரில் சென்று கையளிக்கப்பட்டது.

பதுளை சிறுவர் இல்லத்தின் கட்டிட கட்டுமானப் பணிக்காக சந்நிதியான் ஆச்சிரமத்தினால் 2,85,000. 00 ரூபா வங்கிமூலம் இரு கட்டங்களாக கையளிக்கப்பட்டு கட்டுமானப்பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

## ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்ட இச் சமூகப் பணிகளுக்கு ஆச்சிரமத்துடன் இணைந்து உதவி செய்தோர் விபரம்

| | |
|---|---|
| திரு சதாசிவமூர்த்தி குடும்பம் | கனடா |
| ஞானரூபி | கைதடி |
| அமரர் நல்லையா ஞாபகார்த்தமாக குடும்பத்தினர் | கோண்டாவில் |
| திரு கனகசபேசன் | கனடா |
| செ. பரமேஸ்வரன் அதிபர்மூலம் | |
| திரு தயாளன் வசந்தா பிறந்தநாள் நினைவாக | லண்டன் |
| கா. கைலைநாதன் ஆசிரியர் | மானிப்பாய் |
| செல்வி அ. கந்தையா ரீச்சர் | யாழ்ப்பாணம் |
| இ. தயாபரன் | கொழும்பு |
| திரு நரேன் | அவுஸ்திரேலியா |
| திரு விஜய சுரேஸ் | சுவிஸ் |
| திரு யோகநாதன் | அவுஸ்திரேலியா |
| திரு குருபரன் | கனடா |
| திரு இனியதாஸ்மூலம் | அவுஸ்திரேலியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்

– திரு. இராசையா ஸ்ரீதரன் அவர்கள் –

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான இறைவன் அருளால் நாம் இந்தப் புவியில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்திருக்கும் நாம் உண்மையிலேயே பெரும் பாக்கியசாலிகளே!

இப்பிறவியை எமக்குத் தந்தருளிய இறைவனுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம். நன்றி மறந்து நடப்பது மனிதப்பண்பாகாது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு" என்பது வள்ளுவர் வாக்கு.

ஆகவே, நாங்கள் நன்றியோடு வாழப் பழகிக்கொள்ள வேண்டும். ஒருவர் செய்த உதவியை ஒருபோதும் மறக்கக் கூடாது. நாம் மற்றவர்களுக்கு உதவி செய்யாது விட்டாலும் உபத்திரவம் செய்யக்கூடாது.

இப்படி எவ்வளவோ விடயங்கள் இருக்கின்றன. மனித வாழ்வில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் உண்மை, நேர்மை, நீதி, நியாயம் என்று இருப்பதுபோல கைக் கொள்ளக் கூடாதவைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" இவ்வாறு கேட்கின்றார் இராமலிங்க அடிகளார். இந்த அழகான அற்புதமான வரிகளிலே எவ்வளவு உண்மை பொதிந்து கிடக்கிறது தெரியுமா?

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் உத்தமர்களாக வாழவேண்டும். மனித உருவில் இருந்துகொண்டு மிருகம்போல வாழக்கூடாது. எங்களுடைய அப்பா, அம்மா, தம்பி, தங்கை, அக்கா, அண்ணா, தாத்தா, பாட்டி என்று எல்லோரிடமும் உண்மையான அன்பு காட்ட வேண்டும். நுனி நாக்கிலே ஒன்றும் உள்மனதில் ஒன்றுமாக நடந்து கொள்ளக்கூடாது. இது மிகவும் முக்கியம்.

உலக வாழ்க்கையிலே கொஞ்சக் காலம்தான் நாம் வாழப் போகின்றோம். "காதற்ற ஊசியும் வாராது காண் உன் கடைவழிக்கே" என்பது பட்டினத்தார் கூற்று. இதை நாம் மனதிலே பசுமரத்தாணிபோலப் பதிந்து கொள்ள வேண்டும்.

பொய் சொல்லக்கூடாது என்று படித்துவிட்டுப் பொய் சொல்லித் திரியக்கூடாது. படித்தபடி நடக்கவேண்டும். நெற்றியிலே பூசும் நீறுபோல உள்ளமும் வெள்ளையாக இருக்க வேண்டும். எமது சைவ நாயன்மார்கள் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்துகாட்டிப் போயிருக்கிறார்கள். நமது முன்னோர்கள் நல்லது எது? தீயது எது? என்று சொல்லி வைத்திருக் கின்றார்கள். அதன்படியே நாங்களும் எமது வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்ளத் தவறக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவுகலவாமை வேண்டும் என்று கேட்டவர் நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும் என்றும் கேட்கின்றார். இப்போது நாம் அவதிப்படுகின்ற கொடிய நோயான கொரோனா எப்படி வந்தது? நாம் செய்த பாவ வினைதான். "தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான்" இதிலிருந்து இம்மியளவும் நாம் தப்ப முடியாது. ஆதலால் நாங்கள் உண்மையாக வாழவேண்டும். மற்றவர் மனம் புண்படும்படி பேசக்கூடாது. மனைவிக்குப் பிடிக்காததைக் கணவர் செய்யக்கூடாது. அண்ணாவுக்குப் பிடிக்காததை தம்பி, தங்கைகள் செய்யக் கூடாது. கடவுள்மீதும் வசைபாடக் கூடாது. மனச்சாட்சிப்படிதான் நடக்க வேண்டும். கோபமும் கூடாது. நிம்மதியாக வாழவேண்டுமாயின் இறைவன்மீது உண்மையான பக்தி கொள்ள வேண்டும். இப்படி வாழ்ந்து பாருங்கள். உலகில் நீதிமன்றமே தேவையில்லை.

## குடும்பியானார் நாரதர்

ஒருமுறை கண்ணனை வழிபட்ட நாரதர், "கண்ணா! உன் மாயை ஆற்றல் வாய்ந்தது என்கிறார்கள். அனைத்தும் உணர்ந்த பிரும்ம ஞானியாகிய என்னை மாயை என்ன செய்யும்?" என்று பெருமை பேசினார். "நாரதா! அந்தப் பொய்கையில் சென்று நீராடிவிட்டு வா. பிறகு பேசுவோம்" என்றார் கண்ணன்.

தன் கையிலிருந்த வீணையைக் கரையில் வைத்துவிட்டுப் பொய்கையில் மூழ்கி எழுந்தார் நாரதர். அவ்வளவுதான். அழகிய பெண்ணாக அவர் மாறி இருந்தார். தான் யார் என்பதையே அவர் மறந்துவிட்டார். அப்பொழுது அந்த வழியாகக் குதிரையில் வந்த அரசன் ஒருவன் அந்தப் பெண்ணைப் பார்த்தான். அவள் அழகில் மயங்கிய அவன், "என்னைத் திருமணம் செய்துகொள்கிறாயா?" என்று கேட்டான். அவனை ஓரக் கண்ணால் பார்த்த அவள் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். இருவருக்கும் திருமணம் நடந்தது. அரண்மனையில் சீரும் சிறப்புமாக இருந்த அவளுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. திடீரென்று எதிரி நாட்டு அரசன் அந்த நாட்டின்மீது படையெடுத்து வந்தான். போர்க்களத்தில் அவளின் கணவன் கொல்லப்பட்டான். அவளிடம் ஓடிவந்த வீரர்கள், "அரசியாரே! நம் அரசர் கொல்லப்பட்டு விட்டார். எதிரிப் படை எப்பொழுது வேண்டுமானாலும் அரண்மனைக்குள் வரலாம் நீங்கள் குழந்தைகளை அழைத்துக் கொண்டு காட்டிற்குத் தப்பிச் சென்று விடுங்கள்" என்றார்கள்.

உயிர்பிழைக்கக் கருதிய அவள் தன் இரண்டு குழந்தைகளையும் தூக்கிக்கொண்டு காட்டிற்கு ஓடி வந்தாள். எதிரி வீரர்கள் அவளைத் துரத்தி வந்தார்கள். குழந்தைகளைப் போட்டுவிட்டுக் கல்லிலும் முள்ளிலும் ஓடினாள் அவள். வீரர்கள் துரத்தி வரும் ஓசை இப்பொழுது அவளுக்குக் கேட்கவில்லை. தான் தப்பிவிட்டதை உணர்ந்தாள். "கணவரை இழந்துவிட்டேன். குழந்தைகளைப் பறிகொடுத்துவிட்டேன். என்னை ஆதரிப்பார் யாரும் இல்லை. பசியாலும் தாகத்தாலும் துடிக்கிறேன். என்ன வாழ்க்கை இது?" என்று அழுது புலம்பினாள் அவள். நடந்ததை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த கண்ணன் அந்தப் பெண்ணிற்குப் பழைய வடிவத்தைத் தர நினைத்தார். கிழவனாக மாறி அவள் எதிரில் வந்தார். "பெண்ணே! அந்தப் பொய்கையில் நீராடிவிட்டு வா. உனக்கு நலமே விளையும்" என்றார். அவளும் அப்படியே செய்தாள். மூழ்கி எழுந்ததும் அவள் நாரதராக ஆனாள். கரையேறிய நாரதர் வீணையை எடுத்துக்கொண்டு கண்ணனிடம் வந்தார். நடந்ததை எல்லாம் அவர்க்கு உணர்த்திய கண்ணன், "இப்பொழுது மாயையின் ஆற்றல் உமக்குப் புரிந்ததா?" என்று கேட்டார். "என் தற்பெருமைக்கு என்னை மன்னியுங்கள்" என்று வேண்டினார் நாரதர்.

*இந்த உலகம் உன்னைத் திரும்பிப்பார்க்க வேண்டுமென்றால் நீ யாரையும் திரும்பிப்பார்க்காதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக்குருக்களவர்களின் ஆளுமை அடையாளங்கள் குருக்களின் "என் சரிதம்" நூலினை முன்வைத்து சில குறிப்புக்கள்

– திரு கௌ. சித்தாந்தன் அவர்கள் –

உலகநாடுகள், பாரதம் மற்றும் தமிழகம் என்பனவற்றுடன் ஒப்பிடுகின்றபோது ஈழத்திலே வாழ்க்கை வரலாற்று நூல்கள் மிகமிகக் குறைவாகவே தோன்றியிருக்கின்றன என்பது மறுக்கப்பட முடியாதது. தமிழகத்திலே "வாழ்க்கை வரலாற்றிலக்கிய ஆய்வு" முயற்சிகள் நான்கு அல்லது ஐந்து தசாப்தங்களுக்கு முன்பே தோன்றி வளர்ந்துள்ளன. இலங்கையில் இவ்வாறில்லை. ஜவகர்லால் நேரு, மகாத்மா காந்தி, வ.உ.சி., திரு.வி.க., உ.வே.சா. போன்றோரால் எழுதப்பெற்ற வாழ்க்கைச் சரித நூல்கள் இலகுவான முறையிலே பலரது வாழ்க்கையிலே திருப்பங்களையும் முன்னேற்றங்களையும் உண்டு பண்ணியிருக்கின்றன. 1996ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரம் தமிழ்ப்பாடக் கலைத்திட்டத்திலே, டாக்டர் உ.வே. சாமிநாதையர் (1855-1942) அவர்களுடைய "என் சரித்திரம்" எனும் நூலில் இருந்து "ஆசிரியரை அடைந்தது" எனும் பகுதி போடப்பட்டிருந்தமை அறிவு பூர்வமான செயற்பாடே. கிட்டத்தட்ட கைலாசநாதக் குருக்களவர்களின் காலத்தவரான இரசிகமணி கனக செந்திநாதன் (1916-1977) தமது வாழ்வின் பிற்காலத்திலே தமது சரிதத்தை "என் கதை பாலைவனமும் பசுஞ் சோலையும்" எனும் தலைப்பில் எழுதினார். அதனை அவரால் நூல் வடிவிலே பார்க்கமுடியவில்லை. அவர் மறைந்து 31ஆம் நாள் அந் நூல் வெளிவந்தது. அறிஞர் க.சி குலரத்தினம் (1916-1994) அவர்களால் படர்க்கை நிலை நின்று எழுதப்பட்ட "க.சி. குலரத்தினம் வாழ்க்கைக் குறிப்பும் வளமான பணியும்" என்பது கையெழுத்துப் பிரதியாகவே யாழ் பல்கலைக் கழக நூலகத்திலே இருக்கிறது. எமது பேராசிரியர் குருக்களவர்களது "என் சரிதம்" நூலும் அவரது வாழ்வின் பிற்காலத்திலேதான் எழுதப்பெற்று அவர் காலமாகி இரண்டரை மாதங்களின் பின் (22.10.2000) அழகிய நூலாக வெளிவந்தது. இ·து நாம் செய்த தவப்பயன் என்றுதான் கூறத் தோன்றுகின்றது. நூல் வடிவில் வெளிவரக் காரணமான பேராசிரியரின் புத்திரரான பிரம்மஸ்ரீ கை. ஸ்ரீதர சர்மா (அமரர் 2021) மற்றும் பேராசிரியரின் மாணவர்களாகிய ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மா, ச. பத்மநாபன் ஆகியோரும் பாராட்டுக்குரியவர்களாவர்.

"வாழ்க்கை வரலாற்று நூல்கள் எத்தனையோ அதன் வகைகளும் அத்தனை" என்று "கலையருவி கணபதிப்பிள்ளை சில நினைவுகள்" என்ற நூலின் அணிந்துரையில் கலாநிதி க. கைலாசபதி குறிப்பிட்டுள்ளார். குருக்கள் தமது "என் சரிதம்" எனும் நூலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Autobiography என்றவாறாகத் தான் ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்தியிருந்தார். பண்டித மணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் உ.வே. சாமிநாதையரின் "என் சரித்திரம்" எனும் நூலைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, அந்த நூல் "மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் சரித்திரம்" என்று தான் சேற்றூர் அருணாசலக்கவிராயரின் "ஆறுமுகநாவலர் சரித்திரம்" நூலின் முகவுரையில் குறிப்பிட்டார். இப்படியாகத் தமது ஆசிரியரைப் பற்றி அவரின் மாணவர் "தான்கலந்து" எழுதியது போன்றதன்று குருக்கள் எழுதிய சரிதம்நூல். என் சரிதம் நூலின், பதிப்பாசிரியர்கள் குறிப்பிட்டதுபோன்று "இது வேறொருவர் எழுதும் வாழ்க்கை வரலாற்றை விட பூரணமான பல அம்சங்களைக் கொண்டு விளங்கும் என்பதைத் தெளிவாக விளக்குகின்றது".

வேட்டி, நஷனல், சால்வை, தலைப்பாகை என்பனவற்றுடன் நாற்காலியில் இருந்தபடியான முகமலர்ச்சியுடன் எடுப்பான இளமைக் காலத் தோற்றமும் அரையில் கட்டிய வேட்டி சால்வையுடன் மேலங்கியின்றி, அந்தண சிவாச்சாரியர்க்குரிய பூணூல், வெண்ணீறு நெற்றித்திலகம், உருத்திராட்ச மாலை என்பன அணிந்தவாறு தரையிலே அமர்ந்திருக்கின்ற கனிவான முதுமைக்காலத் தோற்றமும் முறையே கீழும் மேலுமாகக் கொண்ட குருக்களின் நிழற்படங்கள் என் சரிதம் நூலின் முகப்பு அட்டையினை அலங்கரிக்கின்றன.

என் சரிதம் நூலானது சூழல், குடும்ப வரலாறு, தந்தை, பாலப்பருவம், ஆரம்பக் கல்வி, கல்லூரிக்கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, பல்கலைக்கழக உத்தியோகம் (யாழ்ப்பாணம்), சமய ஈடுபாடு, ஓய்வு (யாழ்ப்பாணத்தில்), ஓய்வு (கொழும்பில்), ஓய்வு (அவுஸ்திரேலியாவில்), அவுஸ்திரேலியா நிரந்தர வாசம் (முதல் உலகச் சுற்றுலா), அவுஸ்திரேலியா குடியுரிமை (முதல் ஐரோப்பிய சுற்றுலா, மனைவி மறைவு), அவுஸ்திரேலியா-அமைதி வாழ்க்கை என்றவாறு பதினாறு உள்ளடக்கங்களைக் கொண்டதாய் 129 பக்கங்களில் நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தான வெளியீடாக வெளிவந்தது.

நல்லூர் கார்த்திகேயக் குருக்கள் (1876-1942), முன்னேஸ்வரம் சுந்தரம்மா (1906-1942) தம்பதிக்குப் புத்திரராக 15.8.1921இல் அவதரித்த குருக்களவர்கள் மரபு ரீதியான சம்ஸ்கிருத மொழியிலக்கிய புலமைத்துவக் கல்வியினையும் நவீன கல்வியினையும் ஒருங்கே கற்ற சிறப்புக்குரியவர். தமது தந்தையாரிடமும் தியாகராஜ ஐயரவர்களிடமும் சமஸ்கிருத ஆரம்பக்கல்வியை முறைப்படி கற்றவர். சுன்னாகம் சிதம்பர சாஸ்திரிகளிடம் வேதமந்திரங்கள், உபநிடதங்கள் பயின்றார். வியாகரணசிரோமணி தி.கி. சீதாராமசாஸ்திரிகள் (1912-1988) அவர்களிடமும் சம்ஸ்கிருதம் பயின்றவர். ஆரம்பக்கல்வியை நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் பயின்ற இவர் தொடர்ந்து யாழ் பரமேஸ்வரக் கல்லூரியில் பயின்றார். பரமேஸ்வராவில் அ.செ. சுந்தரராஜன், சிவபாதசுந்தரம், க.சு.நவநீதகிருஷ்ண பாரதியார் (1880-1954) ஆறுமுகம் மஹோ உபாத்தியாயர் என்போரிடமும் முறையே ஆங்கிலம், தமிழ், லத்தீன், சமஸ்கிருதம் பயின்று எதிர்காலக்கல்வி முன்னேற்றத்திற்கான நல்ல அத்திபாரத்தைப் பெற்றுக் கொண்டார். பல்கலைக்கழக புகுமுக வகுப்பிலும் சித்திபெற்று 1944இல் இலங்கைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி அங்கே தொடக்கத்திலே சம்ஸ்கிருதம், தமிழ், பாளி ஆகிய மூன்று பாடங்களைத் தேர்ந்தெடுத்துப் பின் சம்ஸ்கிருத பாடத்தைச் சிறப்பாகக் கற்று, இரண்டாம் வகுப்பிலே உயர்நிலை சித்தி பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்களுக்கு சம்ஸ்கிருத பாடத்தினைக் கற்பித்தவர்களில் பேராசிரியர் பெற்றி ஹைமன் என்பவர் மிகவும் குறிப்பிடத்தக்க ஒருவர். என்சரிதம் நூலைப் படிக்கின்றபோது, இவரின் ஆதர்ஷ குரு Dr. (Miss) Betty Heiman அவர்கள்தான் என்பது தெரிகிறது. இவரை அடுத்து டாக்டர் ஓ.எச்.டீ.ஏ விஜயசேகரா அவர்கள் குறிப்பிடப்படுகிறார். பாளியினை பேராசிரியர் மலலசேகரா அவர்களும் தமிழ்ப் பேராசிரியர்களான சுவாமி விபுலானந்தர், (1892-1947), க. கணபதிப்பிள்ளை(1902-1968) ஆகியோரும் மெய்யியலை மூர்த்தி அவர்களும் ஆங்கில பாடத்தைப் பேராசிரியர் Ludowike அவர்களும் சரித்திர பாடத்தை H.C.ராய் அவர்களும் ரத்ன சூரியா அவர்களும் கற்பித்தனர். பல்கலைக்கழகப் படிப்பினை முடித்து, 1953 ஆம் ஆண்டு வரை தாம் கற்ற பல்கலைக் கழகத்திலேயே சம்ஸ்கிருத பாட தற்காலிக உதவி விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1953இல் இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனையில் சமஸ்கிருத பாடநிரந்தர விரிவுரையாளராக 1974 வரை இங்கே பணியாற்றினார். இதற்கிடையில் இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பிலே சம்ஸ்கிருதத்திலே முதுகலைமாணிப்பட்டமும் பெற்று 1955, 1956 ஆகிய ஈராண்டுகள் இந்தியாவின் பூனே (Poona) பல்கலைக்கழகத்திலே பேராசிரியர் ஆர்.என். தண்டேகாரின் மேற்பார்வையிலே, "இதிகாசங்களிலும் புராணங்களிலும் காணப்படும் சைவமும், தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள கோவில்களில் நிகழும் ஆகமம் சார் வழிபாட்டு முறைகளும்" எனும் நீட்சியான தலைப்பிலே இரண்டு பாகங்கள் கொண்டதான ஆய்வினைச் சமர்ப்பித்து, கலாநிதிப் பட்டம் பெற்று இரண்டாந்தர விரிவுரையாளராகப் பதவிநிலை உயர்வு பெற்றார். 1961இல் பல்கலைக்கழகத்திலே பொதுச் சிறப்புப் பட்டங்களுக்கான பாடங்களை சுயபாஷையிலே கற்கும் வாய்ப்பு ஏற்பட்டமையால் சம்ஸ்கிருதத்தை தமிழிலே கற்கும் பிரிவுக்கு விரிவுரையாளர் கோ. சுந்தரமூர்த்தி M.A. அவர்களைத் துணைக்கொண்டு கற்பித்தார்.

1974இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகம் ஆரம்பிக்கப்பட்டபோது பேராசிரியர் க.கைலாசபதி (1933-1982) அதன் தலைவராக இருந்தவேளை குருக்களும் இங்கே வந்து 1975இல் மொழிகள் மற்றும் கலாசாரக் கற்கை நெறியின் பதில் தலைவராகப் பணியாற்றினார். அதன் பின்னர்தான் அவ்வாண்டு இந்துநாகரிகத்துறை தொடங்கப்பட்டபோது அதன் முதல் தலைவராகவும் பேராசிரியராகவும் விளங்கினார். இந்துநாகரிகம் பொது மற்றும் விசேட வகுப்புக்கள், இந்து நாகரிக டிப்ளோமா கற்கை, முதுகலைமாணி என்பனவற்றுக்கான பாடத்திட்டங்களைத் தலைமையேற்று தயாரித்துதவினார். இந்து நாகரிகம் சிறப்பு, முதுகலைமாணி, கலாநிதிப் பட்டம் என்பனவற்றை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே முதன் முதலாக குருக்களின் தலைமையிலேயே அவரின் மாணவர்கள் பெற்றனர். இந்துநாகரிகத்துறையுடன் நுண் கலைத்துறையினையும் பல்வேறு நெருக்கடிகள், வசதியீனங்கள் மத்தியில் வளர்த்துவிட்ட பெருமை குருக்களுக்கேயுரியது. துறைகளின் தலைவர் என்பதற்கு மேலாக மனிதப் பண்பியல், கலை ஆகியவற்றின் பீடாதிபதியாகவும் பல்லாண்டுகள் குருக்கள் பணியாற்றினார். பல்கலைக்கழகப் பணிகளுடன் பல உலக இந்து மகா நாடுகளிலும் பங்குபற்றி ஆய்வுரைகளை நிகழ்த்தியதுடன் மகாநாட்டின் பல அரங்குகளுக்கும் தலைமை தாங்கி நடத்தினார். இவ்வகையில் 1976இல் சென்னையிலே நடைபெற்ற அனைத்துலக இந்து மகா நாடு, 1977இல் பேராசிரியர் ரி.எம்.பி. மகாதேவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையில் மலேசியாவில் நடைபெற்ற உலக இந்து மகாநாடு என்பன குறிப்பிடத் தக்கன. "சிவாகமபானு", "வேதாகமமாணி" எனும் பெரும் விருதுகள் பெற்ற குருக்களவர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள சைவாலயங்களிலே கும்பாபிஷேகம், நவராத்திரி முதலான நைமித்திகக் கிரியைகளை உரிய முறைப்படி நிகழ்த்தினார். (முன்னேஸ்வரத்திலே வசந்த நவராத்திரியின் போது வடிவழகிக்குக் குருக்களால் ஆற்றப் படும் அபிடேகம் வெறும் விக்கிரகத்திற்கான தாக இருக்காதென்பர்.

தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம், இலத்தீன், பாளி போன்ற பன்மொழிகளில் பாண்டித்தியமுடைய குருக்களவர்கள் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்திலே 1986இல் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் (1924-1989) உபவேந்தராக இருந்தபோது ஓய்வு பெற்றார். 1998ஆம் ஆண்டு யாழ் பல் கலைக்கழகப் பொதுப்பட்டமளிப்பு விழாவில் இவருக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டமையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வாழ்நாட் பேராசிரியர் தகைமை இவருக்குக் கிடைத்ததும் இவரது அருஞ்சேவைகளுக்கான வெகுமதிகளே எனலாம். இதற்கு முன்னதாக இவருக்கு யாழ் வைத்தீஸ்வரக் கல்லூரியிலும் கொழும்பிலும் மணிவிழா எடுக்கப்பட்டது. குருக்கள் தம் வாழ்வின் நாளின் உயர்பேறாகக் கருதுவது காஞ்சிப் பெரியவரால் பொன்னாடை போர்த் திக் கௌரவிக்கப்பட்டமையினையாம்.

புலனழுக்கற்ற அந்தணரான குருக் களவர்களின் வாழ்நாள் உழைப்பினால் அவர் நாமத்தை என்றும் நினைவுபடுத்துவதிலே அவரது மாணவர்கள், அவரது நூல்கள் மற்றும் கட்டுரைகள் அவரது குடும்பம் குறிப் பாக அவரது பிள்ளைகள் மூன்றினுக்கும் முக்கியமான இடமுண்டு. குருக்கள் முப்பத்தி ஐந்து ஆண்டுகளுக்குமேல் பல்கலைக்கழகத் திலே பணியாற்றியமையாலும் குருகுலங் களும் நடத்தியமையாலும் ஏராளமான மாண வர்கள் அவருக்குள்ளனரெனினும் நூலை எழுதிய வேளையில் குருக்களின் நினைவில் நின்ற நன்மாணாக்கர்களாக பேராசிரியர்கள் வி. சிவசாமி (1933-2014), சி. பத்மநாதன், ப. கோபாலகிருஷ்ணன், அ. சண்முகதாஸ், சி.க. சிற்றம்பலம், நா. சுப்பிரமணியன், மா. வேதநாதன் மற்றும் மகேஸ்வரி அருட் செல்வம், விஜயலஷ்மி சிவச்சந்திரன், ப. கணேசலிங்கம், பத்தினியம்மா, யோகேஸ் வரி சிவப்பிரகாசம், சர்வேஸ்வரன் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். தலைசிறந்த மாண வராகவும் அபிமானியாகவும் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்களைக் கூறுகின்றார். இவர்களிலே பேராசிரியர்களான ப. கோபாலகிருஷ்ணன், அ. சண்முகதாஸ், வி. சிவசாமி, மா. வேதநாதன் மற்றும் கிருஷ்ணா னந்தன், சுந்தரேஸ்வரன், மோகன் உள்ளிட்ட அவரின் தலைசிறந்த மாணாக்கர்கள் குருக் களிற்கு ஒரு வாழ்த்து மலர் (Felicitation) ஒன்றினை வெளியிட இருப்பது தொடர்பாக வும் எழுதியுள்ளார். இதன்படி குருக்கள் கால மாகிய பின்பு "கைலாசநாதம்" எனும் பெயரில் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர் களை பதிப்பாசிரியராகக்கொண்டு கனமான பவளவிழா மலர் (30.08.2000) ஒன்று வெளி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(தொடரும்..

---

*நாம் அடுத்தவரை மன்னித்தால் கடவுள் நம்மை மன்னிக்கிறார். அடுத்தவர் தவறை மன்னித்து, மறப்பதுடன், அவரை நேசிக்கவும் செய்தோமெனில் இறைவனின் அருட்கொடைக்குப் பாத்திரராவோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கயிலாயக் காட்சியைக் கண்ட நக்கீரர்

– திரு வி. செல்வரத்தினம் அவர்கள் –

நக்கீரர் மதுரைப் பதியிலே சங்கப் புலவரில் ஒருவராக விளங்கியவர். இவர் மதுரைக் கணக்காயர் மகன் ஆவார்.

ஒரு பாண்டிய அரசன் தனது மனைவியின் கூந்தலில் வாசம் உண்டோ இல்லையோ என்று தெளிவுபடுத்திக் கவிபாட ஆயிரம் தங்கம் கொடுப்பேன் என்றார்.

அரசவையில் பாண்டிய மன்னனும் மண்டபத்தில் மற்றப் புலவர்களும் அமர்ந்திருக்கிறார்கள். சிவபெருமான் தருமி என்பவருக்கு ஒரு பாடலை எழுதிக் கொடுத்தார். அதனைச் சபையில் தருமி வாசித்தபோது, அரசன் இப் பாடல் சரியெனக் கூறி அப் பொன்னைத் தருமிக்குக் கொடுக்க முற்படும்போது, சபையிலிருந்த நக்கீரதேவர் தடுத்து அப்பாடலில் குற்றமுள்ளது. பொன்னை தருமிக்குக் கொடுக்க வேண்டாம் என்று கூறினார். இதனைக் கேட்ட தருமி மனக்கவலையுடன் திரும்பவும் சுவாமி சந்நிதி சென்று அரசவையில் நிகழ்ந்ததை மறுபடியும் விண்ணப்பித்தார்.

உடனே எம்பெருமானே சபையில் எழுந்தருளிப் பாடலுக்குக் குற்றம் சுமத்தியது யார் என்று கேட்டார். உடனே நக்கீரர் எழுந்து, "உமது பாடலில் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டு என்று சொல்கிறீர். அதனை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்" என்றார். அப்போது இறைவன் தனது நெற்றிக் கண்ணைக் காட்டினார். அதற்கு நக்கீரர், "நீங்கள் நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" என்று கூறினார். இறைவன், "அப்படியா! இதோ என் நெற்றிக் கண்ணின் வெப்பத்தைப் பார்" என்றார். சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்ட வெப்பம் நக்கீரரைத் தாக்கியது. அதனால் அவரது உடலில் நெருப்புப் பற்றி எரிவதுபோன்ற துன்பத்தை அனுபவித்தார். அத்தோடு அவருக்குத் தொழுநோயும் ஏற்பட்டது. உடலில் வெப்பம் தணிவதற்காக நக்கீரர் மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலுள்ள பொற்றாமரைக் குளத்தில் வீழ்ந்தார். அப்போதுதான் அவருக்குச் சிவபெருமானின் கருணையால் நல்லறிவு ஏற்பட்டது.

மதுரை தமிழ்ச் சங்கப் புலவர்கள் நக்கீரருக்கு அருள்புரியும்படி சோமசுந்தரக் கடவுளிடம் பிரார்த்தனை செய்தனர். அவர்களின் பிரார்த்தனைக்கிணங்க நக்கீரருக்கு இறைவன் காட்சி கொடுத்தார்.

உடனே நக்கீரர், "சிவசங்கரா! சோமசுந்தரப் பெருமானே! என்னை மன்னியுங்கள்!! என்னைத் தொழுநோயிலிருந்து விடுவித்து அருள்புரியுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். அப்போது இறைவன், "நக்கீரா! நீ எனது கயிலைத் தரிசனம் பெற்றபின் உனது தொழுநோய் நீங்கும்" என்றார்.

சிவபெருமான் கூறியபடியே கயிலையைத் தரிசிக்கும் பொருட்டு நக்கீரர் மதுரையிலிருந்து புறப்பட்டார். அவர் போகும் வழியில் திருப்பரங்குன்றத்தில் திருமுருகனை வணங்கி, "திருமுருகாற்றுப்படை" எனும் நூலை இயற்றினார்.

"ஆறுமுகப்பெருமானே! தொழுநோயால் நான் பெரிதும் வருந்திக்கொண்டிருக்கிறேன். இந்த நோயை நீக்கி எனக்கு அருள்புரி" என்று முருகனிடம் அவர் மன்றாடினார்.

அதற்கு முருகன், "புலவரே உங்களுடைய பாவச் செயலின் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு இப்போது இந்தத் தொழுநோய் ஏற்பட்டுள்ளது. கயிலைக் காட்சிதான் உங்களுக்குச் சாபவிமோசனம் தந்து உங்கள் தொழுநோயைத் தீர்க்கும். கயிலைத் தரிசனத்தால் உங்கள் நோய் நீங்கும்" என்று சிவபெருமான் வழங்கிய தீர்ப்பை என்னால் மாற்ற இயலாது. எனினும் நீங்கள் கயிலையை நோக்கிப் பாதி தூரம் நடந்தால், உங்களை நோக்கிக் கயிலை பாதி தூரம் வருமாறு நான் அருள் செய்கிறேன்" என்றார்.

உடனே நக்கீரர் திருப்பரங்குன்றத்திலிருந்து புறப்பட்டு வழியில் பழநி, திருவாரூர், சுவாமிமலை, சிதம்பரம், விருத்தாசலம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருத்தணி போன்ற இன்னும் பல திருத்தலங்களுக்குச் சென்று ஆலய வழிபாடு செய்தார்.

முருகன் அருளாலும் பார்வதி - பரமேஸ்வரனின் அருளாலும் நக்கீரருக்குக் கயிலையின் காட்சி கிடைப்பதற்குரிய நேரம் கசிந்துவரத் தொடங்கியது.

பின் நக்கீரர் திருக்காளத்தித் தலத்துக்குப் போய்ச் சேர்ந்தார். திருக்காளத்தியில் இறைவனும் இறைவியும் காளத்தீஸ்வரர் - ஞானபிரசூலாம்பிகை ஆகிய பெயர்களில் எழுந்தருளி அருள் புரிகிறார்கள்.

மேலும், நக்கீரருக்குத் தங்கள் "கயிலைக் காட்சியை" இங்கேயே தந்து அருள் புரியுங்கள் என அம்மை குறுக்கிட்டார். "நன்றாகச் சொல்கிறாய். இப்போதுதான் நக்கீரர் தன் உண்மை நிலையை உணர்ந்து விட்டான். இனி நாம் அவனுக்கு அருள் செய்வோம்" என்றார் ஈசன்.

நக்கீரர் திருக்காளத்தியை அடைந்தவுடன் அங்கே வீற்றிருக்கும் இறைவனையும் இறைவியையும் வழிபட்டார். அப்போது காளத்தீஸ்வரரும் ஞானபிரசூலாம்பிகையும் திருக்காளத்தியில் நக்கீரருக்குக் கயிலாய தரிசனம் வழங்கினார்கள். கயிலையின் தரிசனம் பெற்ற நக்கீரர் தாம் பெற்ற ஆன்மீக அனுபவத்தை, "கயிலை பாதி, காளத்தி பாதி அந்தாதி" எனும் நூலாகப் பாடினார்.

திருக்காளத்தியில் இறைவனும் இறைவியும் நக்கீரருக்குக் காட்சி தந்து, "என் தரிசனத்தால் உன் தொழுநோய் நீங்கியது. இனி நீ உன் வாழ்நாளை காளத்தியிலேயே தங்கித் தவத்தில் கழிப்பாயாக" என்றார்.

நக்கீரர் தனது எஞ்சிய வாழ்நாள் முழுவதும் காளத்தியில் சிவ தியானத்தில் ஈடுபட்டார். அங்கேயே அவர் முத்தி பெற்றார்.



அண்மையில் அமரத்துவமடைந்த பிரபல மிருதங்க வித்துவான் சதா வேல்மாறன் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்தம் நடைபெற்ற வெள்ளி நிகழ்வில் இலைமறைகாயாக இருந்த பல பாடகர்களை மேடையேற்றி அவர்களின் திறமைகளை வெளிக் கொணர்ந்தவர். அத்துடன் மாதம் ஒருமுறை இன்னிசை நிகழ்வை தொய்வில்லாமல் நாடாத்துவதற்கும் முன்னின்று உழைத்தவர்.

அன்னார் அமரத்துவமடைந்த செய்தி கேட்டு ஆற்றொணாத் துயர் அடைவதுடன் அவரது ஆத்மா சந்நிதி வேற்பெருமானது பாதார விந்தங்களில் அமைதி அடைய பிரார்த்திக்கின்றோம்.

*-சந்நிதியான் ஆச்சிரமம்-*

*ஊக்கமுள்ள மனிதன் தன் கடமையைச் செய்யத் தவறமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதிப் பதியை மறக்கிலேன்

சந்நிதிப் பதியை மறக்கிலேன்
மறப் பாரோடுங் கூடுகிலேன்
முந்தை யென்வினை விரைந்து போயிட
முந்தி யவனை நினைக்கிலேன்
பொன் னுமணியும் தங்கமும் வைரமும்
நினைப் பாரோடுங் கூடுகிலேன்
அன்னை யாதி பெற்றிட்ட செல்வன்
பாதம துபற்றிட மனமது கொண்டேன்.

யாதே என்றிட நிலையது கொடியது
வேணோர் பெற்றிட கொடியது நிலையது
மாதே பைங்கு வளையர் கையி லகப்பட்டு
தேடுவார் போல்தெ றிகெட் டலையாமல்
தீதே யென்று நினைவுகள் தந்திட வென்றிட
போகுவார் புகுவார் யென்றி வைமாழாமல்
காதே தூதுவர் கடன் வழி செல்லாமல்
புகுவேன் அவன் கழல் கண் டுநின் நினைவாக.

சோலை கள்மலர் சொரிய அதைத்
தேடியே வண்டினம் வந்துசேர
காலையில் மாலை நெய்ய வளை
மாதர் கள்கரம் பூ பறிக்க
சாலையில் மக்கள் கூட்டம் கந்தன் புகழ்
பாடியே நடை பயின்று வர
ஆலையம் தேடி யுன்னை ஆராதிக்க
அடியார்கள் வந்தநாளே திருநாள்.

விடைய துயேறியோன் வெண்
ணீற்று மேனி யோன்
படையது பூதங்கள் பரிவாரப்
பட்டாளங்கள் துணைவர
சடையது முடிமேல் பிறையது கரம்
உடுக் கைகொண்டோன்
மடையது வெள்ளமென பெருகும் கங்கை
உருவு டையான் தந்த முருகன்.

—பொ. பாலேஸ்வரன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: QD/146/NEWS/2021

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org